

பெண்மணி
நவம்பர் 2012
ரூ.23
தீபாவளி
மலர்
ஆர்.மணிமாலா
அனல் மேலே பனித்துளி

வைஷ்ணவி... வரிசையாய் மாட்டியிருந்த சாமிப்படங்களுக்கு... தொடுத்திருந்த சாமந்தியை நறுக்கி வைத்தாள்.

கண்களை கூசாத இளம்கதிர்கள் ஜன்னல் வழியே நுழைந்து செலவில்லாத வெளிச்சத்தைப் பரப்பியது.

முந்தின மழையின் மிச்சம் சொச்சமிருந்த ரம்மியமான காற்றும் ஆஜராக... ஏற்றியிருந்த குத்துவிளக்குகளின் தீபங்கள் நடனமாடின.

"பூங்கொடி... கொஞ்சம் ஜன்னலை சாத்திட்டுப் போயேன். விளக்கு ஆடுது..."

கையில் தூக்குடன் நகர்ந்த நாத்தனாரிடம் சொன்னாள்.

"சரி... அண்ணி... சீக்கிரம் பூஜைய முடிச்சிட்டு வந்துடுங்க... எல்லாரும் வர ஆரம்பிச்சாச்சு!"

"ரெண்டே நிமிஷம்... வந்திடறேன்... நீ ஹால்ல... குத்துவிளக்குல



# அனல் மேலே பனித்துளி!

– ஆர்.மணிமாலா

திரியும் என்னையும் போட்டு வச்சிட்டேன்!"

"கூடவே பன்னீர், சந்தனம், மஞ்சள், புஷ்பம் எல்லாமே எடுத்து வச்சிட்டேன்... நீங்க வந்ததும் ஆரம்பிச்சிடலாம்."

"இங்கே என்ன கதைப் பேசிட்டு இருக்கீங்க ரெண்டுபேரும்? அமுதினி மனையில உட்கார்ந்துட்டா!" உள்ளே நுழைந்த இந்திரா சற்றே கோபமாய் கேட்டாள்.

"வந்துட்டேன் அத்தை!" சாமிப்படங்களை கைத் தொட்டு வணங்கி விட்டு அவர்களுடன் வெளியே வந்தாள் வைஷ்ணவி.

"ஆனாலும் உனக்கு இவ்ளோ சுணக்கம் கூடாது வைஷ்ணவி. கொஞ்சம் சீக்கிரமா எழுந்திருந்தா எவ்வளவோ வேலையை முடிச்சிருக்கலாம்."

"நைட்டு எல்லா வேலையும் முடிச்சிட்டு படுக்கவே லேட்டாயிடுச்சு. காலைல அஞ்சு மணிக்கு எழுந்து வீடு துடைச்சு, வர்றவங்களுக்கு டிபன் ரெடி பண்ணி... எதுல குறை வச்சேன்!"

"ஆமா... எல்லாத்துக்கும் ஒரு பதிலை ரெடிப் பண்ணி வச்சுக்கோ. நாத்தனாருக்கு நலங்கு வைக்கணும். அஞ்சு மணிக்கு எழுந்துட்டேன்னு கூவறே!"

"வீடு நிறைய சொந்தக்காரங்க... முகம் சுளிக்காம சமைச்சுப் போடறேனா, இல்லையா?"

"அதானேப் பார்த்தேன். என் பெரிய பொண்ணு குடும்பத்தோட வந்துட்டாலே உன் முகம் சிறுத்துடுமே! அதுக்காக தங்கச்சி கல்யாணமாச்சே... வராம இருந்துட முடியுமா?"

"எதுக்கு எதை முடிச்சுப் போடறீங்க! எதை செஞ்சாலும் குறை சொல்றீங்களேன்னு சொன்னேன். எவ்வளவு வேலை செஞ்

சாலும் உங்க கண்ணும் நிறையாது, மனசும் திருப்தியாகாது!" வைஷ்ணவியின் கண்களில் ஈரம் படர்ந்தது.

இந்திரா பதைப்பும், ஆத்திரமுமாக அதட்டினாள்.

"அறிவில்லே உனக்கு? நல்ல காரியம் நடக்கப் போகிற நேரத்திலே கண் கலங்கறியே... என் பொண்ணு கல்யாணம்டி இது? உனக்கென்ன ஆச்சு? கொஞ்சம் கூட நல்ல எண்ணமே இருக்காதா? பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க?"

வைஷ்ணவி சூழ்நிலையை உணர்ந்து கண்களை புடவை தலைப்பின் நுனியால் ஒற்றியெடுத்தாள். மாமியாரிடம் மேற்கொண்டு எதையும் பேசாமல் நடந்தாள்.

ஹாலின் மத்தியில் நான்கு பெரிய குத்துவிளக்குகள் சுடர்விட்டு எரிய... மூன்று பக்கமும் பூச்சரத்தால் வேலி கட்டப்பட்டு... நடுவில் மணையில் அமர்ந்திருந்தாள் அமுதினி! பெயரைப் போன்றே அழகானவள். முகம் துடைத்து வைத்த வெள்ளித்தட்டைப் போல பளிச்சென்றிருந்தது. அதில் சிறுசலனமும் இல்லை.

ஹால் முழுக்க உறவுக்காரர்களும், அக்கம் பக்கத்து பெண்களும் நிறைந்திருக்க...

"நல்லநேரம் ஆரம்பிச்சிடுச்சு... நலங்கை ஆரம்பிச்சிடலாமா இந்திரா?" வயதில் மூத்த உறவுக்காரி கேட்க...

"ஆரம்பிச்சிடலாம் அத்தை" என்றாள்.

ஒவ்வொருவரும் வரிசையாக நலங்கு வைக்க ஆரம்பித்தனர்.

கன்னத்தில் மஞ்சளும் சந்தனமும், நெற்றியில் குங்குமமும், தலையில் பூக்களும் ஏற... ஏற... அமுதினியின் நெஞ்சமும் கனமாகிக் கொண்டேப் போனது. தலை கவிழ்ந்திருந்ததால் கண்களில் சுரந்த நீரை யாரும் பார்க்கவில்லை.

* * *

"பூங்கொடி... டீ வேணும்... ரெண்டு வடை அதிகமா சாப்பிட்டதுல நெஞ்சு கரிக்குது. நல்ல 'ஆயில்'லதானே சுட்டீங்க?" என்று கேட்டான் அவளின் கணவன் ராகவ்.

"ஆமா... வாயக் கட்டாதீங்க... என்ன ஆயில்னு ஆராய்ச்சிப் பண்ணுங்க. வயசுக்கேத்த மாதிரி சாப்பிடுங்க... இல்லேன்னா வேற ஆயுளைப் பத்திதான் கவலைப்படணும்!"

"உன்கிட்ட வந்து கேட்டேன் பாரு... புருஷன்னு கூட பார்க்காம அபசகுனமாப் பேசிக்கிட்டு. பாமாயில் என் உடம்புக்கு ஆகாது. உன் வீட்ல அதுலதானே பொங்கல் கூட செய்வீங்க? என்னமோ இந்த வீட்ல பாலும், நெய்யும் வழிஞ்சோடுதுப் பாரு! நிஜந்தன் இல்லேன்னா... உன் தங்கச்சிக்கு கல்யாணம் பண்ண வீடு வீடா கையேந்தி இருக்கணும்!"

"ஏங்க... எப்பப் பார்த்தாலும் என் குடும்பத்தை இவ்ளோ கேவலமாப் பேசறீங்க? நீங்களும் இந்த குடும்பத்துல ஒருத்தர்தான். அதை மறந்திடாதீங்க!"

"நான் தப்பா என்னடிச் சொல்லிட்டேன்? நிஜந்தன் அமுதினிக்கு தம்பி! அவன் சம்பாத்தியத்துலதான்... அக்கா கழுத்துல தாலி ஏறப் போவுது! இந்த காலத்துல எந்த தம்பிக்காரன் இவ்வளவு பொறுப்பா நடந்துக்கறான்னு... பாராட்டிதானேப் பேசறேன்!"

"........?!"

"தங்கச்சிக்கு அண்ணன்காரன் என்ன சீர் செய்யப் போறாராம்?"

"கொஞ்சநேரம் சும்மா இருங்களேன். அண்ணன் என்னப் பண்ணினா நமக்கென்ன? நாம ஒழுங்காப் பண்றோமா... அதை மட்டும் பாருங்க!"

"நுங்கம்பாக்கத்துல ஏதோ ஒரு கம்பெனியில் செக்யூரிட்டியா வேலை பார்த்துட்டு இருந்தாரே... இன்னமும் அதே கம்பெனிலதான் இருக்காரா? இல்லை வழக்கம்போல... போதையில போய் சட்டை கிழிச்சிட்டாங்களா?"

பூங்கொடி முறைத்தாள்.

"உங்களுக்கு டீதானே வேணும்... போட்டு எடுத்துட்டு வாறேன்!"

ஹாலில அமர்ந்து பூத்தொடுத்துக் கொண்டிருந்த வைஷ்ணவிக்கு எல்லாமே காதில் விழவேச் செய்தது. கண்களில் இருந்து விழுந்த முத்து தரையில் பட்டு சிதறியது.

"என்ன இது? ஏகப்பட்ட வேலைய வச்சுக்கிட்டு பூக்கட்டிக்கிட்டிருக்கே? கிச்சன்ல பூங்கொடி என்னமோ பண்ணிட்டிருக்காப் பார்! உனக்கு அங்கே எந்த வேலையும் இல்லையா? விருந்தாளிங்களை வேலை செய்ய விடாதேம்மா! வெளியே என் அக்கா சும்மாதான் உக்காந்திருக்கா... அவகிட்ட இந்த வேலையக் குடுத்துட்டு நீ அந்த வேலையைப் பார்!"

செருப்பை கழற்றிவிட்டு உள்ளே நுழையும்போதே கட்டளைப் பறந்தது பொன்னிலனிடமிருந்து.

"சரிங்க மாமா!" உடனே எழுந்தாள் வைஷ்ணவி.

சுசீந்திரனை காதலித்து கட்டின சேலையோடு அந்த வீட்டிற்கு வந்து பத்து வருடம் ஓடி விட்டது.

வைஷ்ணவிக்கு பெற்றோர் இல்லை. அண்ணனின் பாதுகாப்பில் வளர்ந்தவள். தங்கை ஓடிப்போனதை அண்ணன் இன்றுவரை மன்னிக்கவில்லை. கையை வீசிக் கொண்டு வந்த மருமகளுக்கு அந்த வீட்டில் மரியாதை இல்லை. ஆனும், பெண்ணுமாய் இரு குழந்தைகள் பிறந்தாயிற்று.



பூங்கொடிக்கு நிறைவாய் செய்து முடித்த கையோடு துறைமுகப் பணியிலிருந்து ரிடையர் ஆனார் பொன்னிலன். அவரின் வாரிசாக ஒருவரை பணியில் நியமிக்கலாம். ஆனால், பென்ஷன் கிடையாது. பொறுப்பற்ற சுசீந்திரனை மனம் ஏற்கவில்லை. இளையவன் நிஜந்தனை பணியில் அமர்த்தினார்.

அந்த உதாசீனம் சுசீந்திரனை போதைக்கு அடிமையாக்கியது.

துன்பங்களைப் பொறுத்து, கண்ணீரை பல்லை கடித்து சகித்துக் கொண்டாள் வைஷ்ணவி.

2

"சாப்பிட்டாச்சாம்மா?" உள்ளே நுழையும்போதே முகத்தில் புன்னகையும், கேள்வியுமாய் நுழைந்தவனிடமிருந்து குப்பென்று வீசிய மதுவின் நெடியில் முகம் சுன்றிப் போனாள் இந்திரா.

"பாவி... தங்கச்சி கல்யாணத்துக்காக வீடு முழுக்க உறவுக்காரங்க வந்திருக்காங்க... எதைப் பத்தியும் கவலைப்படாம குடிச்சிட்டு வந்திருக்கியா? உன்னால ஏதாவது பிரயோஜனம் இல்லேன்னாலும், அசிங்கப்படுத்தி, அவமானப்படுத்தி நாலுபேர் கேலிப் பேச மட்டும் வாய்ப்பை ஏற்படுத்திடறே இல்லே?"

"உஷ்... சத்தமாப் பேசாதேம்மா...

## துபாய் செயற்கை நீரூற்று

துபாய் மாலையொட்டியுள்ள இடமான புர்ஜ் கலிபாலேக். 30 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த இடத்தில் துபாய் பவுண்டெய்ன் (செயற்கை நீரூற்று) அமைக்கப்பட்டிருக்கிறது. லாஸ் வேகாஸ் நகரில் உள்ள பவுண்டெய்ன்ஸ் ஆப் பெல்லாகியோ என்ற செயற்கை நீரூற்றை கட்டிய கலிபோர்னியாவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் தான் இந்த துபாய் பவுண்டெய்னை வடிவமைத்திருக்கிறது.

துபாய் நீரூற்று 150 மீட்டர் உயரத்திற்கு (500 அடி) தண்ணீரை பீய்ச்சி அடிக்கும் திறனுடையது. அதாவது, 50 மாடி கட்டிட உயரத்திற்கு இந்த நீரூற்று தண்ணீரை பீய்ச்சி அடிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. 275 மீட்டர் தூரத்திற்கு வெவ்வேறு அளவில் 5 வட்டங்களாகவும், 2 வளைவுகளாகவும் இந்த நீரூற்று அமைக்கப்பட்டுள்ளது.

உலகின் உயரமான கட்டிடமான புர்ஜ் கலிபாவின் 124 மாடியில் இருந்து இந்த நீரூற்று காட்சிகளை பார்ப்பது மிகவும் அழகாக இருக்கும். உலகிலேயே பெரிய நடனமாடும் செயற்கை நீரூற்று இது. 6,600-க்கும் மேற்பட்ட, தண்ணீரிலும் எரியக் கூடிய சூப்பர் மின்விளக்குகள் இந்த செயற்கை நீரூற்றுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 25 வண்ண புரொஜக்டர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நீரூற்றின் மேல்நோக்கி செல்லும் ஒளிக்கற்றையை 20 மைல்களுக்கு அப்பால் இருந்தும் காணலாம். விண்வெளியில் இருந்து பார்த்தால் மத்திய கிழக்கு நாடுகளின் நிலப்பரப்பு, வெளிச்சமான பகுதியாக இது தெரியும். இந்த நீரூற்று அரபி மற்றும் ஆங்கிலேய பாடல்களின் இசைக்கேற்ப நடனமாடும். ஒரே நேரத்தில் 83,000 லிட்டர் தண்ணீரை பீய்ச்சியடிக்கும். இந்த அதிசய நீரூற்று காண்பவர்களையெல்லாம் கவர்ந்திழுக்க தவறுவதில்லை.

சும்மாதாம்மா... அமுதினிக்கு கல்யாணம்னு ப்ரண்ட்ஸ் ட்ரீட் தரச் சொன்னாங்க... அதுக்காகதான்...!"

"இதுதான் உன் தங்கைக்கு நீ செய்ற சீரா? இன்னும் ரெண்டு நாள்ல கல்யாணம். அவளுக்கு நீ என்ன செய்யப் போறேன்னு பார்க்கத்தானேப் போறேன்!"

"வைஷ்ணவி எங்கேம்மா?" நழுவப் பார்த்தான்.

"ம்... நீங்க தரப்போற சீருக்கு லிஸ்ட் எழுதிட்டு இருக்கா!"

கண்கள் சொக்க, அசட்டுத்தனமாய் சிரித்து, தலையை சொறிந்தபடி அகன்றான்.

தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த சிறிய அறைக்குள் நுழைந்தான்.

இரு குழந்தைகளும் பாயில் படுத்திருக்க... அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்தாள் வைஷ்ணவி.

அவள் செய்துக் கொண்டிருந்த காரியம்... போதையை மீறி சுசீந்திரனை கண்களை விரிய வைத்தது.

கழுத்திலிருந்த தாலிக்கயிற்றை பிரித்து என்னமோ செய்துக் கொண்டிருந்தாள்.

"ஏய்... என்னப் பண்ணிட்டிருக்கே?"

மஞ்சள் கயிற்றில் கோர்த்திருந்த ஒரேயொரு தங்கக்காசை எடுத்துக் காண்பித்தாள்.

"எ... எதுக்காக?"

"அமுதினிக்கு ஒரு அண்ணனா என்ன சேர்த்து வச்சிருக்கீங்க? அதான்... இதை அவளுக்குத் தரலாம்னு..." சொன்னவள் மாங்கல்யத்தின் இருபக்கமும் கறுப்பும் சிவப்புமாய் பாசிமணிகளை கோர்த்து முடிச்சுப் போட்டு புடவைத் தலைப்புக்குள் போட்டுக் கொண்டாள்.

"கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து வச்சு ஆசையா வாங்கினியே வைஷூ?"

"பரவாயில்லீங்க. ஆசையா வாங்கினது இப்ப உங்க மானம் காக்க உதவுது. நாளைக்கு நம்மப் பொண்ணு வளர்ந்து நிப்பா! அவளுக்கு எது வந்து உதவப் போவுது?"

"............?!"

"குடிக்காதீங்கன்னு சண்டை போட்டு, போட்டு என் சக்திதாங்க போச்சு. உங்க மேல உள்ள காதலுக்காக... எவ்வளவோ விஷயங்களைப் பொறுத்துக்கறேன். உங்களை நீங்கதான் மாத்திக்கணும். கல்யாண வீட்ல வேற எதையும் பேசி ரசாபாசம் ஆகிட ... எடுத்து வைக்கிறேன். கைகாலை கழுவிட்டு வாங்க!" சலனமின்றி சொல்லிவிட்டு எழுந்தவளைப் பார்க்க... கஷ்டமாய் இருந்தது.

* * *

நிஜந்தன் பைக்கை சாய்வாய் நிறுத்தி ஸ்டாண்ட் போட்டு விட்டு வேகமாய் வந்தான்.

"அண்ணி... அண்ணா எங்கே? மண்டபத்துக்குப் போகச் சொன்னேனே?"

"கிளம்பிட்டு இருக்கார்!"

"அப்ப இன்னும் கிளம்பலையா? சமையல் வேலை நடந்திட்டிருக்கு அண்ணி... முந்திரி, பாதாம்னு மளிகை சாமான்ல கணிசமா காணாமப் போகும். இன்னும் கிளம்பலேன்னா என்ன அர்த்தம்?" வேகமாய் பேசிய நிஜந்தன் களையாய், அழகாய் இருந்தான்.

"கத்தாதே... கத்தாதே... கிளம்பியாச்சு..." சட்டை பட்டன்களை மாட்டிக் கொண்டே அறைக்குள்ளிருந்து வந்தான் சுசீந்திரன்.

"என்னண்ணா... கொஞ்சம் கூட பொறுப்பில்லாம..."

"போதுமே... ஒரே டயலாக்கை வீட்ல இருக்கிற மொத்தப்பேரும் திரும்பத் திரும்ப பேச அலுக்கலையா? அதான் கிளம்பிட்டேன்ல... விடு!" வேகமாய் வெளியேறி ஓரமாய், சாதுவாய் நின்றிருந்த தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு போனான்.

"ஆமா... செலவுப் பண்றது யாரு? இவருக்கென்ன? கடன்பட்டு செய்யறேனே... வலி எனக்குதானே?"

அதைக் கேட்டு வலித்தாலும் மென்புன்னகையோடு கேட்டாள் வைஷ்ணவி.

"சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா தம்பி?"

"வேண்டாம்ண்ணி... மண்டபத்திலே நாலு காபி குடிச்சிட்டேன். அமுதினி எங்கே?"

"தூங்கிட்டிருக்காப்பா!" வெற்றிலைச் சிரிப்புடன் வந்தாள் இந்திரா.

"ஆறுமணிக்கு ரிசப்ஷன்ம்மா... இன்னும் தூங்கிட்டிருந்தா எப்படிம்மா!"

"இன்னும் அரைமணி நேரத்துல பியூட்டிஷியன் வந்துடுவா... சரியா இருக்கும்!"



பேசக்குரல்கள் அத்தனையும் காதில் விழ, நிஜந்தனின் அறைக்கட்டிலில் படுத்திருந்த அமுதினியின் காதில் கண்ணீர்த்துளிகள் தேங்கி நிற்க... கண்களை அழுந்த துடைத்துக் கொண்டு வேதனை சுவட்டினை மறைக்க முயற்சித்தாள்.

"அமுது..."

"வா... நிஜந்தன்!" அமர்ந்தாள்.

முகம் சுருங்க... உற்றுப் பார்த்தான்.

"ஏன்... டல்லாயிருக்கே?"

"சேச்சே... அப்படிலாம் இல்லேடா!"

"அழுதிருக்கே..."

"........?!"

"எதுக்கு... எங்களையெல்லாம் பிரியப் போறோமே அப்படின்னா?"

மெல்லத் தலையசைத்தாள்.

"தப்பிச்சுப் போறோமேன்னு சந்தோஷப் படு!"

"ஹேய்..."

"சும்மா ஜாலிக்கு! ஜஸ்ட் டூ டேஸ்... இந்தக் கவலை எல்லாம் இருக்கும். அதுக்குப் பிறகு, இங்கே தங்கிட்டு போன்னாக்கூட 'அவர் நான் இல்லாம ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டார்'னு ஓடுவே... பி... ரிலாக்ஸ்...."

"எனிவே... தாங்க்ஸ் நிஜந்தன்!"

"எதுக்கு?"

"ஆபீஸ்லேயும், வெளியிலேயும் பல லட்சம் லோன் வாங்கிதான் இந்தக் கல்யாணத்தையேப் பண்றே... இது சாதாரண விஷயம் இல்லையே!"

"இதெல்லாம் பேசற நேரமா இது? ப்ரஷ்ஷாயிரு... பியூட்டிஷியன் வந்துடுவாங்க... ரெடியாகிக்க..."

"ம்..."

நிஜந்தன் அம்மாவைத் தேடிச் சென்று பேசி... பரபரப்பாய் இருந்தான்.

அமுதினியால் சந்தோஷமாய் இருக்க முடியவில்லை.

கண்ணாடி முன் நின்றாள்.

கண்ணிமைகள் வீங்கியிருக்க, மூக்கு நுனி சிவந்திருக்க அழுதச் சுவடுகள் அப்பட்டமாய் தெரிய, கருவிழிகளில் பயம் நிறைந்திருந்தது.

'இன்னும் சற்று நேரத்தில் மாப்பிள்ளை வீட்டார் வருவார்கள். தேவன் இங்கு வந்து ஏதாவது பிரச்சினைப் பண்ணுவானோ? ஏதாவது பிரச்சினைப் பண்ணுவானோ? இங்கே வரவில்லை என்றாலும், மண்டபத்தில் வந்து விட்டால்?'

நினைக்கும்போதே... உள்ளுக்குள் அலையடித்தது.

'இல்லை... தேவன் அந்தளவு கீழ்த்தரமானவன் இல்லை. என்னை உண்மையாய் நேசித்தான். கண்டிப்பாய் என்னை அசிங்கப்படுத்தி, அவமானப்படுத்தி வேதனைப்படுத்த மாட்டான்!'

அவனையறிந்த உள்ளம் அவனுக்காக வாதாடியது.

நான்கு வருடக் காதல் கனவாகிப் போன வேதனையும், புதிய வாழ்க்கையை களங்கமற்று சுமக்க வேண்டிய கட்டாயமுமாய்... முள்மேல் படுக்கையாய் துடித்தாள்.

அமுதினி பி.சி.ஏ. படித்து விட்டு ஒரு கம்பெனியில் பணிபுரிந்த போதுதான் தேவனின் அறிமுகம். நட்பு காதலாக மாற... இரண்டு மாதமே போதுமானதாய் இருந்தது.

தேவன் நல்லவன்தான். கொஞ்சம் வசதியான சூழலில், காதலை பாதகமாய் எண்ணும் பெற்றோருக்கு பிறந்ததுதான் பிசகாயிற்று. தேவனுக்கு ஒரு தங்கையும் உண்டு. அவன் தந்தை, தன் சொந்தத்திலேயே பெண் கொடுத்து, பெண் எடுக்க எப்பவோ முடிவுப் பண்ணி ஒப்புத் தாம்பாளமும் மாற்றியாயிற்று.

மகனின் காதல் தெரியவர... வழக்கத்தை விட அதிகமாகவே பொங்கி எழுந்தார் அப்பா செல்வம்.

விசாரித்தார். பெண்ணின் தந்தை வி.ஆர்.எஸ். எழுதிக் கொடுத்து விட்டு... செக்யூரிட்டி வேலைக்கு சென்று வரும் அளவிற்கு கஷ்டப்படும் நிலையில் இருப்பவர் என்று!

நேரே... பொன்னிலன் வேலை பார்க்கும் இடத்திற்கே சென்று மிக கேவலமாய் திட்டி... மிரட்டி விட்டு வந்தார்.

நிஜந்தனுக்கு இந்த காதல் கத்தரிக்காயெல்லாம் பிடிப்பதேயில்லை. அதனால் இந்த விஷயம் வேறு யார் காதிற்கும் போகாமல் பார்த்துக் கொண்டார்.

மகளை தனியே மிரட்டினர் பெற்றோர்.

பிடிவாதமாய் இருந்தாள் அமுதினி.

"யாருக்கும் பயப்படாதே! என் வீட்டை நான் சமாளிக்கிறேன். ரெண்டு வருஷம் பொறுமையாயிரு. என் தங்கச்சிக்கு ஆனதும்... நம்ம கல்யாணம் நடக்கும்" என்று தேவன் போனில் கெஞ்சினான்.

## புஜங்கள் வளர்ப்பதில் உலக சாதனை

நடுத்தர வயதுகளில் இருப்பவர்களுக்கு இடுப்பளவு, சராசரி 30 அல்லது 32 அங்குலம் இருக்கும். இதற்கு இணையாக புஜத்தை ஏற்றிருக்கிறார் எகிப்து நாட்டைச் சேர்ந்த பாடிபில்டர் முஸ்தபா இஸ்மாயில். இவருக்கு 24 வயதுதான் ஆகிறது. கடந்த 10 ஆண்டுகளாக இடைவிடாமல், ஜிம்முக்கு போகிறார். தினமும் ஜிம் போனோமா, எல்லா கருவிகளையும் தொட்டுவிட்டு வந்தோமா என்ற ரகம் அல்ல இவர். கடுமையான பயிற்சி செய்வார். தினமும் 2 முறை ஜிம்முக்கு சென்று மொத்தம் 3 மணிநேரம் பயிற்சி செய்வார்.



கடந்த 10 ஆண்டுகளாக கடும்பயிற்சி செய்ததின் விளைவு 'பை செப்ஸ்' எனப்படும் புஜத்தின் அளவை 31 அங்குலமாக ஆக்கியிருக்கிறார். ''பயிற்சி மட்டும் போதாது. அதற்கேற்ப உணவையும் ஒரு பிடிபிடிப்பேன்'' என்கிறார் முஸ்தபா. ஒன்றேகால் கிலோ சிக்கன், அரை கிலோ மீன், 4 கப் பாதாம் பருப்பு, 3 லிட்டர் புரோட்டின் ஷேக், ஏழரை லிட்டர் தண்ணீர் ஆகியவை முஸ்தபாவின் ஒரு நாள் உணவு.

மேலும், சாதனைகள் பயிற்சிகளுக்கு வசதியாக மனைவி மற்றும் குடும்பத்துடன் இப்போது இவர் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் குடியேறியிருக்கிறார். உலகிலேயே பெரிய புஜங்கள் கொண்டவர் என்ற கின்னஸ் சாதனை படைத்துள்ள முஸ்தபா, 2013-ம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற இருக்கிறார் என்பது பெருமையான விஷயம்தானே

## 3

அமுதினி அந்த பதிலால் அமைதியானாள். எந்தப் பிரச்சினையும் இன்றி, வீண் விவாதங்களின்றி அலுவலகம் சென்று வந்த மகள் மீது இன்னும் அழுத்தமாய் சந்தேகம் படிய... அவளை கண்காணிக்க ஆரம்பித்தனர். ஒரு நாள் அவள் தேவனோடு போனில் உரையாட, அத்தனையும் கேட்டு விட்ட இந்திரா அவர்களின் திட்டம் புரிய... அதை உடனே முறியடித்தனர் தற்கொலை முயற்சி மூலம்.

கைநிறைய தூக்க மாத்திரைகளை வாயில் கொட்டி விழுங்க முயன்ற தீவிரத்தைக் காண சகிக்காமல், தடுத்து... தன் காதலை தனக்குள்ளே விழுங்கிக் கொண்டாள். அவர்கள் விருப்பப்படி திருமணம் செய்யவும் சம்மதித்தாள்.

இந்த விஷயம் வீட்டில் எல்லோருக்கும் தெரியும் நிஜந்தனை தவிர.

தரகர் மூலம் வந்த வரன்தான் ஆதித்யா. யாரும் அமுதினியின் விருப்பத்தைக் கேட்கவில்லை. பொம்மையாய் வளைய வந்தாள். இடையில் தேவன் அமுதினி தோழி மூலம் செய்தி அனுப்பினான். 'ஓடிப்போய் திருமணம் செய்துக் கொள்ளலாம்' என்று.

'என்னைப் பெத்தவங்க உயிரை விட காதல் பெரிதில்லை. எல்லாத்தையும் மறந்து விடச் சொல்' என்று சொல்லி அனுப்பினாள். அதன்பின் அவனிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை.

திருமணம் பேசி முடித்த நிமிடத்திலிருந்து பரபரவென ஓடிக் கொண்டிருப்பவன் நிஜந்தன்தான். அவன்தான் ஆபீஸில் லோன் போட்டு, மண்டபம் புக் செய்து, சமையல், கச்சேரி, மண்டப அலங்காரம் என்று பார்த்து பார்த்து ஏற்பாடு செய்தான்.

நிஜந்தன் அந்த வீட்டிலேயே ரொம்ப அமைதி. யாரிடமும் அதிகம் பேசமாட்டான். டி.வி.யில் கூட செய்தியும், பழைய படங்களையும்தான் பார்ப்பான். காதல் பாடல் எதும் போட்டால் சட்டென சேனல் மாற்றி விடுவான்.

அவன் விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததுதான். காதல் என்றால் பிடிக்காதே ஒழிய... அவனும் காதலில் விழுந்தவன்தான்.

துவாரகா! பெயரைப் போலவே... அவளின் எண்ண ஓட்டங்களும், பேச்சும் வித்தியாசமாய் இருந்தது. குழைத்த சந்தனத்தில் துளி குங்குமமும் கலந்து அவளின் நிறத்தை வரைந்திருந்தான் பிரம்மன். பூப்போன்ற அழகு.

இரண்டு வருடம் நிஜந்தனோடு சுற்றாத இடமில்லை. கொடுத்தது பெற்ற முத்தங்கள் ஆயிரம். மனைவி போல் வாழவில்லையே தவிர, எல்லையின் முதல் படி வரை சென்று வந்தவர்கள்தான். அவள் உடலின் வெப்பம் எத்தனை செண்டிகிரேடு என்பது வரை அறிந்தவன். அப்படிப்பட்ட நிஜந்தனை ஒரே நாளில் வெட்டி விட்டாள்.

காரணம் இரண்டு.

ஒன்று திலீபன்! புதிய நண்பன். நல்ல நிறத்துடன், பணக்காரனாய் இருந்தான். தோழி மூலம் அறிமுகம். அவள் ஒருத்தனை காதலித்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்தும்... ஐ லவ் யூ சொன்ன தைரியம் துவாரகாவை ரொம்பவே இம்ப்ரஸ் செய்து விட்டது.

இரண்டு... நிஜந்தனின் நிறம்!

நிஜந்தன் மாநிறத்திற்கும் குறைவான நிறம் உள்ளவன். ஆனால், அவ்வளவு களையாய், அழகாய் இருப்பான். தவிர, அவனின் குடும்ப சூழ்நிலை. இரண்டுமே இப்போது துவாரகாவிற்கு வெறுப்பைத் தந்தன.

அவள் தந்த துரோகம், காதல் என்றாலே... நெருப்பாய் வெறுத்தான். வீட்டில் பேச்சுக் குறைத்தான். ஸ்ட்ரிக்டாக நடந்துக் கொள்வான்.

சுசீந்திரனும் வைஷ்ணவியும் கூட காதலித்துக் கல்யாணம் செய்தவர்கள்தான். இதெல்லாம் நிஜந்தன், துவாரகாவை பார்ப்பதற்கு முன் நடந்தது என்பதால் அவர்களை ஒரு பொருட்டாய் எண்ணவில்லை.

* * *

நெருங்கிய உறவினர்கள், தூரத்து உறவினர்கள் என்று வீட்டில் குழும... அமரக்கூட இடமின்றி அமளிதுமளியாயிற்று.

வைஷ்ணவியின் பாடுதான் திண்டாட்டமானது. சமையலறையே கதியெனக் கிடந்தாள்.

அமுதினியின் பள்ளி, கல்லூரித் தோழிகளின் அரட்டையில் வீடு கிடுகிடுத்தது.

''அம்மு... உன் ஆள் ரொம்ப ஸ்மார்ட்டாமே?''

''ரொம்ப ஹைட்டுன்னாங்க... இவ் பண்ணணும்னாக் கூட நீ ஸ்டூல் போட்டுதான் ஏறி நிக்கணும்!''

"ரிசப்ஷன்ல ரெண்டுபேரையும் டான்ஸ் ஆட வச்சுடணும். இப்ப அதானே பேஷன்!"

"டெய்லி எத்தனை முறை போன் பண்றார்? வெளியில மீட் பண்ணியிருக்கீங்களா?"

ஒவ்வொருத்தியும் இஷ்டத்திற்கு பேச... அமுதினி புன்னகையை மட்டும் பதிலாகத் தந்து சாமர்த்தியமாய் தப்பித்தாள்.

ஆதித்யா மற்ற ஆண்களைப் போல் இல்லை. நாகரீகமாய் நடந்து கொண்டான். நிச்சயமான பின் வாரத்திற்கு இரண்டு மூன்று முறை போன் பண்ணுவான். வரைமுறை தாண்டி பேச மாட்டான். வழிய மாட்டான். திடீரென சென்ற வாரம் "வெளியில் தனியே சந்திக்கணும்... பேசணும்" என்று அழைத்தான்.

ஆச்சர்யப்பட்ட அமுதினி, ஆர்வத்துடன் அவன் குறிப்பிட்டிருந்த இடத்திற்கு வந்தாள்.

''நீ வர மறுப்பேன்னு நினைச்சேன். பரவாயில்லே கூப்பிட்டதும் வந்துட்டே?''

அவன் சாதாரணமாய் சொன்னான். ஆனால் கேட்கத்தான் சங்கடமாய் இருந்தது.

"இ... இல்லே... ஏதாவது முக்கியமான விஷயமாய் இருக்குமோன்னு... தவிர... உங்க மேலே எனக்கு நிறைய மரியாதை இருக்கு— நிச்சயமான பொண்ணுதானேன்னு எந்த உரிமையும் எடுத்துக்காம டீசண்ட்டா பேசறீங்க... எனக்குப் பிடிச்சிருந்தது..."

''தாங்க்ஸ் அமுது! இப்பலலாம் கல்யாணத்துக்கு முன்னாடியே கப்பிள்ஸ் எல்லை மீறிப் போயிடறாங்க. பலபேரோட கல்யாணம் நிச்சயத்தோடவே முடிஞ்சு போயிடுது. அப்படிப்பட்ட பொண்ணுங்களோட கதி? எனக்கும் ஒரு தங்கை இருக்கா! அதனாலதான்... நான் எல்லா விஷயத்திலேயும் எச்சரிக்கையாயிருக்கேன்!"

"ஓ!" இன்னும் ஆச்சர்யமானாள்.

"நம்மளை சேர்த்து வச்சு யாராவது பார்க்கறதுக்கு முன்னாடி... பேச வந்ததை பேசிடறேன்!"

"..........?!"

அந்தப் பார்க்கில் ஆட்கள் குறைவாகவே இருந்தனர்.

சிலர் வளைவான பாதையில் நடைபயிற்சி மேற்கொண்டிருந்தனர்.

ஒரு சில காதல் ஜோடிகள் யாரும் பார்க்காத நேரம் சின்ன முத்தத்துக்கு அச்சாரம் போட்டனர்.

நடுத்தர வயது ஆண்கள் சிலர் எதையோ யோசிப்பதுப் போல் ஜோடிகளை திருட்டுத்தனமாய் நோட்டம் விட்டனர்.

"உனக்கு காதல் அனுபவம் இருக்கா அமுது?"

சட்டென கேட்டதில் நிலநடுக்கத்தை உணர்ந்தாள் அமுதினி.

"எ...என்ன... கேட்டீங்க?"

"நீ யாரையாவது லவ் பண்ணியிருக்கியா? கல்யாணத்துக்கு முன்னாடி கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டா பெட்டர். பின்னாடி தெரிஞ்சா... சங்கடமாயிருக்குமில்லே? என்ன அப்படி முழிக்கிறே? இருந்தா தைரியமாச் சொல்லு. நான் மனசு விட்டு பேசணும்னுதான் வந்திருக்கேன்."

"..........?!"

''ஷைலுன்னு ஒரு பொண்ணு! வெரி ஸ்மார்ட் கேர்ள்! ரெண்டுபேரும் லவ் பண்ணினோம். மூணு வருஷம்... அருமையான காதல்... அவளோட மரணத்தோட என் காதலும் சாம்பலாய்டுச்சு!'' பெருமூச்செறிந்தான்.



"எ... எப்படி?"

''ட்ரெய்ன் ஆக்ஸிடண்ட்! போன்ல என்கிட்ட பேசிக்கிட்டே தண்டவாளத்தை க்ராஸ் பண்ணியிருக்கா. ட்ரெய்ன் வர்றதை கவனிக்கலே! ஒரே செகண்ட்தான்! அவ கத்துன சத்தம் மட்டும் இன்னும் என் காதுல ஒலிச்சுக்கிட்டே இருக்கு. விடு! இதுதான் என் லவ். அப்பப்ப அவளை நினைச்சுப்பேன். நீ கொஞ்சம் அவள் சாயல் அமுது. உன் கூட வாழத் தொடங்கறப்ப கண்டிப்பா அவளை மறந்துடுவேன். நீ சொல்லு..."

மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசிய அவன் மீது முதன்முதலாய், ஒரு நேசம் படரத் தொடங்கியது.

கணவனின் மறுபக்கத்தை பெண்கள் ஓரளவு எளிதாய் எடுத்துக் கொள்வதுண்டு. பல கணவர்களுக்கு அந்த பெருந்தன்மை கிடையாது.

'எதற்கு வீண் பரீட்சை?!'

''இல்லை... நான் யாரையும் லவ் பண்ணினதில்லை.''

"அப்பாடா!" நிம்மதியாய் மனம் விட்டு சொன்னான் ஆதித்யா.

## பிரான்ஸ் ஸ்பைடர்மேன் புதிய சாதனை!

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் ஆலென் ராபர்ட் (வயது 50). உலகின் உயரமான கட்டிடங்கள் மீது கயிறு, பாதுகாப்பு சாதனங்கள் எதுவுமில்லாமல் ஏறி சாதனை படைப்பதே இவரது பொழுதுபோக்கு. இதனால், இவரை 'ஸ்பைடர்மேன்' என்று அழைக்கிறார்கள். மிகவும் சவால் நிறைந்த கட்டிடமாக கருதப்படும் சீனாவின் செங்சோ நகரில் உள்ள 1,300 அடி உயரம் கொண்ட 'போரட லேசா டவர்' மீது ஏறி ஆலென் ராபர்ட் புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்த கட்டிடத்தின் முதல் 400 அடிக்கு மேல் பயங்கரமாக வழுக்கும் தன்மையுடன் கூடிய கண்ணாடி மற்றும் உலோகத்தாலான வெளிப்புற சுவர் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கை, கால்களை ஊன்றக்கூடிய வகையில் பிடிமானம் சற்றும் இல்லாததால், இந்த கட்டிடத்தின் மீது ஏறுவது மிகவும் சவால் நிறைந்த பணியாகும். இதனால், வேறுவழியின்றி கண்ணாடி சுவரில் சில சாதனங்கள் மற்றும் பாதுகாப்பு கயிறு போன்றவற்றின் துணையோடு ராபர்ட் கட்டிடத்தின் மீது ஏற ஆரம்பித்தார்.

முதல் 400 அடியை சிரமமின்றி ஏறி முடித்த ராபர்ட் பின் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து 2 மணி நேரத்தில் உச்சியை சென்றடைந்தார். அங்கே அவருக்காக காத்திருந்த வரவேற்பு குழுவை சேர்ந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து ராபர்ட்டை வரவேற்றனர். இவரின் இந்த சாகச சாதனையை சீன தொலைக்காட்சி ஒளிபரப்பியது. ஏற்கனவே, 2007-ம் ஆண்டு ஷாங்காய் மாகாணத்தில் உள்ள 1,400 அடி உயரம் கொண்ட 'ஜின்மாவ்' டவரில் ஏறி சாதனை படைத்தார்.

கடந்த மார்ச் மாதம் துபாயில் உள்ள உலகின் மிக உயர்ந்த கட்டிடமான 'புர்ஜ் கலிபா' டவர் மீது ஏறி உலக மக்களின் கவனத்தை கவர்ந்து பாராட்டு பெற்றார். 2,716 அடி உயரம் கொண்ட இக்கட்டிடத்தின் மீது ராபர்ட் ஏறும் போது பயங்கர பாலைவனக் காற்று வீசிக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## 4

மண்டபம் முழுக்க கூட்டம். கச்சேரியும், வாண்டுகளின் டான்ஸுமாய் ரிசப்ஷன் களை கட்டியிருக்க... மேடையில் சிரித்து... சிரித்து, போட்டோவுக்கு போஸ் கொடுத்து... பரிசுகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர் ஆதித்யாவும், அமுதினியும்.

ஸ்டெல்லா மேடையேறி... அமுதினியின் சேலை மடிப்பையும், தலையிலிருந்தப் பூவையும் சரி செய்வதுபோல் காதில் கிசுகிசுத்தாள்.

''ரொம்ப டென்ஷனா இருக்கிறது நல்லா முகத்துலத் தெரியுது. தேவனை நினைச்சுத்தானே? பயப்படாதே... நீ நினைக்கிற அளவுக்கு அவன் மட்டமானவன் இல்லே. தைரியமாயிரு. ரிலாக்ஸாயிரு... சரியா?''

அமுதினி அகன்ற விழியுடன் தோழியைப் பார்த்தாள்.

"ம்" மெல்ல கையைப் பற்றி அழுத்தி மென்சிரிப்புடன் நம்பிக்கையூட்டினாள்.

அரைமயக்கத்தில் இருந்தவளுக்கு குளுக்கோஸ் ஏற்றியதுப் போலிருந்தது. முகத்திலிருந்த பதற்றம் அகன்றது. கோட்சூட்டில் ஆதித்யாவின் உருவம் ஆண்மைத் திமிறலுடன் இருப்பதை அப்போதுதான் கவனத்தை ஈர்க்க... சந்தர்ப்பம் அமையும் போதெல்லாம் அவனை ரசித்தாள்.

மறுநாள்... ஒரு சின்ன சங்கடம் தவிர, மற்றபடி திருப்தியுடன் அவன் கையால் தாலி கட்டிக் கொண்டாள்.

* * *

''வைஷ்ணவி... ஏய்... என்னப் பண்றே?'' டி.வி. பார்த்துக் கொண்டிருந்த இந்திரா கோபமாய் கத்தினாள்.

"என்னத்தை?" வேகமாய் வந்தாள்.

"என்னப் பண்ணிட்டிருக்கே?"

"குழந்தைங்களுக்கு பாடம் சொல்லிக் குடுத்திட்டிருக்கேன்"

"அதுக்காக? உனக்கு மூக்குக் கூடவா விளங்காமப் போச்சு? ஸ்டவ்ல என்ன வச்சே? தீயற நாத்தம் தெரியலே..."

''அச்சச்சோ...'' கிச்சனிற்குள் ஓடிச் சென்றாள். தடால் புடாலென சாமான்கள் ஓசை!

பின்னாடியே வந்தாள் இந்திரா.

"என்னத்த நாசம் பண்ணினே?"

"நைட்டுக்கு சப்பாத்திக்கு சென்னாகுருமா செஞ்சேன். கொஞ்சம் கெட்டியாகட்டும்னு வச்சிட்டு வந்தேன்... தீஞ்சுப் போச்சு!" பயமும், பதறறுமாய் சொன்னாள்.

"அதானே... வீணாப் போனது உன் அப்பன் வீட்டுப் பணமா இருந்திருந்தா கவனமெல்லாம் நாலாபக்கமும் இருக்கும். என் புள்ளை கஷ்டப்பட்டு சம்பாதிச்சு... வகை தொகை தெரியாம எல்லாருக்கும் படியளக்கிறான். குடும்பமே உக்காந்து சாப்பிடறீங்க. கொஞ்சமாவது பயமிருந்தாதானே?"

"..........?!"

வைஷ்ணவி அவமானத்தில் குறுகி... கண்களைத் துடைத்துக் கொண்டு... அடுத்த வேலையை கவனிக்க ஆரம்பித்தாள்.

"நான் பாட்டுக்கு பேசிட்டே நிக்கறேன்... ஒரு பதிலும் பேசமாட்டேங்கறே?"

''அத்தே... இப்ப நான் என்னப் பேசினாலும் தப்பாத்தான் தெரியும். தம்பி வர்றதுக்குள்ளே... வேற எதையாவது சமைக்கணும். விடுங்க...''

"விடுங்களா? என்னடி வாய் நீளுது!"

"ஐய்யோ... நான் எந்த அர்த்தத்திலேயும் பேசலே.'' பரபரவென தக்காளி, வெங்காயத்தை நறுக்க ஆரம்பித்தாள்.

"வர...வர... உனக்கு வாய்க் கொழுப்பு அதிகமாகிட்டேப் போகுது. வார்த்தைக்கு வார்த்தை பதில் பேசறே! மாமியார்ங்கிற மட்டுமரியாதை இல்லே. உன் புருஷன் கிழிக்கிற சம்பளத்துக்கு நாலு வயிறும் ரெண்டு வேளையாவது சாப்பிட முடியுமாப் பாரு! அடுத்து நிஜந்தனுக்கும் பொண்ணு பார்க்கப் போறோம். வரப்போறவ மனசு வச்சாதான் மத்த எல்லாமும் நடக்கும். அதை மனசுல வச்சுக்க மேடம்!"

இண்டலும், கோபமுமாய் வார்த்தைகளை கொட்ட, வேதனையில் துடித்த மனதை உதட்டைக் கடித்து மறைத்தாலும் கண்களால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"இந்திரா..." உள்ளேயிருந்து பொன்னிவன்

அழைத்தார்.

"என்னங்க?"

"நல்ல சீன் காட்டறாங்க... சீக்கிரம் வா!"

உள்ளே வந்தவள் முகம் சுளித்தாள்.

"என்னங்க இது! விளம்பரம்தானே போட்டிருக்கு?"

"இப்படி உக்கார்..."

"............?!"

"எதுக்கு அந்தப் பொண்ணை எப்பப் பார்த்தாலும் சீண்டிக்கிட்டே இருக்கே?"

"அதுக்கில்லீங்க... கொஞ்சம் கூட பொறுப்பில்லாம..."

"எல்லாம் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். கவனம் பிசகறது எல்லார்க்கும் உண்டானதுதானே? சும்மா சாப்பிடறதை எல்லாம் சொல்லிக் காட்டிக்கிட்டு? சுசீந்திரன் நாம பெத்தப் புள்ளை! அவன் குறைச்சலா சம்பாதிக்கறதை சொல்லிக் காட்டி அசிங்கப்படுத்தாதே! அந்தப் பொண்ணு இந்த வீட்ல எல்லா வேலையும் செயறா. நிஜந்தன் சும்மா ஒண்ணும் செய்திடலை. அவனுக்கும் சமைச்சு கட்டி குடுத்து, அவன் டிரஸ்ஸெல்லாம் துவைச்சு அயர்ன் பண்ணித் தர்றா. வீணா பிரச்சினை உண்டு பண்ற மாதிரிப் பேசாதே!"

"ம்" என்றான் கண்களை டி.வி. திரையில் பதிய வைத்து.

பொன்னீலன் சிரித்துக் கொண்டார்.

இந்திராவிடம் பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம்... கணவர் என்ன சொன்னாலும் அடிபணிந்து அமைதியாகி விடுவாள்.

சூழ்நிலையை மாற்ற... பேச்சை திசை திருப்பினார் பொன்னீலன்.

"ரொம்பப் போரடிக்குது இந்திரா. பார்த்துக்கிட்டிருந்த செக்யூரிட்டி வேலையையும் நிஜந்தனோட கட்டாயத்தால விட வேண்டியதாயிடுச்சு. 'நான்தான் சம்பாதிக்கிறேனே... இந்த வயசுல வேலைக்குப் போறேன்னுட்டு உடம்புக்கு முடியாமப் படுத்துக்கறதுக்கா'ன்னு அவன் அழுத்தமாச் சொல்லும்போது எதுவும் பேச முடியல..."

"அவன் சொல்றதும் சரிதானே? எந்த ஜென்மத்துல பண்ணின புண்ணியமோ... நிஜந்தன் நமக்கு புள்ளையா பொறந்தது! ஒவ்வொரு வீட்லேயும் புள்ளைங்களால பெத்தவங்கப் படற வேதனை இருக்கே... சொல்லி மாளாது!"

"தொண்டைக் கமறலா இருக்கு... கொஞ்சமா டீ போட்டுத் தர்றியா இந்திரா..."

"சரிங்க... ஏய்.... வைஷு..."

"இரு... இரு... பாவம், ஏதோ வேலையில இருக்கா. அவளைத் தொந்தரவுப் பண்ணாதே! டீயை நீ போட்டுத் தர்றதா இருந்தா சரி..."

"சரிங்க..."

இந்திரா அகன்றாள்.

சற்று நேரம் கழித்து உள்ளே வர... அவள் வருவதுக்கூட உணராமல் டி.வி. திரையில் கண் பதித்திருந்த பொன்னீலனின் கன்னங்களில் கண்ணீர். மூக்கின் மடல்கள் சுருங்கி விரிந்தன.

"ஐயோ... என்னங்க ஆச்சு? ஏன் அழறீங்க?"

பயந்து... அருகில் அமர்ந்து டம்ளரை ஓரமாய் வைத்து விட்டு அவர் மார்பைத் தொட்டுப் பார்த்தாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே இந்திரா!" அவள் கையை அகற்றினார்.

"பின்னே... ஏன் அழறீங்க?"

"மனசுத் தாங்கலே இந்திரா... அதோ பார்!"

அவர் காட்டியதும் இந்திராவும் பார்த்தாள்.

அந்தச் சேனலில் ஒரு முதியோர் இல்லத்தை காட்டிக் கொண்டிருந்தார்கள்.

எண்ணற்ற பெரியவர்கள். தளர்ந்த நடையும், சுருக்கம் விழுந்த தோலும், கண்களில் படர்ந்திருந்த ஏக்கமும்... அவர்கள் மனவேதனையைச் சொல்லாமல் சொல்லியது.

"என்ன அநியாயம் இது? குழந்தைங்களைப் பெத்து பூப்போல வளர்த்து... அதுங்க எதிர்காலத்துக்காக, மாடா பேயா உழைத்து நம்ம ஆசைகளை மறந்து, அதுங்களுக்காக தூக்கம் தொலைக்கிற பெத்தவங்களை இப்படி முதியோர் இல்லத்துல விட எப்படி இந்திரா மனசு வருது? அதுங்க நல்ல நிலைமைக்கு வந்ததும் பெத்தவங்களை பாரமா நினைக்க எப்படி முடியுது? அறுபது வயசுக்குப் பிறகு அத்தனைபேருக்கும் குழந்தைப்பருவம் திரும்பிடுமே! அந்த வயசுல உழைச்சு சாப்பிட முடியுமா? எச்சில் இலையைப் போல தூக்கி எறிஞ்சிடற அளவுக்கா இந்தக் கால பசங்க அரக்கத்தனமா இருக்காங்க?"

"கடவுளே... இதுக்கா அழுதீங்க? முதல்ல சேனலை மாத்துங்க. இவங்கள்லாம் பாவப்பட்ட ஜென்மங்க! எல்லாருக்கும் நிஜந்தன் மாதிரி புள்ளைங்க அமைஞ்சிட்டா பிரச்சினையில்லே! இந்தாங்க... ஆறிடப் போகுது... குடிங்க!"

"கம்பீரமா வாழ்ந்துட்டு... கடைசி காலத்துல அநாதையா... அடுத்தவேளை சாப்பாட்டுக்கு யாரையோ எதிர்பார்த்து... கொடுமை இந்திரா! கடவுள் அந்த சூழ்நிலைய யாருக்கும் குடுக்கக் கூடாது. அதைவிட செத்துப் போயிடலாம்!"

"அப்பா...!"

அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே உள்ளே நுழைந்துக் கொண்டிருந்தான் நிஜந்தன்.

5

சட்டென கண்களை துடைத்து விட்டு சேனலை மாற்றி, "வாப்பா... இதென்ன கைல?" என்றார்.

"உங்களுக்குதாம்ப்பா... பிரியாணி!" கவரை அவரிடம் நீட்டினான்.

முகம் பூரிப்பில் விரிய... "எதுக்குப்பா நைட்ல?" கேட்டாரேயொழிய ஆர்வமாய் வாங்கிக் கொண்டார்.

"பரவாயில்லேப்பா... உங்களுக்கு பிரியாணின்னா ரொம்பப் பிடிக்குமே... ஆபீஸ் பக்கத்துல புதுசா ஒரு ரெஸ்டாரண்ட் திறந்திருக்காங்க... சம்பா ரைஸ் பிரியாணி. டேஸ்ட் எப்படின்னு சாப்பிட்டு பார்த்து சொல்லுங்க!" என்றவன் இன்னொரு கவரை டேபிள் மேல் வைத்தான்.

"மூணு நாளைக்கு முன்னாடிதானே பிரியாணி வாங்கித் தந்தே? இப்ப எதுக்கு? உங்கண்ணி வேற சப்பாத்தி செஞ்சிருக்கா!" என்றாள் இந்திரா.

"பரவாயில்லேம்மா... சப்பாத்திய நாளைக்குக் கூட சாப்பிட்டுக்கலாம்! அண்ணி எங்கேம்மா... அண்ணி?" குரல் கொடுத்தான்.

புடவைத் தலைப்பில் கைகளை துடைத்தபடி வேகமாய் வந்தாள். "என்ன தம்பி?"

"பிரியாவும், மகேஷும் எங்கே?"

"ஹோம் வொர்க் பண்ணிட்டிருக்காங்க!"

"இந்தாங்க... இந்த பிரியாணிய பசங்களுக்குக் குடுங்க!"

"எதுக்கு தம்பி வீணா? நான்தான் டிபன் பண்ணியிருக்கேனே?"

"அதை நாம சாப்பிடலாம் அண்ணி! அப்புறம் ஸ்நாக்ஸ் கவர் பைக்ல இருக்கும். எடுத்துக்குங்க. ஸ்கூல் மந்த்லி பீஸ் எப்ப கட்டணும்?"

"இன்னும் ரெண்டு நாள் இருக்கு."

"நாளைக்கு மறக்காம கேட்டு வாங்கிக்குங்க!"

**யோ! சைனா கபே**

ஆசிஷ் கபூர். இவர் தனக்காக உணவு சமைத்துக் கொள்ள மாட்டார். ஆனால், ஓட்டல் வர்த்தகத்தை தொடங்கிய பிறகு விதவிதமான உணவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் மிக பெரிய சாதனையையே படைத்துள்ளார். தனது ஓட்டலுக்கு 'யோ! சைனா கபே' என்று புதுமையான வகையில் பெயர் வைத்துள்ளார். இளைஞர்களை கவரும் வகையில் 10 கபேக்களை தொடங்கி உள்ளார். இவற்றுக்கு இவர் வைத்த முதலீடு ரூ.25 கோடி.



மற்ற ஓட்டல்களை காட்டிலும் இவரது ரெஸ்டாரண்டில் கிடைக்கும் விதவிதமான உணவுகளுக்கு 20 சதவீதம் கூடுதல் கட்டணமே வசூலிக்கிறார். இருந்தாலும், வாடிக்கையாளர்கள் கூட்டம் குறைவதில்லை. நமக்கு என்ன வேண்டுமோ? அந்த உணவு வகைகள் இவரது ரெஸ்டாரண்டில் தாராளமாக கிடைக்கும். எல்லாமே புதிது. வித்தியாசமானது.

உணவுப் பொருட்களில் சேர்க்கும் வாசனைப் பொருட்கள் எல்லாமே வெளிநாடுகளில் இருந்து விமானம் மூலம்தான் வரவழைக்கிறார். சமையலர் கூட வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவர் தான். ருசியும், தரமும் தனி ரகம் என்பதால் இளைஞர்கள் வட்டாரம், குறிப்பாக கல்லூரி மாணவ - மாணவிகள் இவரது ரெஸ்டாரண்டை மொய்க்கிறார்கள்.

"ம்" என்றான் சற்றே சங்கடத்துடன்.

டவலும், லுங்கியும் எடுத்துக் கொண்டு பாத்ருமிற்குள் சென்றான்.

"தம்பி உடனே சாப்பிடுவீங்களா! இல்லே லேட்டாகுமா? சொன்னா சூடா சப்பாத்தி போட்டுவேன்."

"இப்ப வேணாம்மண்ணி. அரைமணி நேரம் போகட்டும். டி.வி.யில கிரிக்கெட் மாட்ச் பார்க்கணும்!"

"சரி" என்றாள் சிரித்தபடி.

"ஐ... பிரியாணி..." குழந்தைகளின் உற்சாகக் குரல்கள் காதில் விழ... பொன்னிலன் மனைவியை பார்த்து பெருமிதமாய் சிரித்தார்.

"அண்ணன் பிள்ளைங்களை தன் சொந்த பிள்ளைபோல பார்த்துக் கொண்டாடற மனசு யாருக்கு வரும்!"

"அதெல்லாம் இருக்கட்டும். வயசாகறது எதுவும் தெரியலையா? வாயைக் கட்ட மாட்டேங்கறீங்க. எப்ப பார்த்தாலும் பிரியாணி, பிரியாணின்னு நாக்கைத் தொங்கப் போட்டு அலையறீங்க. நைட்ல சாப்பிட்டா ஜீரணமாகுமா?"

"நானாக் கேட்டேன்! என் புள்ளை ஆசைப்பட்டு வாங்கி வந்திருக்கான். அதென்னமோ சின்ன வயசுலேர்ந்தே பிரியாணிக்கு நான் அடிமையாகிட்டேன். சாப்பிட்டு... நல்லா வெந்நீர் குடிச்சிடறேன்..."

"கொஞ்சம் நாக்கை கட்டிப் போடுங்க... சொல்லிட்டேன்!"

"பாத்துக்கலாம்... குடிக்க தண்ணி எடுத்துட்டு வா! ஆறிடப் போகுது!"

செல்லக் கோபமும், குறுஞ்சிரிப்புமாக கிச்சனை நோக்கிச் சென்றாள் இந்திரா.

"அத்தை... தக்காளித் தொக்கு செஞ்சிட்டேன். சப்பாத்தி போடறவா...?"

"சரி... போடு... நானும் சாப்பிட்டுக்கறேன்."

* * *

அயர்ன் பண்ணிய உடைகளை எடுத்துக் கொண்டு நிஜந்தன் அறைக்குச் சென்றாள்.

கண்ணாடி முன் நின்று தலை சீவிக் கொண்டிருந்தான் நிஜந்தன்.

"தம்பி... இந்தாங்க. அப்படியே துவைக்க வேண்டிய துணிகளை குடுத்துடுங்க!"

"தாங்க்ஸ் அண்ணி. சீக்கிரமே ஒரு வாஷிங் மெஷின் வாங்கிடணும். எல்லா வேலையும் செஞ்சுக்கிட்டு, துணியும் துவைச்சுக்கிட்டு... கஷ்டமாயில்லையா அண்ணி?"

"எல்லாரும் பண்ற வேலைதானே தம்பி! வாஷிங் மெஷினெல்லாம் வேணாம். கரண்ட் பில் அதிகமாகும். எப்படியும் உங்களுக்கு கல்யாணமாகும் போது சீர்வரிசையா வாஷிங் மெஷினும் வந்துடப் போகுது!"

நிஜந்தன் பதில் சொல்லாமல் சிரித்தான்.

"டிபன் எடுத்து வைக்கவா தம்பி?"

"சப்பாத்திதானே?"

"இல்லே... வெங்காய தோசை!"

"ஏன் அண்ணி... சப்பாத்தி மாவு மீதமாயிருக்குமே!"

"அதுக்காக! அதை நான் சாப்பிட்டுக்கறேன்."

"என்ன பண்றார் சார்?"

சுசீந்திரனை அவன் எப்போதும் நக்கலாக அப்படி அழைப்பது வழக்கம்.

"நைட் ஷிப்ட்! காலைல ஏழு மணிக்குத்தான் வந்தார். தூங்கறார்."

"நிதானத்தில்தான் வந்தாரா?"

"ஆமாம் தம்பி... மூணு நாளா குடிக்கலை."

"இப்படியே நீடிச்சா சந்தோஷம். இந்தாங்க... பசங்களுக்கு பீஸ் கட்டிடுங்க!"

அவன் நீட்டிய பணத்தை சங்கோஜத்துடன் வாங்கிக் கொண்ட வைஷ்ணவி, "தாங்க்ஸ் தம்பி!" என்றாள்.

"அதெல்லாம் எதுக்கு... என் அண்ணன் பசங்களுக்காக செய்யறேன்... டிபன் எடுத்து வச்சிடுங்க அண்ணி..."

"சரிப்பா!"

நிஜந்தன் அலுவலகம் சென்றபின், எல்லோரும் காலை டிபன் சாப்பிட்டானதும், சுசீந்திரன் நண்பனை பார்த்து வர கிளம்பியதும், வைஷ்ணவி துணிகளை துவைக்க ஆரம்பித்தாள்.

காலையிலிருந்தே இந்திராவின் முகம் இறுக்கமாயிருந்தது. ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

துணிகளை காயப்போட மொட்டை மாடிக்குச் சென்றாள் வைஷ்ணவி.

சற்று நேரத்தில் இந்திராவும் மேலே ஏறி வந்தாள்.

ஆச்சர்யத்துடன் பார்த்தாள் மருமகள்.

"என்னத்தை இங்கே! வெயில் அதிகமாயிருக்கு... காலு செருப்புக் கூட போடாம வந்திருக்கீங்க? இந்தாங்க, இதை போடுங்க முதல்ல..." அக்கறையுடன் தன்



செருப்பை கழற்றி... கொடுத்தாள்.

"வேணாம்... இந்த அக்கறை என் தம்பிய கவனிக்கறதுலே காட்டு!"

வைஷ்ணவிக்கு மாமியார் சொல்வதன் அர்த்தம் ஏதும் புரியாமல், கையிலிருந்த துணியை பக்கெட்டில் போட்டு விட்டு, அவள் முகத்தை ஆழமாகப் பார்த்தாள்.

"என்ன அத்தே... ஏதோ மாதிரி பேசறீங்க!"

"இதோ பார்... எனக்கு சுத்தி வளைச்சு பேசத் தெரியாது. இந்த காலப் பொண்ணுங்க யாருமே சரியில்லே. என்ன இருந்தாலும்... நிஜந்தன் உன் மச்சினனா இருந்தாலும், உன்னை விட ஒரு வயசுதான் சின்னவன். அவனோட எல்லா வேலையும் எடுத்து செய்யறே... வாஸ்தவம்தான். ஆனா, அவன் [illegible] வந்துட்டு... வெட்டியா என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு? இன்னைக்கு இது சாதாரணமாத் தெரியும். நாளைக்கு அவனுக்கு கல்யாணமாகி... இதே மாதிரி பேசிக்கிட்டிருந்தா... வர்றவ எந்த மாதிரி எடுத்துப்பா?"

"அ... அ... த்... தே!" உடம்பெல்லாம் நடுங்கியது.

"என்னத்தை... எப்படி மனசு வந்தது உங்களுக்கு? தப்பா நினைக்கக் கூட முடியுதா உங்களால! அப்படி என்ன நான்!" கட்டுக்கடங்காமல் கண்ணீர் கொப்பளித்தது.

"இதோ பாரு! நான் சந்தேகப்பட்டு சொல்லலே. உன் நன்மைக்காகத்தான் சொல்றேன். மத்தவங்க கண்ணுக்கு தப்பாக் கூடாதில்லையா! புரிஞ்சுக்கடி."

"சரி அத்தே!" என்றாள் மனபாரத்துடன்.

பாரம் இறங்கிய நிம்மதியுடன் படியிறங்கினாள் இந்திரா.

* * *

அன்றிலிருந்து மிக அவசியப்பட்டால் மட்டுமே நிஜந்தனிடம் பேசினாள்.

மதியவேளையில் [illegible] செல்ல ஆரம்பித்தாள். காரணம் சில நேரங்களில் நிஜந்தனிற்கு ஷிப்ட் மாறும். அந்நேரங்களில் பகல் முழுக்க அவன் வீட்டிலேயே இருப்பான்.

இந்திரா சந்தேகப் பார்வை பார்க்க ஆரம்பித்து விட்டாள். அவளை வேறு [illegible]

அன்றிரவு அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

வாசலில் பைக் வந்து நிற்கும் சத்தம் கேட்க, கையிலிருந்த சப்பாத்தி [illegible] வைத்து விட்டு வாசலுக்கு ஓடினாள் வைஷ்ணவி.

"யாரு... இந்த நேரத்துல?" [illegible] பார்த்து விசாரித்தார் பொன்னிலன்.

"அட... அமுதினி... வாங்க... வாங்க... உள்ளே வாங்க... மாமா அமுதினியும் மாப்பிள்ளையும் வந்திருக்காங்க!"

வைஷ்ணவி சொன்னதும் அந்த சின்ன அறையில் பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

## 6

"வாங்க... வாங்க மாப்பிள்ளை... வைஷு... ரெண்டுபேருக்கும் தட்டு வையம்மா... உக்காருங்க மாப்பிள்ளை அமுதா உக்காரும்மா..." பொன்னிலன் பாதி சாப்பாட்டில் எழுந்தார் மரியாதை நிமித்தமாக.

நிஜந்தனும் "எப்படி மாமா இருக்கீங்க?" என்றான்.

இந்திராவுக்குத்தான் அடிவயிற்றை கவ்வி இழுத்தாற்போல் அவஸ்தை!

காரணம்... வந்திருந்த இருவரின் முகமும் அதில் தெரிந்த விரக்தியும்!

அமுதினி கல்யாணத்தின் போது [illegible] போட்டிருந்த... அதிகமா இதுவரை பார்த்திராத கோபமுகத்தோடு.

வைஷ்ணவி இரண்டு தட்டுக்களை கொண்டு வந்து வைத்தாள்.

"போதுங்க... ஏற்கனவே என் தலையிலே நல்லா போட்டு அனுப்பிச்சாச்சு. இப்ப எதுக்கு தட்டு வச்சு நல்லவங்க மாதிரி நடிக்கறீங்க!"

அவன் வார்த்தையால் அத்தனைபேரும் [illegible] பார்த்துக் கொண்டனர்.

அமுதினி அழ ஆரம்பித்தாள்.

"மா... மாப்பிள்ளை... எ... என்னாச்சு!" பொன்னிலன் பதறினார்.

"மாப்பிள்ளையா? உன் பொண்ணுக்குதான் எத்தனையாவது மாப்பிள்ளை" மரியாதை இறங்கியது.

"......!!"


நிஜந்தன் முகம் சிவந்தான்.

"ஹலோ... என்ன? என்ன பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசறீங்களா?"

## ரூ.4.64 கோடியில் ரோல்ஸ் ராய்ஸ் கார்

ரோல்ஸ் ராய்ஸ் கார் நிறுவனம், இந்தியாவில் பாந்தம் சீரிஸ் II என்ற அதிநவீன காரை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சொகுசு கார் 2003-ம் ஆண்டே விற்பனைக்கு வந்து விட்டது. இதன் விலை ரூ.4 கோடியே 64 லட்சமாகும்.

இந்த காரின் முன் விளக்குகள் (லெட் ஹெட்லேம்ப்ஸ்) வெள்ளை நிறத்தில் பளிச்சிடும். காருக்குள் விசாலமான இடமிருப்பதால் ஓட்டுநர் சோர்வில்லாமல் ஓட்டலாம். இந்திய மார்க்கெட்டை தொடர்ந்து கைப்பற்றுவதற்காக இந்த



சொகுசு காரை ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்த சொகுசு காருக்கு நல்ல வரவேற்பும் இருப்பதாக ஆசிய ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார் மார்க்கெட்டிங் பொது மேலாளர் ஹாபிர்டு ஹெசனோரி தெரிவித்துள்ளார். இந்தியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆர்டர்கள் வந்திருப்பதாகவும் இவர் கூறுகிறார். தற்போது மும்பை, டெல்லி, ஐதராபாத் ஆகிய 3 இடங்களில் மட்டுமே இந்த சொகுசு காருக்கான ஷோரூம் சம்பத்தில் தொடங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கும் இவர், மேலும் ஷோரூமை விரிவாக்கம் செய்ய விரைவில் சண்டிகாரிலும், மும்பைக்கு அருகிலும் இரு ஷோரூம்களை தொடங்க இருப்பதாகவும் சொல்கிறார்.

“நிஜந்தா... நீ சும்மாயிருப்பா... அமுதினி என்னடி ஆச்சு?” அழுது விடுபவள் போல் கேட்டாள் இந்திரா.

“என ஒண்ணும் தெரியாத மாதிரி நடிக்கிறீங்க! உன் பொண்ணோட யோக்கியதைய மறைச்சு என் தலையில ஏமாத்தி கட்டி வச்சது எதுவும் தெரியாதா?”

“...........?!” நெஞ்சினுள் கும்மென வந்து விழுந்தது அடி.

நிஜந்தன் ஜெர்க் ஆனான்.

“இதுவே உங்க பையனுக்கு எவனையோ லவ் பண்ணி... சேரழிஞ்சப் பொண்ணை தெரிஞ்சே கட்டி வைப்பீங்களா?”

நிஜந்தன் அம்மாவிடம், “என்னம்மா சொல்றார் இவரு?” என்றான்.

“மாப்பிள்ளை நீங்க ஏதோ தப்பா புரிஞ்சுக்கிட்டு...”

“அடச்சீ... பெரிய மனுஷனாயா நீ? எதுவும் தெரியாது உனக்கு? தேவனோட அப்பன் உன்னைத் தேடி வந்து அசிங்கப்படுத்தலே? உன் பொண்ணை அடக்கி வை... இல்லேன்னா நடுத்தெருவுல இழுத்து சிரிக்க வச்சிடுவேன்னு காறி துப்பலே?”

“...........?!”

“தேவன் யாருத் தெரியுமா? என் ப்ரண்ட். அவன் காதல் விவகாரம் முழுக்கவே எனக்குத் தெரியும். அவன் தன்னோட லவ்வர் பற்றி... அவளோட எப்படி எல்லாம் நெருக்கமா இருந்தாங்கர வரை மனசுவிட்டு பேசறவன். ஆனா, அது உன் பொண்ணுன்னு எனக்குத் தெரியாது. லவ் பெய்லியர்னு அவன் கல்யாணத்துக்கு கூட வரலே. இப்பதான் எதேச்சையா அவன் வீட்டுக்குப் போயிருந்தப்ப... உன் பொண்ணும் அவனும் சேர்ந்து எடுத்திருந்த போட்டோவை பார்த்தேன். எப்படி இருக்கும் எனக்கு?”

அவன் சொல்ல... சொல்ல... நிஜந்தன் ஆத்திரத்தின் உச்சிக்கேப் போனான்.

“இல்லீங்க... நான் டீசன்டாதான் பழகினேன். நான் தப்பா எதுவும்...”

அமுதினி சொல்லி முடிக்கவில்லை... ஓங்கி அறைந்தான் ஆதித்யா.

“சீ... வாய மூடு... இன்னொரு முறை பொய் பேசினியோ... உன்னைப் பெத்தவங்க முன்னாலேயே கொன்னுப் போட்டுருவேன். கல்யாணத்துக்கு முன்னாடி ஒரே ஒரு முறை உன்னை வெளியே தனியே சந்திச்சு பேசினப்ப... நான் உண்மைய சொன்னப்ப... நீயும் ஏன் சொல்லலே? மறைச்சிட்டியே... முழுசா மறைச்சிட்டியே... தப்புப் பண்ணினதாலதானே?”

“இல்லீங்க... சத்தியமா நான் அப்படிப்பட்ட பொண்ணு இல்லீங்க. காதலிச்சது... நி... நிஜம்தான்... ஆனா... நீங்க சொல்றமாதிரி எல்லாம் எதுவும் இல்லீங்க...”

“நீ யாருன்னு தெரியறதுக்கு முன்னாடியே, நம்ம கல்யாணம் நடக்கறதுக்கு முன்னாடியே... தேவன அவனோட லவ்வரோட... ஐ மீன் உன்னோட, எப்படி எல்லாம் ஜாலியா இருந்தான்னு சந்தோஷமா சொல்லுவான். அது பொய்யா?”

எல்லா உண்மைகளும் சொல்வதற்கு இல்லை. காலம் தவறிய உண்மை, பொய்யைப் போல நியது என்ற நிஜம்... உண்மையிலேயே அமுதினி வாழ்க்கையை சுட்டு விட்டது.

தேவன் மட்டுமல்ல... உலகத்தில ஆண்களில் பெரும்பாலோர் தன் காதலி மூச்சு விட்டால் கூட முத்தம் கொடுத்ததாய் பீற்றிக் கொள்வது அவர்களின் மனப்பாங்கு. சக நண்பர்களிடம் தன் ஆண்மையின் முன் அவள் வீழ்ந்து விட்டாள் என்று வெட்கத்துடனாவது சொல்லாத ஆண்கள் உண்டா?

‘ஆனால், தேவனும் அந்தக் கூட்டத்தில ஒருவனா?’

அமுதினி மனம் நொந்து அழுதாள்.

“நான் எப்படி உங்களுக்கு புரிய வைப்பேன்னு தெரியலே! வேணும்னா... தேவனை நேர்ல வரவழைச்சு கேளுங்க...” அழுதபடி சொன்னாள்.

“ஏன்?” மனைவியை உற்றுப் பார்த்தான் ஆதித்யா.

“அவனைப் பார்க்கணும்போல இருக்கா?”

“.........?!” ஆயிரம் ஊசிகளால் இதயத்தை துளைத்தது போலிருந்தது வார்த்தை.

“மாப்பிள்ளை... எல்லாம் தப்புதான். என் பொண்ணுக்கு கல்யாணம் ஆகணும்னு... எல்லாப் பெத்தவங்களையும் போல நாங்களும், அவ காதல் விஷயத்தை மறைச்சு கல்யாணம் பண்ணி வச்சோம். எங்களை மன்னிச்சிடுங்க. அமுதினியப் பத்தி எங்களுக்கு நல்லாவேத் தெரியும். அவ எந்த தப்பும் பண்ண மாட்டா. அவளை தண்டிச்சிடாதீங்க மாப்பிள்ளை. உங்க காலைத் தொட்டுக் கேட்டுக்கறேன்.”

காலில் விழப்போன பொன்னிலனை தடுத்து நிறுத்தினான் ஆதித்யா.

“யோவ்... விழாதேய்யா! ஏற்கனவே உன் பொண்ணை கட்டி வச்சு தண்டனை குடுத்துட்டே! இப்ப நீ வேற கால்ல விழுந்து என் தலையில பாவச்சுமைய ஏத்தாதே! இந்தக் கேவலமான விஷயம் எங்க வீட்டுக்கு கூடத் தெரியாது. தெரிஞ்சா உயிரையே விட்ருவாங்க. அவளை இங்கே விட்டுட்டுப் போனா காரணம் சொல்ல வேண்டி வரும். அதனால கூட்டிட்டுதான் போறேன். ஆனா, பொண்ணை பார்க்க வர்றேன்னுட்டு யாராவது வீட்டுப்பக்கம் வந்தீங்க... அசிங்கப்படுவீங்க...” விரல் நீட்டி எச்சரித்தவன் அமுதினியைப் பார்த்து, “ஏய்...ச்சீ... கிளம்பு!” என்றான் வெறுப்புடன்.

அமுதினிக்கு அவமானமும் சேர்ந்துக் கொள்ள யாரையும் ஏறிட்டுப் பார்க்கக்கூட திராணியின்றி நனைந்த ஆடாய் அவன் பின்னேச் சென்றாள்.

சற்று நேரத்தில் பைக் உறுமும் சப்தம்!

அந்த அறைக்குள் இனம்புரியா சங்கடமும் மவுனமும் நீடித்தது.

நிஜந்தன் எல்லோரையும் பார்த்தான்.

“என்னப்பா இதெல்லாம்?”

“அ...அ... அது... வந்து!”

“இந்த வீட்ல என்னென்னமோ நடந்திருக்கு. ஆனா, இந்த வீட்டையேத் தாங்கற எனக்கு எதுவுமே தெரியலே...”

“...........?!”

“அந்த ஆதித்யா இவ்வளவு கேவலமா பேசிட்டுப் போறானே... அது தப்புன்னுச் சொல்லுங்க பார்க்கலாம்?”

“தேவன்னு ஒரு கேரக்டர், அவங்க அப்பான்னு ஒரு கேரக்டர்... எப்படிப்பா மறைக்க முடிஞ்சது என்கிட்ட?”

“நான் விசாரிச்ச வரைக்கும் ஆதித்யா ரொம்ப நல்லவன். அவனுக்குப் போய்... அமுதினி மாதிரி ஒருத்தி வொய்ப்பன்னா... அவன் ரொம்பவே பாவம்!”

“நி...ஜ..ந்..தா!”

“என்னப்பா அலர்றீங்க? ஆபீஸ்லேயும் வெளியிலேயும் லோன் வாங்கி... லட்சக்கணக்குல செலவு பண்ணி கொழுப்பெடுத்து ஊர்மெய்ஞ்ச உங்கப் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி வச்சது எப்பேர்ப்பட்ட தப்புன்னு இப்பதான் உறைக்குது!”

“என்னப்பா இப்படியெல்லாம் பேசறே?” இந்திரா வேதனையுடன் கேட்டாள்.

“பின்னே எப்படிம்மா பேசறது? எவன் கூடவோ வருஷக்கணக்குல பழகி திரிஞ்சி, அவனை உதறிவிட்டு இன்னொருத்தனைக் கட்டிக்கிட்ட உன் பொண்ணை சீதாதேவின்னு சொல்லவா?” நக்கலாகவும், கோபமாகவும் வெளிப்பட்டன வார்த்தைகள்.


“இதுவே ஆதித்யா எடத்துல நான் இருந்திருந்தா... ‘இந்தாய்யா... நீயே உன் பொண்ணை வச்சுக்க’ன்னு பொறந்த

வீட்ல விட்டுட்டு... வேற நல்லப் பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிப்பேன். மறைச்சு வச்சு கல்யாணம் பண்ணி வச்சாங்களே... அவங்களையும் அழைச்சிருப்பேன்!"

நெருப்பாய் விழுந்த வார்த்தையில் துடிதுடித்துப் போயினர் பெற்றவர்கள்.

கண்களில் கண்ணீர் கொட்டியது. அடிபட்ட உணர்வில் அவமானப்பட்டு நின்றனர்.

நிஜந்தன் முறைத்து விட்டு, காலால் சாப்பாட்டு தட்டை எட்டி உதைத்து விட்டு வெளியேறினான்.



## 7

வீட்டுச்சூழல் அடியோடு மாறி விட்டது. நிஜந்தன் யாரிடமும் பேசுவதில்லை. குறிப்பாக அம்மா, அப்பாவிடம் பேசுவதில்லை. ஒரு பெரிய விஷயத்தை தன்னிடம் சொல்லாமல் மறைத்ததும், அமுதினியின் நடத்தையும் அவனை முகம் சுளிக்க வைத்தது. அவன் கோபமுகம் பார்த்து நெருங்கவே பயந்தனர் அவர்களும்.



வைஷ்ணவியிடம் மட்டும், உடை, உணவு சம்பந்தமாய் ஓரிரு வார்த்தைகள் பேசுவான்.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை அம்மா, அப்பாவுக்கும், குழந்தைகளுக்கும் ஸ்நாக்ஸ் வாங்கி வருவான். அதுவும் நின்று போனது.

வாரம் ஒரு முறையாவது பிரியாணி வாங்கி வந்து அப்பாவின் முகம் பார்த்து சந்தோஷப்படுவான். அதுவும் இல்லையென்றானது.

அமுதினியிடமிருந்து எந்தவித தகவலும் இல்லை. ஒரு போன் கூட வரவில்லை. பண்ணவும் பயமாக இருந்தது. அதைப் பற்றி நிஜந்தனிடம் பேசவும் முடியாமல் போனது.

சுசீந்திரனோ அந்த வீட்டிற்கும் தனக்கும் சம்பந்தமில்லாததுப் போல நடந்துக் கொண்டான்.

வைஷ்ணவிக்கு எதிர்காலத்தை நினைத்தால் மலைப்பாக இருந்தது.

பெரியவள் பிரியாவுக்கு பத்து வயதாகிறது. வயதுக்கு மீறிய வளர்ச்சி அடிவயிற்றில் பயம் பந்துபோல் உருண்டது.

கணவனின் பொறுப்பற்ற செயலும், வீட்டின் சூழ்நிலையும் கண்களை இருள் சூழ்ந்தது.

அன்று...!

நிஜந்தனுக்கு விடுமுறை. வீட்டில் இருந்தான். அன்றைக்குப் பார்த்து சுசீந்திரனுக்கும் விடுமுறை. காலையிலேயே நன்றாக குடித்து விட்டு தெருவை அளந்தபடி தடுமாறி வந்தான்.

சரியாய் ஹாலுக்கு வந்தவன்... கபகபவென வாந்தி எடுத்தான்.

நாற்றம் வீட்டை சூழ்ந்துக் கொள்ள... குப்பென ஆத்திரம் தலைக்கேறியது நிஜந்தனுக்கு.

"ஏய்... என்ன இது?"

"எது?"

"இந்தக் கருமத்தைதான் கேக்கறேன்"

"இது... கூழத் தெழியாதா? வாந்தி...!" நக்கலாய் சொன்னான்.

"செக்யூரிட்டி வேலை பார்க்கும்போதே... உனக்கு இவ்வளவு வாய்க் கொழுப்புன்னா... என்னை மாதிரி வேலைக்குப் போய் கைநிறைய சம்பாதிச்சா என்னல்லாம் பேசுவே?"

"திமிழாடா... சம்பா... திக்கிற திமிழா... போழா..." வாய்க் குழறியது.

"ஆமான்டா... அந்த சம்பாத்தியத்துல

தான்டா உன் புள்ளைங்களே படிக்குது!"

சட்டென நிஜந்தனின் சட்டையைப் பற்றி பளாரென அறைந்தான் சுசீந்திரன்.

"சொல்லி... காமுட்றியா?"

"ஏய்... அதுக்கேன் அடிச்சே? உனக்கு மரியாதையே இல்லைடா குடிகார நாயே... உன்னை...!" அவனை உலுக்கித் தள்ளி விட்டான் நிஜந்தன்.

சுவற்றில் மோதி கீழே விழ... உதட்டில் ரத்தம் வழிந்தது.

இந்திரா பயந்து ஓடி வந்தாள்.

"ஐயோ... சுசீந்திரா... என்ன நிஜந்தா இப்படிப் பண்ணிட்டே! அவன் போதையில பேசறதையெல்லாம் ஒரு பொருட்டா எடுத்துக்கலாமா!"

"............?!"

மாடியில் துணி காயப் போட்டு விட்டு இறங்கி வந்த வைஷ்ணவி கணவனின் கோலம் பார்த்து அலறி விட்டாள்.

"ஐயோ... என்ன ஆச்சு? ரத்தமெல்லாம் வருதே!"

"அழுச்சிட்டான்... அவனை சும்மா.. விழ மாத்தேன்... யேய்..."

"தம்பி... நீங்களா அவரை அடிச்சீங்க?" மச்சினனை நேருக்கு நேர் பார்த்துக் கேட்டாள்.

"அவனை சாகடிக்காம விட்டேன்னு சந்தோஷப்படுங்க. குடும்பத்தை காப்பாத்த வக்கில்லாதவன் என்னைப் பார்த்து... ச்சே!"

"நிறுத்துங்க..."

"............?!"

"கூடப் பொறந்த அண்ணன்ங்கற மரியாதை இல்லாம அவன் இவன்னுப் பேசறீங்க! இந்த குடும்பத்தை தாங்கறதாலே... எல்லாரும் உங்களுக்கு அடிமையாட்டணுமா?"

கணவனை மட்டமாய் பேசிய வார்த்தையின் வலி தந்த ஆவேசம் வைஷ்ணவியின் பேச்சில் வெளிப்பட்டது.

நிஜந்தனுக்கு கோபம் மேலும் கூடியது.

"யாரு அடிமையாயிருக்கச் சொன்னது? அவரு உங்களை ராணி மாதிரி வச்சு காப்பாத்துவாரு... வேற வீட்டை பார்த்துக்கிட்டுப் போங்க!"

"............?!"

பதிலின்றி நின்றிருந்த மருமகளை உலுக்கினாள் இந்திரா.

"அறிவிருக்காடி உனக்கு? பிரச்சினையை ஏன் பெருசாக்கறே?"

"அதுக்காக என்னப் பேசினாலும் பொறுத்துக்கிட்டுப் போகணுமா? கைய நீட்டி அடிக்கிறாரு!"

"வக்கில்லாதவங்க பொறுத்துதான் ஆகணும்! சுசீந்திரன் பண்ணினதும் தப்புதானே! அப்பா... நிஜந்தா... நீ எதுவும் மனசுல வச்சுக்காதே! போதையில ஏதோப் பண்ணிட்டான்."

நிஜந்தன் முகம் இறுகியது.

"இல்லே... யாரோட சமாதானமும் எனக்குத் தேவையில்லே! சொந்த பந்தங்களுக்காக நான் உழைச்சிக் கொட்டினதெல்லாம் போதும். இனி எனக்காக வாழப் போகிறேன். இந்த வீட்டுக்கு அட்வான்ஸ் குடுத்து வாடகை, கரண்ட் பில் எல்லாமே நான்தான் கட்டறேன். மாசம் ரெண்டாயிரம் ரூபாய் குடுத்துட்டு நாலுபேர் சாப்பிட்டுக்கறாங்க. அந்தப் பணத்தை வச்சுக்கிட்டு அவங்க தனியே குடும்பம் நடத்துவாங்க. அந்த நம்பிக்கை எனக்கிருக்கு." இறுதியாய் சொல்லிவிட்டு வெளியேறினான் நிஜந்தன்.

எது நடக்கக் கூடாது என்று நினைத்தாளோ அதுவே நடந்துவிட இடிந்துப் போய் அமர்ந்து விட்டாள் இந்திரா.

"அவசரப்பட்டுட்டியே பாவி! அண்ணன் தம்பிங்க அடிச்சிக்கட்டும், குத்திக்கட்டும். நீ ஏன் நடுவுலே வந்தே? போச்சு... இந்தக் குடும்பமே பிரிஞ்சுப் போச்சு."

"என்னை ஏன் திட்டறீங்க? அவரைப் பாருங்க... ரத்தம் வர்ற அளவுக்கு அடிச்சிருக்கார். துடைச்சிப் போட்டுட்டு அமைதியா இருக்கச் சொல்றீங்களா? எதுக்கெடுத்தாலும் வக்கில்லாதவன்னு குத்திக் காட்டினா... வலிக்காதா? ஏன் நீங்களுந்தான் சொன்னீங்க?"

"ஆமான்டி... எதுக்குச் சொன்னேன்? உங்களுக்கு சப்போர்ட்டா பேசினா அவனுக்கு இன்னும் கோபம் அதிகமாகுமே! குடிகார புருஷனையும், ரெண்டு புள்ளைங்களையும் வச்சுக்கிட்டு, வீம்பையும் ரோஷத்தையும் காட்டலாமா? நான் அப்படி இப்படிப் பேசினாலும் உங்க எதிர்காலத்தை நினைச்சு ரொம்ப கவலைப்படுவேன்டி. ஒண்டிக்கிட்டிருக்கிற நமக்கெல்லாம் வலியோ, வேதனையோ வந்துடக் கூடாது. இப்ப என்னடிப் பண்ணப் போறே?" கண்களில் பயம் நிறைந்து பேசினாள்.

"பரவாயில்லே அத்தே? காலத்துக்கும் இவரையே நம்பி வாழ்ந்துட முடியுமா? கடல்ல தவறி விழுந்தா... கரையேற கையகாலை உதைச்சி தப்பிக்க முயற்சி பண்ணித்தானே ஆகணும்! இவருக்கும் பொறுப்பு வரும்! வாழ்க்கையும், உறவுகளும் ஒரே பாதையிலே போயிட்டிருக்காது. போக வேண்டிய இடத்தைப் போய்ச் சேரணும்னா... மேடு, பள்ளம், வளைவு, நெளிவுன்னு ஏறி இறங்கிதானே ஆகணும்? நான் வருத்தப்படலே அத்தே!"

"பேரப்புள்ளைங்களைப் பிரிஞ்சி வருத்தப்பட்டுத்தானே ஆகணும்?" கண்கள் கசிந்தன.

சற்றுநேரத்தில் வெளியில் சென்றிருந்த பொன்னிலன் வீடு திரும்ப... நடந்த விஷயங்கள் அறிந்து... கலவரமானார்.

"இந்திரா... எனக்கென்னவோ சரியாப் படலே... இந்த குடும்பத்திலே நடக்கக் கூடாத ஏதோ ஒண்ணு நடக்கப் போகுதுன்னு உள் மனசு அடிச்சுக்குது!"

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. அண்ணன் தம்பி சண்டை இல்லாத வீடு உண்டா? நீங்க பாட்டுக்கு தேவையில்லாம கற்பனை பண்ணி உடம்பைக் கெடுத்துக்காதீங்க. எல்லாம் சரியாகும்ங்க. நிஜந்தன் மனசு மாறுவான் பாருங்க!"

"முதல்ல அவனை கவனிச்சுக்க ஒருத்தி வரணும். வர்றவளால இந்தக் குடும்பம் ஒண்ணு சேரட்டும். தரகர்கிட்ட அவனோட ஜாதகத்தை குடுக்கலாம். இன்னைக்கு நாள் நல்லாயிருக்காப் பாரு!"

8

ஒரே வாரத்தில் ஒரு அறை, கிச்சன், பாத்ரூம் என அடங்கிய சிறிய வீட்டிற்கு குடிபெயர்ந்தாள் வைஷ்ணவி.

தடுக்கவும் முடியாமல், அனுப்பவும் முடியாமல் வேதனைப்பட்டனர் பெரியவர்கள்.

நிஜந்தன் எதையும் கண்டு கொள்ளவில்லை.

இரண்டாயிரம் ரூபாய் வாடகை, மின்சார கட்டணம், சாப்பாடு, வைத்திய செலவு, பள்ளிக்கட்டணம் என்று எப்படி சமாளிக்கப் போகிறார்கள்?

வீடு அதே ஏரியாவில், நடந்து செல்லும் தூரத்திலேயே அமைந்ததால் பேரப்பிள்ளைகளை பார்த்து விட்டு வந்தனர்.

இருவருக்குமே... மூப்பினால் ஏற்பட்ட வியாதிகள் இருந்தது. மருந்து மாத்திரைகள் வாங்க எழுநூறு, எந்நூறு ஆகும். அதையெல்லாம் நிஜந்தனே கவனித்துக் கொள்வான். இப்போது அதுவும் நின்று விட்டது. இதற்காக பிள்ளையிடம் நிற்க

### பூப்பறிக்கும் ரோபோக்கள்

மனிதனின் எந்தவொரு நடவடிக்கையையும் எளிதாக்கி சுலபமான முறையில் செய்வதற்காக கண்டறியப்பட்டவைதான் ரோபோக்கள். இந்த ரோபோக்களின் பயன்பாடு எல்லாத் துறைகளிலும் நீண்டு விட்டது. இந்தியாவை தவிர மேலை நாடுகளில் ரோபோக்களின் உபயோகம் அதிகமாக உள்ளது. மனிதன் செய்யும் எந்த வேலையையும் இந்த ரோபோக்களை வைத்து விஞ்ஞானிகள் செய்து விடுகிறார்கள். குறிப்பாக, விதவிதமான ரோபோக்களை உருவாக்குவதில் ஜப்பான் முன்னணியில் நிற்கிறது.



இந்த ரோபோக்களின் கண்டுபிடிப்பால் இன்று ஒவ்வொரு துறையும், பல புதிய பரிமாணங்களுடன் வளர்ச்சிக் கண்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக தற்போது மென்மையான பூக்களையும் இலகுவாகவும் எவ்விதமான சேதமின்றியும் பறிப்பதற்காக விசேஷமான ரோபோ கைகளை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

மென்மையான தன்மை கொண்ட இக்கைகள் மீள்தன்மை கொண்டவையாக காணப்படுவதால் பூக்களுக்கு எந்த சேதமும் ஏற்படுவதில்லை. பூக்களை மென்மையாக பற்றியவாறு இந்த ரோபோக்கள் பூக்களை பறித்து விடுகின்றன. இனி, பூக்களை பறிக்க பெண்களின் கரங்கள் தேவையில்லை. ரோபோக்களின் கரங்களே போதும். இந்த நிலை விரைவில இந்தியாவுக்கும் வந்தால ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

மனமில்லை. முகம் கொடுத்துப் பேசாத பிள்ளையிடம் வலியப் போய் பேச வயதும் இடம் தரவில்லை.

ஒரு முடிவுக்கு வந்த பொன்னீலன் மனைவியிடம் வெளிப்படுத்தினார்.

"இந்திரா... நான்... நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்."

"என்னங்க?"

"ஆனா, அதை மறுத்து நீ எதுவும் சொல்லக் கூடாது."

"என்னன்னு சொல்லுங்க!"

"நான் வேலைக்குப் போலாம்னு இருக்கேன்..."

"..............?!"

"இந்த வீட்ல ஏதேதோ நடந்து போச்சு. நிஜந்தன் ஒரேயடியா இப்படி மாறிப் போவான்னு நினைக்கலை. அவனை நம்பித்தான், பென்ஷன் கூடத் தேவையில்லைன்னு வேலைக்கு வச்சேன். உனக்கும் எனக்கும் மருந்து மாத்திரை வாங்கணும். சுசீந்திரன் தனியாப் போயிட்டான். அவனோட சம்பாத்தியத்துல நாலுபேரும் ரெண்டுவேளையாவது சாப்பிடுவாங்களான்னு தெரியல. நான் திடமாயிருந்தப்பவே அவனுக்கும் ஏதாவது செய்திருக்கணும். ப்ச்... தப்பு பண்ணிட்டேன். இப்பவாவது நான் ஏதாவது செய்யணும். மாசா மாசம் ஒரு ஆயிரம் ரூபாவாவது குடுத்து உதவணும். அமுதினிக்கு பிரசவம் அது இதுன்னு நல்லதுக்கு நாமதானே செலவுப் பண்ணணும்! தவிர, இவன் வேண்டா வெறுப்பா போடற சாப்பாட்டை சாப்பிடறப்ப... தொண்டை அடைக்குது இந்திரா. அதுக்கும் பணம் கொடுக்கணும்!"

"அதுக்காக?"

"வேலைக்குப் போகப் போறேன்..."

"என்னங்க சொல்றீங்க?"

"என்னை மட்டுமே நினைச்சு தடை போடாதே! நான் சொன்னதை எல்லாம் யோசிச்சுப் பார். சரின்னுப் புரியும்!"

கவலை தோய்ந்த முகத்துடன் மேலும், கீழுமாய் தலையாட்டினாள்.

"என் ஒண்ணுவிட்ட பெரியப்பா பையன் பெயிண்ட் கடை வச்சிருக்கான்ல... அதை இன்னும் விஸ்தரிக்கிறாங்க. பொறுப்பா... பார்த்துக்க ஒரு ஆள் வேணும்னு சொல்லியிருந்தான். நாலாயிரம் சம்பளம். நானே வர்றேன்னுட்டேன்."

இந்திரா கண் கலங்கினாள்.

"என்னாச்சு?"

"நம்ம நிலைமை இப்படியாய்டுச்சே?"

"வீட்டை விட்டு தொரத்தாம இருக்கானே... சந்தோஷப்படு. கவலைப்படாதே இந்திரா... நான் இருக்கேன்!"

இரவு!

அலுவலகம் முடிந்து வீடு திரும்பியிருந்த நிஜந்தன் அருகே சென்றார் தந்தை.

இந்திரா சமைத்தவற்றை பரிமாற தயாராய் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"நிஜந்தா!"

"சொல்லுங்க" என்றான் டி.வி.யிலிருந்து பார்வை எடுக்காமல்.

"நான் வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்!"

"சரி" என்றான் சற்றும் யோசிக்காமல்.

அந்த பதிலில் கொஞ்சம் ஆடித்தான் போனார் பொன்னீலன்.

* * *

சில வாரங்கள் கடந்தன.

தரகர் சில வரன்களுடன் வீட்டிற்கு வந்தார். அன்று நிஜந்தனும் வீட்டில் இருக்க, வசதியாய் போயிற்று.

அவரிடமிருந்த போட்டோக்களை வாங்கி மகனிடம் கொடுத்தார் பொன்னீலன்.

"உனக்கு அலையன்ஸ் பார்க்கச் சொல்லி இருந்தேன். இந்தாப்பா... உனக்கு பிடிச்சப் பொண்ணாப் பார்த்து செலக்ட் பண்ணு."

சிறு புன்னகையுடன் வாங்கிப் பார்த்தான்.

அதில் நல்ல நிறமாய், அழகாய் இருந்த பைரவியை பிடித்திருந்தது.

"இந்தப் பொண்ணு ஓக்கே!" என்றான் தரகரிடம்.

"வீட்டுக்கு ஒரேப் பொண்ணு. கூடப் பிறந்தவங்கன்னு யாருமில்லே. சொந்த வீடு. ஓரளவு வசதி. பி.பி.ஏ. படிச்சிருக்கு..."

"இந்த வரன் வேண்டாம் தரகரே! ஒத்தைப் பொண்ணுங்கறீங்க.. எல்லாரையும் அனுசரிச்சுப் போகற பக்குவம் இருக்காதுங்க" என்றாள் இந்திரா.

"எனக்கு இந்தப் பொண்ணுதான் பிடிச்சிருக்கு. மேற்கொண்டு ஆகவேண்டியதைப் பாருங்க!" என்றான் பட்டென்று முகத்திலடிப்பது போல்.

இந்திராவின் முகம் வாடி விட்டது.

அவன் நகர்ந்ததும் மனைவியைக் கடிந்து கொண்டார்.



"அவசரப்படாதே இந்திரா. நீ உன் விருப்பு வெறுப்பை வெளிப்படுத்தாதே! அதுக்கு நமக்கு உரிமையில்லே... புரியுதா!"

"ம்..."

* * *

"டைமாச்சு... டைமாச்சு!" கிச்சனைப் பார்த்து குரல் கொடுத்தான் ஆதித்யா.

"இதோ வந்துட்டேங்க...!" அமுதினியிடமிருந்து பதில் வந்தது.

"ஆதி... ஆபீஸ் முடிஞ்சு வர்றப்ப இந்த மெடிஸின்னை வாங்கிட்டு வந்துடு" அம்மா பத்மாவதி மருந்துச் சீட்டை கொடுத்தாள்.

"சரிம்மா... அப்பா எங்கே... காலைலேர்ந்தே கண்ல படலையே!"

"அசோக் நகர் ஆஞ்சநேயர் கோவிலுக்கு போயிருக்கார்."

சேமியா கிச்சடியும், தேங்காய்ச் சட்னியும் தட்டில் வைத்துப் பரிமாறினாள் அமுதினி.

"நீயும் உக்காரும்மா... சேர்ந்து சாப்பிடலாம்!"

"ஏழரை மணிக்கெல்லாம் சாப்பிட என்னவோப் போல இருக்குப்பா. அப்புறம் சாப்பிட்டுக்கறேன். நீ ஆபீஸ்க்கு ஓடணும்னு அவசர அவசரமா சாப்பிடறே! ஏம்மா... வேற டிபன் செய்யக் கூடாது? இவனுக்கு உப்புமா, கிச்சடின்னு செஞ்சாலேப் பிடிக்காதே!"

"டைமாய்டிச்சு அத்தே... இனிமே கவனமாயிருக்கேன்!"

"பரவாயில்லேம்மா. அமுதினி என்ன செஞ்சாலும் அமிர்தமாத்தான் இருக்கு. ஆமா... அப்பா எதுக்கு அவ்ளோ காலைல ஆஞ்சநேயரை தேடிட்டுப் போனார்?"

"அந்த ஆஞ்சநேயர் ரொம்ப விசேஷம். வேண்டினதை தருவார்னு யாரோ சொன்னாங்களாம். அதான்... இந்த வீட்டுக்கு சீக்கிரம் ஒரு பேரப்பிள்ளை வேணும்னு கேட்கப் போயிருக்கார்!"

சாப்பிடுவதை ஒரு கணம் நிறுத்தியவன், பின் சிரித்தபடி, "கல்யாணமாகி நாலுமாசம் கூட ஆகலே? அதுக்குள்ளே என்னம்மா? இப்ப வேணாம்னு நாங்கதான்..."

அவன் பேசப்பேச... அமுதினியின் கண்களில் ஏக்கப் படிவம்.

"நீயெல்லாம் கல்யாணமான பத்தாவது மாசமேப் பிறந்தே! இதெல்லாம் தள்ளிப்போடற விஷயமில்லே... பார்த்துக்குங்க!" பத்மாவதி அங்கே இருந்து அகன்றாள்.

"நீ சொல்லு... என்ன பண்ணலாம்?" அமுதினியைப் பார்த்து நக்கலாய் கேட்டான்.

அவள் பதிலேதும் கூறாமல் அமைதியாய் இருந்தாள்.

"பெத்துக்கறியா?"

"..............?!"

"பயமாயிருக்கே! தேவன்கிட்டே புள்ளைய வாங்கிக்கிட்டு... அதுக்கு அப்பன்னு என் தலைய வழிச்சிடுவியே...?"

வேதனையில் உதடு கடித்து, கண்ணீரை விழுங்கினாள்.

"உன்னைப் பார்த்தாலே வெறுப்பா இருக்குடி. பேசாம உன்மையப் போட்டு உடைச்சிட்டு உன்னைத் தலைமுழுகிடலாமான்னுக் கூட தோணுது. உன்னால என் வாழ்க்கையும் பாழாப் போகுதே!"

வெடித்தக் கேவலை அடக்கிக் கொண்டாள்.

"ஏய்... இப்படி கிட்டே வா!"

வந்தாள்.

"எனக்குப் பிடிக்காதுன்னு தெரிஞ்சும் கிச்சடி பண்றியா... இதை நீயே சாப்பிடு!" கிச்சடியை கையில் அள்ளி அவள் முகத்தில் அப்பினான்.

நிலைகுலைந்துப் போனாள் அமுதினி.

## 9

அமுதினி புகுந்த வீட்டு பெரியவர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினாள்.

"தீர்க்காயுசா... ஆரோக்கியமா, நல்லாயிருக்கணும். சீக்கிரமே பேரப்பிள்ளைங்களை பெத்துக் குடுக்கணும். இந்தா... இது எங்களோட பரிசு. இதை கட்டிக்கிட்டு கோவிலுக்கு போய்ட்டு வா!"

ஒரு பட்டுப்புடவையைத் தந்தனர்.

"ஆதி..." என்றார் நாதமுனி... ஆதித்யாவின் தந்தை.

"சொல்லுங்கப்பா!"

"ஆபீஸ்கா கிளம்பறே?"

"ஆமாம்ப்பா!"

"என்னப்பாயிது? கல்யாணமான பிறகு அமுதினிக்கு வந்த முதல் பிறந்தநாள் இது! லீவைப் போடு. இன்னைக்கு முழுக்க... அவளுக்குப் பிடிச்ச இடங்களுக்கு

## மனிதர்களை அடையாளம் கண்டுகொள்ளும் காகங்கள்

மனித முகங்களை அடையாளம் கண்டு கொள்வதும், அவர்களுடன் பழகி அவர்களது உணர்வுகளை புரிந்துக் கொள்ளும் சக்தியும் காகங்களுக்கு உண்டு என்று புதிய ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாஷிங்டன் பல்கலைக்கழகம் சமீபத்தில் ஆராய்ச்சி ஒன்றை நடத்தியது. அணிலின் மூளையைப் போன்றே காகங்களின் மூளையின்



அமைப்பும் அமைந்துள்ளது என்பது இந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டது.

காகங்களுடன் மனிதர்கள் சிலரை ஒன்றாக பழக வைத்து இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது. ஒன்றாக பழகியவர்களைப் போன்று மற்றொருவர் முகமூடி அணிந்து காகத்தின் அருகில் சென்றால் அவை அவர்களை நிராகரித்து விடுவதுடன், தங்களுடன் பழகும் நபர் வேறொரு முகமூடி அணிந்திருந்தாலும் அவரிடம் நெருங்கிச் செல்வதும், அவர்களின் முக அடையாளத்தை காணும் திறனை வெளிப்படுத்துவதும் காகங்களுக்கு அமைந்திருப்பதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பறவைகளைப் பற்றி நடத்திய ஆய்வுகளில் பதிவு செய்யப்பட்ட முக்கிய ஆய்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. இனி, நாம் காகங்களை கூட ஏமாற்ற முடியாது போல் இருக்கிறது.

கூட்டிட்டுப் போய், அவளுக்கு பிடிச்சதெல்லாம் வாங்கிக் குடு. முதல்ல கோவிலுக்கு கூட்டிட்டுப் போ!"

ஆதித்யாவினால் மறுத்துப் பேச முடியவில்லை. சிறுவயதிலிருந்தே அவர் பேச்சுக்கு எதிர்பேச்சு பேசாதவன். சங்கடத்துடன் தலையாட்டினான்.

"சரிப்பா...!"

அமுதினியின் முகத்திலும் சிறு பரவசம்.

அவர்கள் தந்த புடவையை அணிந்துக் கொண்டு கணவனின் முன் வந்து நின்றாள்.

ஒரு கணம்... தேவதை போல் இருந்த அவளைப் பார்த்து சலனப்பட்டான்.

அடுத்தகணமே அதை தீயிட்டு பொசுக்கினான்.

"என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க!" காலில் விழப் போக... நகர்ந்தான்.

"ஏய்... நிறுத்து... சும்மாவாச்சும் கூட நீ நல்லாயிருன்னு சொல்ல மனசு வர மாட்டேங்குது. பார்த்தேயில்லே... என்னைப் பெத்தவங்க உன்மேல எவ்வளவு பாசமாயிருக்காங்கன்னு? ஆனா, அதுக்கான அருகதை உனக்குக் கொஞ்சமாவது இருக்கா?"

"..............?!"

"இன்னைக்கு முழுக்க உன் கூடவே இருக்கணும்னு நெனைக்கறப்ப... அருவருப்பா இருக்கு! கௌம்பு..." முகம் வெறுப்பில் சுருங்க... முன்னே நடந்தான்.

பைக்கில் அவன் பின்னே அமரப் போகும் சமயம்... அவள் பேகிலிருந்து போன் அலறியது.

எடுத்தவள், அவனை சங்கடமாய் பார்த்தாள்.

"என்ன தேவன்கிட்டேர்ந்தா?" என்று சிரித்தான்.

"இல்லீங்க... அ... அம்மாகிட்டேர்ந்து..."

"ம்... பேசு!"

"சொல்லுங்கம்மா..."

"..............?!"

"தாங்க்ஸ்ம்மா..."

"..............?!"

"இ... இல்லேம்மா... வச்சிடறேன்!"

ஏறி அமர்ந்தாள்.

"என்னவாம் உன் அம்மாளுக்கு?"

வண்டி கிளம்பியது.

"பிறந்தநாள் வாழ்த்துச் சொன்னாங்க."

"இல்லேம்மான்னு சொன்னியே... எதுக்கு சொன்னே? என்ன கேட்டாங்க?"

"அ... அது... ஒண்ணுமில்லீங்க!"

"மாசமா இருக்கியான்னுதானே?"

"அ... ஆமாங்க!"

"என்னப் பேராசைடி உன் அம்மாளுக்கு? நீங்கள்லாம் என்னப் பண்ணாலும், அதை



மறந்துட்டு ஜாலியா இருக்கணுமா இல்லே?"

"..............?!"

தனது கோபத்தை வேகத்தில காட்டினான். அவனைத் தொட பயந்து பில்லியனை பற்றிக் கொண்டாள்.

"தேவனோட நாலு வருஷம் பார்த்டே கொண்டாடி இருப்பியே..."

"..............?!"

"உன்னைத்தான் கேக்கறேன்..."

"நான் மறந்துட்ட விஷயத்தை எதுக்குப் பேசணும்?"

"என்ன சீன் போடறியா? பேசுடி!"

"சொல்லுங்க!" என்றாள் வேதனையுடன்.

"என்ன கிப்ட் குடுத்தான்? கிஸ்தானே? கன்னத்திலேயா, லிப்ஸ்லேயா?"

"இப்படியெல்லாம் கேட்டு என்னைக் கொல்லாதீங்க!"

"ஏன் நடிக்கிறே? இதுக்கூட குடுத்துக்காத லவ்வர்ஸ் இருக்காங்களா? அவன் பர்த்டேக்கு நீ என்னத்த தந்தே? உன்னைத்தானே?"

"கடவுளே...!" கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

"சொன்னானே... எங்களுக்குள்ளே எல்லாமே முடிஞ்சிடுச்சின்னு அவன் சொன்னானே!"

"சத்தியமா இல்லீங்க! இதை நீங்க நம்பணும்னா நான் என்ன செய்யணும்... சொல்லுங்க!"

"சொன்னா செய்வியா?"

"கண்டிப்பாங்க..."

"செத்துடு..."

நெஞ்சுக்குள் திடும்மென அதிர்ந்தாள்.

அதன்பிறகு இருவருமே பேசவில்லை. பைக் வேகமாகப் பறந்தது. வெகுநேரம் பயணித்தது. ஆந்திர எல்லையைத் தாண்டியது.

'எங்கே போகிறோம்?' என்று கேட்க பயமாய் இருந்தது.

சற்றுநேரம் கழித்து ஒரு கோவில் வாசலில் பைக்கை நிறுத்தினான்.

"இறங்கு"

இறங்கிய அமுதினி சுற்றிலும் பார்த்தாள் சிறுபயத்துடன்.

நெடுஞ்சாலையிலேயே அமைந்துள்ள பெரிய பத்ரகாளி அம்மன் கோவில். பின்புறம் சூலூர்பேட்டை ரெயில் நிலைய போர்டு கண்களுக்கு தென்பட்டது.

கோவிலுக்குள் அதிகபட்சம் ஏழெட்டு பேர் இருந்தனர். அது இருபத்தி நான்கு மணி நேரமும் திறந்திருக்கும் ஒரே கோவில் என்று கேள்விப்பட்டிருக்கிறாள்.

"என்னப் பார்க்கிறே? இவ்வோ தூரம் இருக்கிற கோவிலுக்கு எதுக்கு கூட்டிட்டு வந்தேன்னா? ஆசையா மனசு விட்டுப் பேசறதுக்கு இல்லே! சாயந்திரம் வரைக்கும் உன் கூட தனியா ஊர் சுத்தறதை விடவும் அசிங்கம் வேறென்ன இருக்கு? நான் வெளியில போயிட்டு வர்றேன். அதுவரைக்கும் இங்கேயே இரு!"

அமுதினியை பயம் பற்றிக் கொண்டது.

"இங்கேயா? தனியாகவா? வேணாங்க... நானும் வர்றேன்..."

"அடச்சீ... சனியன், சனியன்... ஏன் உயிரை வாங்கறே? இஷ்டமிருந்தா இரு... இல்லேன்னா பக்கத்திலேயே ரெயில்வே ட்ராக் இருக்கு... போய் தலையக் குடு..." மிக மோசமாய் திட்டியவனின் முகம் அஷ்டகோணலாய் இருந்தது.

அந்த வெறுப்பு அவளை ஓரடி பின்னுக்கு நகர்த்தியது.

* * *

பைக்கில் நேரம் கடத்த... அங்கே இங்கே என்றலைந்த ஆதித்யா... மாலை ஐந்து மணி போல் டவுனில் இருக்கும் ஒரு ஓட்டலுக்குள் நுழைந்து பூரிமசாலா ஆர்டர் செய்தான்.

பகல் பன்னிரெண்டு மணியளவில் அமுதினியை கோவிலில் விட்டுவிட்டு வந்தவன் உடனடியாக தன் மொபைல் போனையும் ஸ்விட்ச் ஆப் செய்து விட்டான். பசியுடன், பதற்றத்துடன் அவன் அல்லாட்டட்டும்.

கொடூரமாய் சந்தோஷப்பட்ட ஆதித்யாவின் இயற்கை குணம் இதுவல்ல. மிக நல்லவன். இரக்க குணம் உள்ளவன். அமுதினி தன்னை ஏமாற்றி விட்டாள் என்ற விஷயம் அவனை விஷமுள்ளவனாய் மாற்றி விட்டது.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவனுக்கு புத்தி வேறுமாதிரி வேலை செய்தது.

'தேவனுக்கு போன் பண்ணினால் என்ன!'

உடனே எண்ணத்தை செயற்படுத்தினான்.

"ஹேய்... ஆதி... என்ன திடீர்னு... ஆச்சர்யமாயிருக்கு?"

"ஏன்... பண்ணக் கூடாதா?"

"ச்சீ... புதுமாப்பிள்ளை... நீ! இருக்கிற

பிஸியிலே எனக்கு போன் பண்றது... சான்ஸே இல்லே! சொல்லுடா... எப்படிப் போகுது உன் மேரேஜ் லைப்?”

“பண்டாஸ்டிக்! இப்பக் கூட என் வொய்ப்போட அவுட்டிங் வந்திருக்கேன். இன்னைக்கு அவளுக்கு பர்த்டே...”

“வாவ்... நான்தான் கல்யாணத்துக்குக் கூட வர முடியலே. ஸாரிடா... எனிவே என் விஷ்ஷஸ்ஸை அவங்ககிட்டே சொல்லிடு! ஒரு நாள் என் சார்பா ஓட்டல்ல டின்னர் தருவேன். ரெடியாயிரு!”

“பார்த்துக்கலாம். அதுக்கு முன்னாடி உனக்கு என் வீட்ல விருந்து தரப்போறேன். கண்டிப்பா வரணும்.”

“எனக்கா! வேணான்டா...”

“உனக்கொரு ஸ்வீட் ஷாக் இருக்கு. பட் என்னன்னு சொல்ல மாட்டேன். என் வொய்ப் சூப்பரா சமைப்பா... அதுக்காவது வா!”

“ஷ்யூர்! பட் என்ன அது ஸ்வீட் ஷாக்?”

“சஸ்பென்ஸ்! தென், இடீர்னு ஞாபகம் வந்தது. உன் லவ்வருக்கு கூட இன்னைக்குத்தானே பர்த்டே?”

“ஏய்... உனக்கெப்படித் தெரியும்?”

“நீதானேடா சொன்னே?”

“நானா... ப்ச்... ஞாபகமில்லே... பரவாயில்லே நீ ஞாபகம் வச்சிருக்கே!”

“அவளுக்கு விஷ் பண்ணியா?”

“சேச்சே... என்ன சொல்றே ஆதி! அவ இன்னைக்கு இன்னொருத்தன் பொண்டாட்டி!”

“அதுக்காக?”

“நீ என்னை தப்பா புரிஞ்சுக்கறேடா! என்னைக்கு அவளுக்கு கல்யாணமாச்சோ... சத்தியமா சொல்றேன்டா... அப்பவே என் மொபைல்ல இருந்த அவளோட நம்பரை மட்டுமில்லே... மனசுல இருந்த அவளையும் எரேஸ் பண்ணிட்டேன். வீட்ல... சொந்தத்துல பொண்ணு பார்த்து முடிவு பண்ணிட்டாங்க. நானும் சரின்னுட்டேன்.”

இந்த பதிலை ஆதித்யன் எதிர்பார்க்கவில்லை.

## 10

“அதெப்படி தேவன்! சட்டுன்னு அவளை மறந்துட்டேன்னு சொல்றே? நீயும் அவளும் ரொம்ப நெருக்கமா பழகினதா சொல்லியிருக்கியே...”

“அது என் முட்டாள்தனம்! விவரம் புரியாம என் ஆண்மைத்தனத்தை பிரகடனப்படுத்தச் சொன்ன பொய். அமுதினி ரொம்ப நல்லப் பொண்ணு ஆதி! சில பொண்ணுங்க... நாம எவ்வளவு உரிமை எடுத்துக்கிட்டாலும் ஈஸியா எடுத்துப்பாங்க. அமுதினி மாதிரிப் பொண்ணுங்க... நாம லைட்டா உரிமை எடுத்துக்கணும்னு நினைச்சாலே உதறி தள்ளிட்டுப் போய்டுவாங்க. அவகிட்டே இருந்த அந்த பயரை நான் ரொம்ப ரசிச்சேன். அவமேல காதல் வந்ததுக்கு காரணமே ரொம்ப கண்ணியமா நடந்துக்கிற குணம்தான். ப்ச்... இப்ப எதுக்கு அவளைப் பத்தி பேசிக்கிட்டு? அது... என்னை நம்பி கழுத்தை நீட்டப் போகிற பொண்ணுக்கு நான் செய்ற துரோகமா ஆய்டும். வேற பேசலாம்!”

அவன் பேசப் பேச... விக்கித்துப் போனான். தொண்டைக்குள் பூரி இறங்க மறுத்தது.

* * *

கோவில் வாசலில் பைக்கை நிறுத்தியவனை நோக்கி... வாசலிலேயே நின்றிருந்த அமுதினி, ஓடி வந்தாள்.

“வந்துட்டீங்களா? ரொம்ப நேரமா போன்... ப... பண்ணிட்டே இருந்தேன்... எ... எங்கே போய்ட்டீங்க?”

இருள் படர்ந்திருந்த சூழலில்... அமுதினி முகமும் இருண்டிருந்தது. அழுத கண்கள் சிவந்து புடைத்திருந்தன.

பதிலேதும் பேசாமல் அவள் ஏற காத்திருந்தான்.

“இங்கேயிருக்கிற ஜெண்ட்ஸ் சிலபேர் என்னைத்... த...தப்பா நினைச்சி...” மேலே பேச முடியாமல் விசும்பினாள்.

“..........?!”

“என்னை வெறுக்கறீங்கன்னு தெரியும். ஆனா, இவ்வளவு மோசமா வெறுக்கறீங்கன்னு இன்னைக்குத்தான் புரிஞ்சுக்கிட்டேன். இனிமேல் உங்களை கஷ்டப்படுத்த மாட்டேங்க!”

அவன் மேல படாமல் அமர்ந்துக் கொண்டாள். அதிசயமாய் அமைதியாய் இருந்த ஆதிக்கு எல்லாமே குழப்பமாய் இருந்தது.

வண்டி பறந்தது.

* * *

அலைச்சல் தந்த அசதியில் ஆழ்ந்து உறங்கிப் போனான் ஆதித்யா.

காலை புலர்ந்தது. செல்போனில் செட் பண்ணி இருந்த அலாரம் தலையணைக்கடியில் செல்லமாய் அழைத்தது. உறக்கம் கலைந்து... கைவிட்டு எடுத்து தொட்டு ஆப் செய்தான். ‘இன்னும் கொஞ்சநேரம் உறங்கலாமே!’ என்று உடம்பு கெஞ்ச... பெட்ஷீட்டை இழுத்துப் போர்த்த கால்களை நீட்ட... என்னவோ இடித்தது.

சட்டென தலைதூக்கிப் பார்த்தவன் திடுக்கிட்டான். அமுதினி தரையில் உட்கார்ந்தபடி, அவன் கால்கள் அருகே தலைசாய்ந்து அமர்ந்திருந்த விதம்... என்னவோ மாதிரி இருக்க, படக்கென எழுந்தமர்ந்தான். அதில் அமுதினியின் தலை குப்புற கவிழ... உடல் சரிந்தது.

“ஏய்.... அவசரமாய் அவளைப் புரட்டினான்.

வாயில் நுரை தள்ளி, சலனமற்றிருக்க, கையில் ஒரு வெள்ளைத் தாள்.

உடல் முழுக்க பயம் சூடாய் விரவ, எடுத்துப் படித்தான்.

‘என்னை நீங்க நம்பறதுக்கு இதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. குட்பை!

அமுதினி.’

“ஐய்யோ... ச்சே... அமுது... அமுது... இங்கே பார்... அமுது... கடவுளே... அம்மா... அம்மா... இங்கே வாயேன்!”

அலறினான்.

* * *

இரண்டு மாதங்கள் கடந்தன.

நிஜந்தனுக்கும், பைரவிக்கும் திருமணம் நடந்தது. தன் திருமணத்தை காண்ட்ராக்டரிடம் ஒப்படைத்து மற்ற யாருக்கும் எந்த வேலையும் வைக்காமல், வெளிப்படையாகச் சொன்னால், எந்த

### ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பேனா, டம்ளர், ஏன் செல்போனைக் கூட பார்த்திருக்கிறோம். ஆனால், யூஸ் அண்ட் த்ரோ மோட்டார் சைக்கிளை பார்த்திருக்கிறீர்களா? அப்படி பார்க்க வேண்டுமானால் அதற்கு நாம் 2-ம் உலகப்போருக்குதான் செல்ல வேண்டும். ஆம், 2-ம் உலகப்போரில்தான் இந்த யூஸ் அண்ட் த்ரோ மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்பட்டன.

உலகப்போரில் பங்கேற்கும் ராணுவ வீரர்கள் விமானத்தில் இருந்து பாராசூட் மூலம் கீழே இறக்கிவிடப்படுவார்கள். அவர்களுக்கு போர்முனையை சென்றடைவதற்கு சிறிய ரக



மோட்டார் சைக்கிள் வழங்கப்படும். அதற்கு ‘வெல்பைக்’ என்று பெயரிடப்பட்டது. இந்த மோட்டார் சைக்கிள் சிறுவர்கள் ஓட்டும் சைக்கிள் அளவே இருக்கும். இதன் நீளம் 778 மில்லி மீட்டர். 98 சி.சி. திறன் கொண்ட 2 ஸ்ட்ரோக் என்ஜின் கொண்டது. எடையோ 22 கிலோதான்.

லைட், ஸ்டாண்ட், மட்கார்ட், ஹாரன், ஏர்பில்டர், செயின் கவர் எதுவும் இருக்காது. பெடலும் இருக்காது. இதனால் தள்ளிக் கொண்டே சென்றுதான் ஸ்டார்ட் செய்ய வேண்டும். இந்த மோட்டார் சைக்கிளில் இரண்டு பெட்ரோல் டேங்குகள் மட்டுமே உண்டு. ஒருமுறை ஓட்டி பெட்ரோல் தீர்ந்து விட்டால் அவ்வளவுதான். மீண்டும் பெட்ரோல் நிரப்ப முடியாது. மோட்டார் சைக்கிளை தூக்கி எறிய வேண்டியதுதான்.

இரண்டு பெட்ரோல் டேங்குகள் எதற்கு தெரியுமா? ஒன்று வண்டியை ஓட்டுவதற்கு, மற்றொன்று வண்டியை எரிப்பதற்கு. காரணம் எதிரிகள் இந்த வண்டியை உபயோகிக்கக் கூடாது என்பதற்காகத்தான்.

இந்த மாடலில் 4,000 மோட்டார் சைக்கிள்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பான்மையானவை அழிக்கப்பட்டு விட்டன. தற்போது நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இவை சர்வதேச சந்தையில் தற்போது 4,000 டாலர்கள் வரை விலை போகின்றன.

உரிமையும் தராமல் நடத்தினான்.

தன் நட்பு வட்டத்துக்கு மட்டுமே அழைப்பிதழ் வைத்தான்.

உறவினர்களுக்கு அழைப்பிதழ் வைப்பதை பொன்னிலனும், இந்திராவும் பார்த்துக் கொண்டனர். சுசீந்திரனும், வைஷ்ணவியும் அவ்வளவு எளிதில் வரச் சம்மதிக்கவில்லை. இந்திராவின் வற்புறுத்தலால் அரைமனதுடன் வந்தனர்.

அமுதினியும், ஆதித்யாவும் யாரோ போல் வந்து உடனே சென்று விட்டனர்.

அன்றைய சம்பவத்தில் ரொம்பவே சீரியஸான கண்டிஷனுக்குப் போய்... மூன்று நாட்களுக்குப் பிறகே கண் திறந்தாள் அமுதினி.

பிரச்சினை நடுக்கூடத்திற்கு வந்ததால் ஆதித்யா எல்லா உண்மைகளையும் பெற்றவர்களிடம் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானான்.

அந்த விஷயம் பெரியவர்களை சங்கடப்படுத்தினாலும், இன்றைய நடைமுறை வாழ்க்கையை புரிந்துக் கொண்டு, திருமணத்திற்கு முன்பு காதல் என்பது எல்லா இளவயதினருக்கும் வரக்கூடிய காய்ச்சல்தான். அதற்கு எதற்கு அறுவை சிகிச்சை? தன் மகளுக்கு எப்படியாவது கல்யாணம் நடக்க வேண்டும் என்று எண்ணும் எந்த பெற்றோரும், மகளின் முந்தையக் காதலை பிரசாரம் பண்ணிக் கொண்டிருக்க மாட்டார்கள். இதை பெரிய பிரச்சினையாக நினைத்து உங்கள் வாழ்க்கையை இவ்வளவு நாசம் பண்ணியிருக்க வேண்டாமே! என்று அறிவுறுத்தினர்.

ஆதித்யாவிற்கு அமுதினி மீது பூரண நம்பிக்கை வந்தாலும், ஏனோ அவளின் பெற்றோரை மன்னிக்க மனமற்றுப் போனான்.

நல்லவேளை, அவர்கள் அழைப்பிதழ் தர வந்தபோது ஆதித்யா வீட்டில் இல்லை. சம்பந்தி இருவரும் மனப்பூர்வமாக உபசரித்தனர். பெற்றவர்கள் வற்புறுத்தியதால்தான் அவனும் திருமணத்திற்கு வரச் சம்மதித்தான்.

நிஜந்தன் யாரையும் கண்டுக் கொள்ளவில்லை. திருமணத்திற்கு முன்பு போனிலேயே பேசி நன்கு பழக்கமாகி விட்டிருந்தபடியால், பைரவியும் அவனிடம் சகஜமாய் பேசி சிரித்து, தோளில் சாய்ந்து... தன் காதலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள்.

பைரவி கொள்ளை அழகுடன் இருந்தாள். நிஜந்தன் பெருமிதத்துடன் நண்பர்களிடம் பரிசுப் பொருட்களுடன் வாழ்த்துகளையும் பெற்றுக் கொண்டிருந்தான்.

தன் வாழ்க்கையின் மிகப் பெரிய பலமாக, வரமாக அவளை நினைத்தான்.

எந்நேரமும் கொஞ்சிக் கொண்டு வாழ்க்கையை இனிமையாக்கிக் கொண்டனர். ஹனிமூனுக்கு மூணாறு சென்று வந்தனர்.

வீட்டுச்சூழலை புரிந்துக் கொண்ட பைரவி பெரியவர்களை அசட்டையாக எண்ணினாள். பைரவியின் முகம் அழகேயொழிய, அகம் விகாரமாயிருந்தது.

இந்திரா ஏற்கனவே சூடுபட்டிருந்ததால் புது மருமகளிடம் கவனமாகவே நடந்துக் கொண்டாள்.

காலையில் எழுந்து காபி போட்டு, வாசல் பெருக்கி கோலம் போடுவது முதல் எல்லா வேலையும் பார்த்துக் கொண்டாள். தன் கணவருக்கும், பிள்ளைக்கும் லன்ச் கட்டிக் கொடுத்து, துணி துவைத்து, மார்க்கெட் சென்று வந்து என்று எல்லாவற்றையும் செய்தாள். அதில் மருமகளின் துணிகளும் அடக்கம்.

பைரவி சாப்பிடுவதற்காகவும், குளிப்பதற்காகவுமே அறையை விட்டு வெளியில் வருவாள்.

நாளாக ஆக அவளின் செய்கை இந்திராவை உறுத்தியது.

'நானென்ன இவளுக்கு வேலைக்காரியா?' என்று.

அன்று கேட்டே விட்டாள்.

"ஏம்மா பைரவி?"

"என்னத்தை?"

"எப்பதான் சமைக்கக் கத்துக்குவே?"

"ஏன் கத்துக்கணும்? எனக்கு சமைக்கத் தெரியுமே!"

"அப்ப ஏன்மா இதுவரை இங்கே சமைக்கலே?"

"இப்ப என்ன சொல்ல வர்றீங்க? ஏன் இதுக்கு முன்னாடி இங்கே நீங்கதானே சமைச்சிட்டிருந்தீங்க? நான் வந்ததும் எல்லா வேலையும் என் தலையிலே கட்டணும் அப்படித்தானே?"

"ஏம்மா இப்ப நான் என்ன தப்பா கேட்டுட்டேன்? புகுந்த வீட்ல வேலை செய்யறது தப்புன்னு சொல்லி குடுத்து அனுப்பினாங்களா?" இந்திராவின் நாக்கு பழையபடி வேலை செய்ய ஆரம்பித்தது.

"இங்கேப் பாருங்க... சாதாரண விஷயத்துக்கெல்லாம் என் வீட்டை இழுத்தீங்க... நான் சும்மா இருக்க மாட்டேன்!"

"என்னப் பண்ணுவே? அடிச்சுடுவியா! என்ன இது, கொஞ்சம் கூட மட்டுமரியாதை இல்லாம... நாக்கு நீளுது?"

"அவர் வரட்டும்... உங்ககிட்டே எனக்கென்னப் பேச்சு?"

பைரவிக்கு சாதாரணமாகவே மாமியாரைப் பிடிக்காது. அந்த சம்பவத்திற்கு பின் அவளை தீயாய் வெறுத்தாள்.

அன்று முழுக்க எதுவும் சாப்பிடவில்லை.

இரவு ட்யூட்டி முடிந்து நிஜந்தன் வந்த போது மனைவி பெரிதாய் குற்றப்பத்திரிகை வாசிக்க... துவண்டுப் போனான்.

"சரிடா... நீ சமைச்சாதான் என்ன? அதுக்காக அம்மாவை எதிர்த்துப் பேசணுமா?"

"என்னது? அவங்க என்னை இவ்வளவு மோசமா பேசியிருக்காங்க. அதெல்லாம் தப்பாத் தெரியலே இல்லே. சீ... இவ்வளவுதானா நீங்க?" பைரவியால் அவன் பேச்சைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கோபத்தில் மூச்சு வாங்கியது.

## 11

பைரவி எந்தளவு பிடிவாதக்காரி என்பதை அன்றுதான் தெரிந்துக் கொண்டான் நிஜந்தன். கொஞ்சம் ஆடித்தான் போனான் அவளின் தீவிரம் கண்டு. சாப்பிடாமல் அடம்பிடித்தாள்.

பொன்னிலன் தன் மனைவியை கடிந்துக் கொண்டார்.

"உனக்கேன் இந்த வேலை? ஏற்கனவே வீடு ரெண்டுபட்டு கிடக்கறது பத்தாதா?"

"நான் தப்பா எதுவும்..."

"உன்னைப் பத்தி தெரியாதா? தப்பா எதுவும் பேசமாட்டே... ஆனா தேவையில்லாத வார்த்தைய போட்டு பேசியிருப்பே... கடவுள் உன்னை ஊமையா படைச்சிருக்கக் கூடாதா?"

அதேநேரத்தில் நிஜந்தனும் வந்துக் கத்தினான்.

"இதோ பாரும்மா... எதுவாயிருந்தாலும் என்கிட்ட சொல்லு! உன் பெரிய மருமககிட்டே பேசின மாதிரி இவகிட்டே பேசாதே! அப்புறம் இவ எதுனா பேசிட்டா... சரியா இருக்காது. வயசாச்சே தவிர இங்கிதம் தெரியலே. பைரவிக்கிட்டே சொல்லிட்டேன். இனி சமையல் வேலை எல்லாம் அவளே பார்த்துப்பா... மத்ததை நீ பார்த்துக்க..."

"ச... சரிப்பா... அப்படியே காலைல வாசலை பெருக்கி கோலம் போடச் சொல்லு... முட்டி வலி உயிர் போகுது... குனிஞ்சு நிமிர முடியலே!"

"பாரேன்... அடுத்த சண்டைய ஆரம்பிக்கறதை! அவளுக்கு அதெல்லாம் பழக்கமில்லே! முடிஞ்சா நீ செய்... இல்லேன்னா... ஒரு ஆளை ஏற்பாடு செய்... பணம் குடுத்துடறேன்!"

முகத்திலடிப்பதுபோல் சொல்லிவிட்டு அவன் அறைக்குள் சென்று விட்டான்.

வாய் பிளக்க நின்றிருந்த இந்திராவின் தோளைத் தட்டினார் பொன்னிலன்.

"என்ன?"

"பார்த்தீங்களா அவன் என்ன பேசிட்டுப் போறான்னு?"

"பேசாமப் போயிருந்தாதான் ஆச்சர்யப்படுவேன். நீயும் சில விஷயங்களை இந்த காலத்துக்கு ஏத்தமாதிரி யதார்த்தமா எடுத்துக்க பழகிக்க இந்திரா. இந்த காலத்துல பனாட் சிஸ்டத்துல வாழறவங்களுக்கு முறைவாசல்ங்கற ஒரு விஷயம் இருக்கறதே தெரியாதில்லே? போ... எல்லாத்தையும் போட்டு குழப்பிக்காம... தெளிவாயிரு!"

ஆனாலும் இந்திராவின் மனசு ஆறவில்லை.

அறைக்குள் மனைவியை கட்டித் தழுவி ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தான்.

"நான் கால்ல கூட விழுந்துட்டேன். இன்னமும் நீ சமாதானமாகலேன்னா எப்படி? அம்மாவை விடு. நானே உன்கிட்ட கேட்கணும்னு நினைச்சேன். நீ நார்த் இண்டியன் புட்டெல்லாம் சூப்பரா சமைப்பேன்னு உங்கம்மா பெருமையா சொன்னாங்களே! எனக்கு அதெல்லாம் ரொம்பப் பிடிக்கும். உன் சமையலை சாப்பிடணும்னு எனக்கு ஆசை இருக்காதா?"

"நிஜமாவா?" பைரவி சற்றே இளகி... கேட்டாள்.

மெல்ல அவள் உதட்டில் முத்தமிட்ட நிஜந்தன், "இந்த லிப்ஸ் மேல சத்தியமா"

என்றான்.

"சரி..." என்றவளுக்கு மாமியார் மீதிருந்த கோபம் அடங்கவில்லை.

மறுநாளில் இருந்து எல்லாமே தலைகீழாய் மாறியது.

காலையில் தனக்கும் கணவனுக்குமாய் கெட்டியான பாலில் காபி போட்டுக் கொண்டு, மிச்சமிருந்த பாலில் ஏகத்துக்கும் தண்ணீரை ஊற்றி வைத்தாள் பைரவி.

பச்சைத் தண்ணீராய் இருந்த பாலில் டீ போட்டு குடித்தபோது அந்த முதியவர்களின் முகம் இன்னும் சுருங்கியது.

நிஜந்தன் கேட்டபடியே வடஇந்திய உணவு வகைகளை சமைத்தாள். மிதமிஞ்சிய மசாலா இவர்கள் தொண்டைக்குள் இறங்க மறுத்தது. எப்போதும் கணவருக்கும் மகனுக்கும் மதிய உணவாக, பொரியல், குழம்பு, கூட்டு என்று சமைத்து கட்டித் தருவது இந்திராவின் வழக்கம்.

லன்ச்சை கேண்டீனில் சாப்பிட சொல்லி இருந்தாள் கணவனிடம் பைரவி. அதனால் பொன்னிலனுக்கு தனியே சமைக்கவில்லை.

இந்திரா கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவருக்காக தனியே சமைத்துத் தந்தாள்.

அந்த மாதம் கணவனிடமிருந்து சம்பளத்தை வாங்கிக் கொண்ட பைரவி பட்ஜெட் போட்டு மளிகை சாமான் வாங்கினாள். காய்கறிகளை அளவாய் வாங்கிப் போட்டு... மாமியார் எடுக்காத அளவிற்கு சமைத்து காலி செய்தாள்.

வேறு வழியின்றி புளிக்காய்ச்சல் செய்து வைத்துக் கொண்டு, கணவருக்கு தினமும் புளியோதரை செய்து தந்தாள், இந்திரா.

அதற்கடுத்த மாதம் கேஷுவலாய் மாமனாரிடம் கேட்டாள் பைரவி.

"மாசா மாசம் மளிகை சாமான் விலையெல்லாம் கூடிக்கிட்டேப் போகுது மாமா! வீட்டுக்கு ரொம்பச் செலவாகுது. உங்ககிட்டே ஆயிரம் ரூபா இருக்குமா? அரிசி மூட்டைக்கு பணம் தரணும்!"

"த... தர்றேன்ம்மா!" சற்றே தயங்கி எடுத்துக் கொடுத்தார்.

அது அவர்களின் மருந்து மாத்திரை வாங்க வைத்திருந்த பணம்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த இந்திராவுக்கு மனசு எரிமலையாய் குமுற... வார்த்தை வெடித்துக் கொண்டு வந்தது.

"ஏம்மா... உன் புருஷனை பெத்து வளர்த்த எங்களுக்கு சோறு போட பணம் கேக்கறியா? என்ன அநியாயம் இது?"

"இங்கேப் பாருங்க... சாப்பாடு போடறதுக்குன்னு பணம் கேக்கலே... நீங்களா கற்பனை பண்ணிக்கிட்டா அதுக்கு நான் பொறுப்பில்லே! அப்படியே கேட்டாதான் என்ன தப்பு? இந்த வீட்டு சுமை எல்லாத்தையும் அவர்மேல சுமத்தி மூச்சு முட்ட உட்கார வச்சு இருக்கீங்களே... அது நியாயமா?"

"என்ன சொல்றே? என்ன சுமை?"

"ம்... உங்கப் பொண்ணோட சுமையச் சொல்றேன். அக்காளுக்கு தம்பி கல்யாணம் பண்ணி கடன்படணும்னு எதிலே எழுதி வச்சிருக்கு. ஒரு பொண்ணு எத்தனை கல்யாணம் பண்ணிப்பா? மனசால ஒருத்தனை சுமந்துப் பழகினாலும் கல்யாணம்தான். உங்கப் பொண்ணோட லட்சணம் எல்லாம் எனக்கும் தெரியும்."

"இதோ... பார்...!" கண்களில் தளும்ப ஆத்திரத்துடன் சுட்டுவிரல் நீட்டி எச்சரித்தாள் இந்திரா.

அதற்கு மேல் அவளைப் பேச விடாமல் தடுத்தார் பொன்னிலன்.

"இந்திரா உள்ளே போ!"

"அவ என்ன சொல்றான்னு கேட்டீங்க இல்லே?"

"சரி... நீ உள்ளே போன்னு சொல்றேன். என் பேச்சை கேப்பியா? மாட்டியா?"

இந்திரா விசும்பலுடன் அகன்றாள்.

"சரிம்மா... இனி மாசா மாசம் ஆயிரம் ரூபா குடுத்துடறேன்ம்மா."

"என்னை தப்பா..."

"என்னம்மா தப்பிருக்கு? குடும்பம் நடத்தறவங்களுக்குதாம்மா தெரியும் கஷ்ட நஷ்டமெல்லாம்? இது நம்ம குடும்பம்மா..."

சொல்லிவிட்டு ஆயாசத்துடன் திரும்பி வந்தார்.

இந்திரா இன்னமும் அழுதுக் கொண்டிருந்தாள்.

"ப்ச்.. இந்திரா... அழறதை நிறுத்து!"

"ஏங்க... உங்களுக்கு கோபமே வரலையா? நம்மகிட்டே பணம் வாங்கறதே தப்பு! இதிலே அழுதினிய எப்படி தப்பா பேசறா பாருங்க. நேத்து வந்த சனியனுக்கு இவ்வளவு உரிமைக் குடுத்திருக்கானே... அவனைச் சொல்லணும்!"

"ஆத்திரத்துல வார்த்தைய விடாதே இந்திரா. அவ பேசினதெல்லாம் தப்புதான். ஆனா, நம்ம புள்ளைய கட்டிக்கிட்டப்பவே எல்லா உரிமையும் அவளுக்கும் இருக்கே! நிதானத்தை... பிடிக்கவேண்ணாலும் கிரகிச்சுக்க பழகிக்கணும். எல்லார் குடும்பமும் ஒரே மாதிரி அமைஞ்சிடறதில்லே. அப்பா அம்மாவை, உடன் பிறந்தவங்களை, மாமனார் மாமியாரை, சொந்தபந்தங்களை கொண்டாடற புள்ளைங்களும், மருமகள்களும் இல்லாமலா இருக்காங்க? சிலபேருக்கு அந்த குடுப்பினை இல்லை. நதி சில இடங்கள்ல தங்குத் தடையில்லாம போகும், பல இடங்கள்ல வளைஞ்சு நெளிஞ்சுப் போகும். இதுதாம்மா வாழ்க்கை. அருமை அறியாதவன் வீட்டுக்குப் போனாலும் பெருமை குலைஞ்சு போகும். அருமை தெரியாதவங்க... வீட்டுக்கு விளக்கேத்த வந்தாலும் நமக்கு மரியாதை கெட்டு விடும்."

"அதுக்காக... அவ என்னப் பேசினாலும் சும்மா இருக்கச் சொல்றீங்களா?"

"பின்னே... சண்டைப் போடச் சொல்றியா? விட்டுத் தள்ளு இந்திரா. அந்தப் பொண்ணு வேணுமின்னே நம்ம வயித்துல அடிக்குது. இலகுவா சாப்பிடற மாதிரி எதுவும் சமைக்கிறதில்லே. அது இஷ்டத்துக்கு சமைக்குது. கேட்டா சண்டை வரும். கண்டிப்பா நிஜந்தன் நியாயமா இருந்தாக்கூட நமக்காக பேச மாட்டான். அவன் ரொம்ப நாளா நம்ம குடும்பத்தை சுமந்து பொறுப்பா பார்த்துக்கிட்டவன். அவனை எனக்கு ரொம்பப் பிடிக்கும் இந்திரா. அவன் கோபத்துல நம்மளை ஏதாவது பேசி... அந்த பாவம் அவனை சேர வேண்டாம். அதுதான் அவனுக்கு நாம செய்யற பெரிய உபகாரமாயிருக்கும்!"

"..........?!"

"எனக்காக கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்க இந்திரா. நம்ம பட்ஜெட்ல இப்ப துண்டு விழுந்திடுச்சி. நீயும், நானும் போய் ஜி.எச்.ல கார்டு போட்டுக்கலாம். மாசாமாசம் செக்கப் பண்ணிக்கிட்டு மருந்து மாத்திரை எல்லாம் வாங்கிட்டு வந்துடலாம்!"

"சரிங்க!"

"இந்தப் பணத்துல உனக்கு ஒரு புடவை வாங்கித் தரணும்னு ஆசைப்பட்டேன். அதுவும் முடியல. நாக்கு செத்துப் போய் கிடக்கு. பிரியாணி சாப்பிடணும்னு ஆசைப்பட்டேன். ப்ச்..." நீண்ட பெருமூச்சுடன் தோளில் இருந்த துண்டை உதறிப் போட்டுக் கொண்டார்.

கணவரை வேதனை அழுத்த... பார்த்துக் கொண்டேயிருந்தாள் இந்திரா.

## 12

எந்த மாற்றமும் இன்றி... காலண்டரில் தேதிகள் உதிர்ந்தன.

அன்று காலை பத்து மணிக்கு மேலிருக்கும். காய்கறி வாங்க மார்க்கெட் போய்விட்டு வந்த இந்திரா, உடனே குளித்து ஒரு பட்டுப்புடவையை எடுத்து சுற்றிக் கொண்டாள்.

"எனக்கு சாப்பாடு வைக்காதே... நான் கல்யாணத்துக்குப் போறேன்!" சுவற்றைப் பார்த்து சொல்லிவிட்டு... ஒரு ஹேண்ட் பேகை மாட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

சமைத்துக் கொண்டிருந்த பைரவி அவளை விநோதமாய் பார்த்தாள்.

'யாருக்குக் கல்யாணம்? அப்படி யாரும் இன்விடேஷன் கூட வைக்கலையே!'

இந்திரா வேகமாய் நடந்து பஸ் ஏறி... ஆறு ஸ்டாப்பிங் தள்ளி இறங்கிக் கொண்டாள்.

இதயம் படபடவென துடிக்க... அந்தக் கல்யாண மண்டபத்திற்குள் நுழைந்தாள்.

அது முஸ்லிம் இல்லத் திருமணம்.

முகத்தில் சின்னப் புன்னகையை ஒட்ட வைத்து சேரில் மற்றவர்களோடு அமர்ந்துக் கொண்டு மேடையிலிருந்த மணமக்களை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரைமணி நேரம் கடந்தபின்... பந்தி இருந்த பக்கம் சென்றாள்.

பிரியாணி வாசம் ஆளையே தூக்கி அடித்தது. ஓரமாய் இடம்பிடித்து அமர்ந்த இந்திரா, தன் செய்கைக்கு வெட்கப்பட்டாள். கண்கள் கசப்பில் கசிந்தது.

புது பேப்பர் ரோல் போடப்பட்டு இலை போட்டனர். இந்திரா பேகைத் திறந்து அதிலிருந்த பிளாஸ்டிக் கவரை பிரித்து வைத்துக் கொண்டாள்.

கவிழ்த்துக் கொட்டப்பட்ட பிரியாணியில் யாரும் பார்க்காதபடி முதலில் கறித்துண்டுகளை எடுத்து கவரில் போட்டாள். இப்படியே சாப்பிடுவதாக பேர் செய்து கொஞ்சம் கொஞ்சமாக அதில் சேமித்தாள்.

கையை கழுவி விட்டு மறுபடி வேறு பக்கம் பந்தியில் அமர்ந்து... அதையும் போட்டுக் கொண்டாள். மூன்றாவதாக தான் சாப்பிடுவதற்காக வேறு பக்கம் சென்று அமர்ந்தபோது... ஏற்கனவே அவள் சாப்பிட்டதை கவனித்திருந்த பெண்

## சுவர்கள் மீது சைக்கிள் ஓட்டும் வீரர்



நம்மால் சாதாரணமாக தெருக்களிலோ அல்லது ஒற்றையடிப் பாதையிலோ அல்லது சாலையிலோ சைக்கிளை முறையாக ஓட்டிச் செல்வது என்பதே கஷ்டம். ஆனால், மாக் அஸ்கில் என்ற 26 வயது சைக்கிள் வீரர் கலிபோர்னியா மற்றும் சான்பிரான் சிஸ்கோ நகரில் சாலைகளில் சைக்கிள் ஓட்டுவதற்கு பதிலாக சுவர்கள் மீது சைக்கிள் ஓட்டி சாகசம் செய்கிறார்.

அதுமட்டுமல்ல, சிற்பங்கள் மற்றும் மரங்கள் மீதும் சைக்கிளை மிக நுட்பமாக ஓட்டுகிறார். இவரது இந்த திறமைமிக்க சாகச செயலை இதுவரை இணையதளத்தில் வெளியான வீடியோ காட்சியில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்.

''சுவர்கள் மீதும், சிற்பங்கள் மீதும், மரங்கள் மீதும் நுட்பமாக சைக்கிளை ஓட்டுவதால் நகரத்தை பார்வையிட வேறு வழிகள் எனக்கு இருப்பதாக நான் உணர்ந்தேன்'' என்கிறார், இந்த சைக்கிள் வித்தைக்காரர்.

வீட்டைச் சேர்ந்த நடுத்தரவயது ஆண் அவளருகேச் சென்றார்.

"ஏம்மா... எந்திரி..."

வெலவெலத்துப் போன இந்திரா எழுந்தாள்.

"யாரு நீ? பெண்வீட்டுப் பக்கமா, மாப்பிள்ளை வீட்டுப் பக்கமா?"

"பொ... பொண்ணு வீடு தம்பி!"

"பொண்ணோட அம்மா பேரு என்ன?"

"அ... அது வந்து..."

"எத்தனை முறை சாப்பிட்டே?"

எல்லோரும் இவளைப் பார்க்க... கூனிக் குறுகிப் போனாள்.

"தம்பி... நீங்க தப்பா..."

"அடச்சீ... வாயமூடு! லட்சக்கணக்குல செலவுப் பண்ணி கல்யாணம் பண்ணினா... உன்னை மாதிரி பரதேசிங்க வேற வந்து கழுத்தறுக்குது. வெளில விழற எச்சில் இலைல மிச்சம் மீதி விழுமே... அதை சாப்பிடறது. இப்படியெல்லாம் ஏமாத்தி சாப்பிடறது வெக்கமாயில்லே? அதை விட..."

"தம்பி... தப்புதான்.. செஞ்சது தப்புதான். அதுக்காக அசிங்கமா பேசாதீங்க..." நெஞ்சடைத்தது.

"ஏய்... செய்யறதே அசிங்கம். அதை அசிங்கமாப் பேசாம... கொஞ்சுவாங்களா? போடி... வெளியே போடி!'' அந்த நபர் இந்திராவின் கழுத்தில் கைவைத்து தரதரவென வாசலுக்கு இழுத்து வர... வந்த வேகத்தில் சிமெண்ட் பெஞ்சில் மோதி... தடுக்கி விழுந்தாள்.

முட்டியில் உயிர் போகிற வலி. புடவையின் மேற்பரப்பில் சரமாய் ரத்தம் படர்ந்தது.

அத்தனை வலியிலும், அவமானத்திலும் இந்திராவின் வலக்கை... ஹேண்ட்பேகை கெட்டியாகப் பற்றியிருந்தது.

* * *

கையை கழுவிக் கொண்டு தட்டின் முன் அமர்ந்தார் பொன்னீலன்.

"இன்னைக்கென்ன? பட்டர் நான், மசாலான்னு வழக்கம் போலத்தானா?"

"அங்கே வழக்கம் போலத்தான். ஆனா, நான் உங்களுக்கு ஸ்பெஷலா ஒண்ணு வாங்கிட்டு வந்தேன்!"

''அதை விடு... ஏன் நொண்டி... நொண்டி நடந்து வர்றே? முகமெல்லாம் ஒரு மாதிரியாயிருக்கு!"

"ப்ச்... ஒண்ணுமில்லீங்க... வெளியேப் போயிருந்தேன்... பஸ்ல இருந்து இறங்கறப்ப கால் தடுக்கி விழுந்துட்டேன்..."

"ஐயோ... விழுந்துட்டியா! காட்டு..." ரொம்பவே பதறிப் போனார்.

''அதான் ஒண்ணுமில்லேன்னு சொல்றேனே..."

"காட்டு!" அவரே புடவையை உயர்த்திப் பார்த்து முகம் மாறினார்.

"பெரிய காயமா இருக்கே! எப்படிடி விழுந்தே? பார்த்து ஏறங்கக் கூடாதா? ரொம்ப வலிச்சிருக்குமே! எங்கேப் போனே? ஏன் இப்படி?"



கணவர் கேட்டவிதம் உள்ளத்தை ஆறுதல்படுத்த கண்களில் பொலபொலவென கண்ணீர் உருண்டது.

"வலி இப்ப குறைஞ்சா மாதிரி இருக்குங்க. வீட்லேயே அடைபட்டு கிடக்க ஒரு மாதிரி இருந்தது. அதான் கோவிலுக்கு போயிட்டு வரலாம்னு பிராட்வே போனேன். அங்கே ஒரு கடையில மணக்க மணக்க பிரியாணி வித்துக்கிட்டிருந்தாங்க. வாங்கிட்டு வந்தேன்... சாப்பிடுங்க!"

பொன்னீலன் மனைவியை சில கணங்கள் உற்றுப் பார்த்து அவள் தலையை பிடித்து மென்மையாய் அழுத்தினார்.

''நீ கோவிலுக்குன்னு போயிருக்க மாட்டே! எனக்கு பிரியாணி வாங்கறதுக்குன்னே போயிருப்பே! இப்படி கால்ல அடிபட்டுக்கிட்டு வந்திருக்கியே இந்திரா, பிரியாணியா முக்கியம்? ரொம்ப வீக்கமா இருக்கு பாரு! வயசானா முக்கியமா கால்ல அடிபடக் கூடாதுன்னு சொல்லுவாங்க. நம்மளை மாதிரி சப்போர்ட் இல்லாதவங்களுக்கு அதுக்கூட படக் கூடாது. என் பக்கத்துல நீ இருக்கிற தைரியத்துலதான்டி, நான் நடமாடிக்கிட்டிருக்கேன். என் மனசுல எவ்வளவோ இருக்கு. ஆம்பளையில்லையா! அழுது தீர்க்க முடியல. உன்னை கவனிக்க நான் இருக்கேன். எனக்கு நீ இருக்கே. ஆனா ஒண்ணு! எனக்கு முன்னாடி நீ போயிட்டேன்னு வச்சுக்க... உன் கூடவே நானும் வந்துடுவேன்."

"ஐயோ... என்னாச்சு உங்களுக்கு! ஏன் எதை எதையோப் பேசறீங்க? நான் மட்டும் நீங்க இல்லாம இருந்துடுவேனா! அதெல்லாம் எதுக்கு இப்ப! இதை மதியம் வாங்கிட்டு வந்தேன். சூடு பண்ணியிருக்கேன். ஆறதுக்குள்ளே சாப்பிடுங்க."

"முதல்ல ஹாஸ்பிடல் போய்... ஒரு டிடி இன்ஜக்ஷன் போட்டுட்டு வந்துடலாம்!"

"காலைல போட்டுக்கறேனே! இப்ப இதை சாப்பிடுங்க" கையில் எடுத்து அவர் வாயில் வைத்தாள்.

பொன்னீலன் நெகிழ்ச்சியுடன் அவள் கையைப் பற்றிக் கொண்டார்.

* * *

''நிஜந்தா... கொஞ்சம் நில்லுப்பா!"

அப்பா அழைத்ததும் அலுவலகம் புறப்பட்டுக் கொண்டிருந்த நிஜந்தன் திரும்பிப் பார்த்தான்.

பைரவி முகம் சுளித்தாள்.

"ஆபீஸ் கிளம்பிட்டிருக்கப்ப... இதென்ன அபசகுனம் மாதிரி?"

''என்ன விஷயம்?'' என்றான் மொட்டையாக. அப்பா... அப்பா என்று வாய் நிறைய அழைத்ததை எல்லாம் சுவடு தெரியாமல் உமிழ்ந்து விட்டான்.

"கொஞ்சம் பேசணும்!"

''அதுக்காகத்தானே நிக்கறேன். டைமாகுது வேற..." சலித்துச் சொன்னான்.

"சுசீந்திரன் ரொம்ப கஷ்டப்படறான்டா! பசங்களுக்கு ஸ்கூல் பீஸ் கட்ட முடியாம திண்டாடறான். இத்தனை காலமா அதெல்லாம் நீதான் பொறுப்பேத்துக்கிட்டிருந்தே. இப்பவும் நீ கூடுத்து உதவினா..."

''அவனுக்குதான அறிவில்லே... நீங்க எடுத்துச் சொல்லக் கூடாதா! அவங்கவங்களுக்கு தனித்தனியா குடும்பம்னு ஆகிப் போச்சு. என்னை நம்பியா புள்ளைங்களை பெத்தான்! பத்து பைசா கூட தரமாட்டேன். போய் சொல்லுங்க!"

"என்னப்பா இது! இப்படியா மூஞ்சியில அடிக்கிற மாதிரிப் பேசுவே!"

''சும்மா இருக்கிறவனை ஏன் பேச வைக்கணும்?"

''அதுக்காக? தராதரம் இல்லாம என்ன வேணாலும் பேசிடறதா? நியாயமா என் வேலையை அவனுக்கு கொடுத்திருக்கணும். பொறுப்பா நடந்துக்க மாட்டான்னுதான் உன்னை வச்சேன். எல்லாரையும் பார்த்துப்பேன்னுதானே வச்சேன்!"

"என்னமோ சொத்து எழுதி வச்ச மாதிரிப் பேசறீங்க! சம்பளம் சும்மா தரலே. உழைக்கிறேன். என் வியர்வை சிந்தி உழைக்கிறேன். ஏன் உங்கப் பொண்ணுக்கு கடன் வாங்கி கல்யாணம் பண்ணித் தரலே! உங்கப் பெரிய பொண்ணுக்கு வளைகாப்பு டெலிவரின்னு அப்பப்ப செலவு வைக்கலே! இத்தனை வருஷமா அந்த குடிகாரனோட குடும்பத்தை சுமக்கலே! ஏன் உங்க ரெண்டு பேருக்கும் சோறு போடலே!" ஆவேசமாய் கத்தினான் நிஜந்தன்.

பொன்னீலன் அதிர்ச்சியில் சவம் போல் நின்றார்.

"டைமாச்சுங்க... நீங்க கிளம்புங்க!"

''ம்... வர்றேன்... போகும்போதே பிரச்சினை பண்ணினா... எல்லோர்த்து கருப்படப் போறேன்!"

நிஜந்தன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டியாய் இறங்க...

கொதித்துப் போனார்.

'பெத்தவங்களுக்கு சோறு போடறதை சொல்லிக் காட்டறான். இனியும் இங்கே இருக்கணுமா?'

அந்த வயதுக்கே உரிய வீம்பு உசுப்பிவிட,

"இந்திரா" என்றழைத்தார்.

## 13


மனிதர்கள் பலம் இல்லாமல் இல்லை. மனம் இல்லாமல் இருக்கிறார்கள்.

நிஜந்தன் இப்படி மாறிப் போவான் என்பதை ஜீரணிக்க மனசு அழிச்சாட்டியம் பண்ணியது. பொறுமைக்கு உதாரணமாய் இருந்த பொன்னிலனுக்கு சங்கடம் நிரடிக் கொண்டே இருந்தது.

இந்திரா அவர் காதில் கிசுகிசுத்தாள்.

"வீட்டில் நடந்த எதுவும் வைஷ்ணவிக்கு தெரிய வேணாம். நம்மள இளக்காரமா நினைப்பா!"

"யாருக்குமே தெரிய வேணாம். ஆனா, அந்தப் பொண்ணை நீ தப்பாவே புரிஞ்சிட்டிருக்கே! சரி விடு... சும்மா ஒரு மாசம் தங்கப் போறதா



சொல்லிக்குவோம். மத்ததை அப்புறம் பார்த்துக்கலாம்."

"சரிங்க"

உள்ளே நுழைந்தப் பெரியவர்களை பார்த்து முகம் விரிய வரவேற்றாள்.

"வாங்க மாமா... வாங்க அத்தே..."

கையிலிருந்த துணிகள் அடங்கிய பையை பார்த்ததுமே புரிந்துப் போனது.

'அங்கு ஏதோ நடந்திருக்கிறது.'

"பையக் குடுங்க மாமா... இப்பவாவது உங்க பிள்ளை வீட்லே வந்து இருக்கணும்னு தோணுச்சே? மகேஷுக்கும், பிரியாவுக்கும் இனி போரடிக்காது" வாங்கிக் கொண்டாள்.

அவர்கள் முகம் ஆச்சர்யத்தை பரப்பியது.

"அம்மாடி... நாங்க இங்கே தங்கப் போறோம்னு..."

"இந்த துணிப்பையை பார்த்தாலே தெரியுதே! சந்தோஷமா இருக்கு மாமா! உக்காருங்க... இன்னைக்கு லீவா மாமா?"

"நானே லீவுப் போட்டுட்டேன்!"

"சமையல் பண்ணிட்டு இருக்கேன். அப்படியே டீ போட்டு கொண்டு வர்றேன்!" நகர்ந்தவள் பேனையும், டி.வி. சுவிட்சையும் ஆன் பண்ணிவிட்டுப் போனாள்.

ஒரு மூலையில் தையல் மிஷினும் தைப்பதற்கான துணிமணிகளும் கிடந்தது.

மிஷின் போல் மருமகள் உழைப்பது புரிந்தது.

"சுசீந்திரனுக்கு நைட் ஷிப்ட்டா?"

"இல்லே மாமா... டே ஷிப்ட் தான். ஏழு மணிக்கு வந்துடுவார்."

"அம்மா..."

வலியோடு முனகும் குரல் உள்ளிருந்து வர... இந்திரா திடுக்கிட்டாள்.

'பிரியா குரல்தானே?'

"பிரியாவா? வீட்லயா இருக்கா? ஸ்கூலுக்குப் போகலே?" வேகமாய் எழுந்து இருந்த ஒரே அறைக்குள் சென்றாள்.

நைந்த துணியாய் பாயில் சுருண்டிருந்தாள் பிரியா.

"பிரியாம்மா... என் செல்லம்... என்ன ஜுரமா?"

"பாட்டி... எப்ப வந்தீங்க?"

"இப்பதான் தங்கம். என்னாச்சுடா..." அவள் தோள் பற்றி எழுப்பி உட்கார

"பீரியட்ஸ் பாட்டி... வயிறு ரொம்ப வலிக்குது. அதான் ஸ்கூலுக்குப் போகலே..."

"ஏ... என்னது!" குப்பென்று வியர்க்க... "அடியே வைஷ்ணவி..." என்று கத்தியபடி அடுக்களைக்குள் புகுந்தாள்.

சங்கடமும் வேதனையுமாய் மாமியாரைப் பார்த்து தலைகவிழ்ந்தாள் வைஷ்ணவி.


"ஏய்... என்னடி நடக்குது இங்கே? பிரியா என்னென்னமோச் சொல்றாளே? எப்ப... எப்ப ஆச்சு?"

"என்ன இந்திரா... ஏன் கத்தறே?" எழுந்து வந்தார் பொன்னிலன்.

"ம்... என்னன்னு இவளையேக் கேளுங்க. சொல்லுடி... எப்ப ஆச்சு?"

"மூணு மாசம் ஆகுதே அத்தே!"

"அடிப்பாவி! எவ்வளோ பெரிய விஷயம்! எங்களுக்குக் கூட தெரியாம மறைச்சிட்டியே. மறைக்கிற விஷயமா இது! என்னங்க முழிக்கறீங்க? நம்ம பேத்தி வயசுக்கு



வந்துட்டாளாம். அதுவும் எப்ப? மூணு மாசம் முன்னாடி... என்னடி நினைச்சிட்டிருக்கே! கல்யாணமாயிட்டா... என் புள்ளைய உனக்கே தாரை வார்த்துட்டோம்னு எண்ணமா? எங்களை மூணாம் மனுஷங்க மாதிரி தூக்கி எறிஞ்சிட்டு இவ்ளோ பெரிய விஷயத்தை எங்களுக்கு சொல்லாம மறைச்சிருக்கே!"

பொன்னீலனுக்கு கூட அந்த விஷயம் உறுத்தலாய் இருந்தது.

"என்னம்மா வைஷ்ணவி! தப்பில்லையா? எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாத மாதிரி நடந்துக்கிட்டியே! அப்புறம் எதுக்குமா உரிமையோட நாங்க இங்கே இருக்கணும்?"

"மாமா... மாமா... தயவுப் பண்ணி அவசரப்பட்டு தப்பா புரிஞ்சுக்காதீங்க. இது தப்புன்னு தெரிஞ்சேதான் செஞ்சேன். உங்களுக்கு இல்லாத உரிமையா? எனக்குத் தெரியும் உங்க பேத்தி மேல எவ்வளவு பாசம் வச்சிருக்கீங்கன்னு. இப்படின்னு சொன்னா என்னப் பண்ணுவீங்க? இவளுக்கு ஏதாவது சீர் செய்யணும்னு துடிப்பீங்க. நம்ம குடும்ப சூழ்நிலை இப்ப எப்படி இருக்கு? நீங்க வேலைக்குப் போய சம்பாதிச்சாக வேண்டிய கட்டாயம். உங்க சின்னப் புள்ளைய எங்களுக்கு ஹெல்ப் பண்ணச் சொல்லி கேப்பீங்க. அங்கேத் தேவையில்லாத பேச்சுக்கள் வரும். நானும் இங்கே சின்ன அளவுலக் கூட சடங்கு செய்ய முடியாத நிலைமை மாமா! இது எல்லாருக்கும் தெரிஞ்சாதானே சங்கடம்? அதனாலதான் மாமா மறைச்சேன். இப்ப என்ன, உங்க பேத்திய ரெண்டு பூ போட்டு ஆசீர்வாதம் பண்ணுங்க. அது போதும்."

"இல்லம்மா... நீ என்ன சொன்னாலும் என் மனசு சமாதானம் ஆகலேம்மா!"

"மாமா... சத்தியமா இந்தக் காரணத்துக்காகத்தான் மறைச்சேனே ஒழிய வேறெ இல்லே. உங்க புள்ளை இங்கே வந்தும் மாறலை மாமா. அவர் குடுக்கிற சம்பளம் அவர் குடிக்கிறதுக்கும் வாடகைக்கும் சரியாப் போயிடுது. சாப்பாட்டுக்கு? கழுத்துல கிடந்த தாலியக் கூட வித்துட்டேன். இந்த அழகில நாலுவகை பழம் வாங்கி சடங்கு செய்யக்கூட யோக்யதை இல்லையே..."

"அதுக்காக!" என்று ஆரம்பித்த இந்திராவை கண்களால் அடக்கினார்.

"சரி... பார்த்துக்கலாம். பூங்கொடிக்கு தெரிஞ்சா கத்துவா. அவளையும் சமாதானம் பண்ணி நம்ம குடும்பம் வரைக்கும் சின்ன சடங்குப் பண்ணிடலாம்" என்றார்.

"எதுக்கு?" என்று பேச்செடுத்த வைஷ்ணவி, மேற்கொண்டு இதைப்பற்றி பேச்சு வளர்க்க வேண்டாம் என்றெண்ணி வாயை மூடிக் கொண்டாள்.

அந்த வீட்டின் வறுமை உள்ளத்தை தகக்கியது.

சுசீந்திரன் வீட்டிற்காக எதையும் செய்யாவிட்டாலும்... வக்கணையாக சாப்பிட்டு பழக்கம். அதுவும் வைஷ்ணவி சமையலில் கெட்டிக்காரி. அதனால் நல்ல சாப்பாடு சாப்பிட்டு நாக்கு பழகிவிட்டது. ஆனால், அன்று பெரியவர்கள் இருவரும் சாப்பிட்ட போதுதான் அவர்களின் கஷ்டம் இன்னும் புரிந்தது.

ரேஷன் அரிசி சாப்பாடு.

மஞ்சள் நிறத்தில்... கொட்டையாய் சாதம்! வைஷ்ணவி வைத்த பூண்டுக் குழம்பு அபாரமாய் இருந்தாலும்... சாப்பாட்டுக்கு ஒத்து வரவில்லை.

பிரியாவும், ஸ்கூல் விட்டு வந்திருந்த மகேஷும் இயல்பாய் சாப்பிட... மனசு ரம்பமாய் அறுத்தது.

வரும்போதே சுசீந்திரன் போதையில்தான் வந்தான். பெற்றவர்களை பார்த்ததும் சங்கடமாய் சிரித்தான்.

பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு எல்லாரையும் படுக்க வைத்தபின் வைஷ்ணவி தையல் மிஷினில் கால் வைத்தாள்.

இரவு ஒரு மணி வரை மிஷின் ஓடிக் கொண்டேயிருந்தது.

'இவ்வளவு கஷ்டத்தில் நம் பாரம் வேறா? சுமைக்கு மேல் சுமையை ஏற்றுவதை விட, அங்கே கண்களையும் காதுகளையும் பொத்திக் கொண்டால் போச்சு.'

இரண்டு நாள் இருந்து விட்டு கிளம்பினார்.

பதறிவிட்டாள் வைஷ்ணவி.

"என்னாச்சு அத்தே... ஏன் மாமா? எதுக்கு கிளம்பறீங்க?"

"இல்லேம்மா... சும்மா இங்கே பேரப்புள்ளைங்களோட ரெண்டுநாள் தங்கிட்டு போகணும்னு தோணுச்சு. வந்தோம். சந்தோஷமா புறப்படறோம்."

"நீங்க என்ன நினைக்கறீங்களோ தெரியாது. ஆனா, உங்களை எப்பவும் என் கூடவே வச்சுக்கணும்னு ஆசைப்படறேன். இந்த கஷ்டம்லாம் மனசு வச்சா போயிடும் மாமா. தைக்கறதுக்கு நிறைய ஆர்டர் வருது. எடுத்து செஞ்சா... நல்லாயிருக்கலாம் மாமா! எனக்கும் யாருமில்லே. என் குழந்தைகளுக்கு உங்களை மாதிரி பெரியவங்க வேணும். அத்தை, நீங்க என்கிட்ட கோபமா நடந்துக்கிட்டாலும், அத்தனையும் வாழ்க்கைக்கு தேவையான விஷயம்தான். அத்தைக்கு எப்படி பேசணும்னு தெரியலியே தவிர, சொல்ற விஷயங்கள் ரொம்ப சரி. தயவுப் பண்ணிப் போகாதீங்க!" கைகூப்பினாள் கண்ணீர் துளிர்க்க.

இந்திராவும் இளகிதான் போனாள்.

பொன்னீலன் மருமகளின் தலையை அழுத்தினார்.

"அம்மாடி... உன்மேல எந்த கோபமும் இல்லே. வீணா மனசைப் போட்டு ரணமாக்கிக்காதே! அடிக்கடி வர்றோம். ரெண்டு மூணு நாள் இருந்துட்டுப் போறோம். சரியா...? வர்றோம்!"

புறப்பட்டனர்.

* * *

வீட்டிற்கு திரும்பி வந்தவர்களை இளக்காரமாய் பார்த்த பைரவி தனக்குத்தானே நமுட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

இருவரும் கூனிக்குறுகிப் போயினர்.

வயது தந்த பக்குவம் தலைகுனிந்துப் போக வைத்தது.

அதற்கடுத்த இரண்டாவது நாள் பைரவி மயக்கமும் வாந்தியுமாய் வீட்டை ரெண்டு படுத்தினாள். மருமகள் உண்டாகி இருக்கிற விஷயம் இந்திராவை திக்குமுக்காடச் செய்ய... எல்லாம் மறந்து மருமகளை கொண்டாடினாள்.

வாந்தியை கழுவி விட்டாள். மருமகளை கட்டிலை விட்டு இறங்க விடவில்லை. அவளுக்கு வேண்டியதை கேட்டுக் கேட்டு செய்தாள்.

அவள் சுபாவம் அப்படி!

ஆனால், பொன்னீலன் மனைவியை கவலையாய் பார்த்தார்.

'அவமானப்பட்டு வருவாளே!'

## 14

ஒரு வேலையும் செய்யாமல் படுத்தேக் கிடந்தாள் பைரவி. எல்லா வேலையும் இந்திராவின் தலையில். நிஜந்தனோ ஒருபடி மேலேப் போய் மனைவியை தன் மடியில் படுக்க வைத்து உறங்க வைத்தான்.

மகளைப் பார்க்க பைரவியின் பெற்றோரும், சித்தி, சித்தப்பாவும் வருவதாக தகவல் வர, இந்திராவினுள் உறங்கிக் கொண்டிருந்த குசும்பு மாமியாரின் ஈகோ தலைத்தூக்க... யாரிடமும் சொல்லிக்காமல் பெரிய மகனின் வீட்டிற்கு சென்று விட்டு மாலைதான் வீடு திரும்பினாள்.

வந்தவர்களுக்கு காபிக் கூட தர முடியாமல், மதிய உணவும் இல்லாமல் தடுமாறி விட்டான் நிஜந்தன். எல்லோருக்கும் ஓட்டலிலேயே ஆர்டர் பண்ணி வரவழைத்தான்.

"என்ன மாப்பிள்ளே? என் பொண்ணுக்கு இந்த நேரத்திலே பார்த்துப் பார்த்து சமைச்சிப் போட வேணாமா? தண்ணி எடுத்து குடுக்கக்கூட ஆளில்லே? குழந்தை சவலையாய் பிறக்காதா? அடக் குழந்தையக் கூட விடுங்க... என் பொண்ணு என்ன கதியாவா? தயவுப் பண்ணி பைரவிய எங்க வீட்டுக்கு அனுப்பி வச்சிடுங்க... புண்ணியமாப் போகும்!"

போகிறபோக்கில் தங்கள் வருத்தத்தையும், கோபத்தையும் இறக்கி வைத்து விட்டுப் போக... சங்கடத்தில் நெளிந்தான் நிஜந்தன்.

அவர்கள் சென்றபின் கணவனின் கைகளைப் பற்றிக் கொண்டு அழுதாள்.

"ரொம்பக் கஷ்டமாயிருக்குங்க! பெத்தமக உண்டாகியிருக்கான்னு ஆசையா பாக்க வந்தவங்களை இந்த வீட்டு பெரிய மனுஷி இப்படியா அசிங்கப்படுத்தணும்? அங்கே சாப்பாட்டுக்கு வழியில்லேன்னா இங்கே வந்தாங்க? நினைச்சாலே நெஞ்சை அறுக்கிற மாதிரி இருக்குங்க. எவ்ளோ அசிங்கம், அவமானம்? விட்ருங்க, நான் அம்மா வீட்டுக்கேப் போயிடறேன்!"

"ப்ளீஸ்டா... இப்படியெல்லாம் பேசாதே! அழாதே... கண்ணைத் தொடை முதல்ல... வரட்டும் அந்த பொம்பளை... பேசிக்கறேன்!" கறுவிக் கொண்டான்.

எதுவும் நடவாததுப் போல் உள்ளே நுழைந்த இந்திராவை தடுத்து நிறுத்தினான்.

"எங்கே போயிட்டு வர்றே?"

"சுசீந்திரன் வீட்டுக்கு!"

"என் மாமியார் வீட்லேர்ந்து எல்லாரும் வந்தாங்கத் தெரியுமா?"

"ம்... தெரியுமே!"

"அப்ப வந்தவங்களுக்கு சமைக்கணும்னு தெரியாதா?"

"இதென்னடாப்பா அநியாயமா இருக்கு? உன் பொண்டாட்டி எங்களுக்குப் பண்ற அநியாயத்துக்கு அவளை உக்கார வச்சி ஆக்கிப் போடறதேப் பெரிய விஷயம். இவங்க வீட்டுப் பட்டாளத்துக்கு ஆக்கிப்

போட நானென்ன வேலைக்காரியா? மதிக்கறதுக்கு ஆளைக் காணோம். மாமியார் வீட்டுக்காக பரிஞ்சுக்கிட்டு வர்றே? அவங்க எக்கேடோ போகட்டும்... எனக்கென்ன?" இந்திராவின் நாக்கில் அமர்ந்திருந்த சனி வேலை செய்தது.

"பாருங்க... என்னப் பேசறாங்கன்னு? ச்சீ... இவங்ககிட்டே சரிக்கு சமமா நின்னுப் பேசவே கூடாது... மனுஷியா இவங்க?"

"ஏய் யாரைப் பார்த்து மனுஷியான்னு கேக்கறே... பல்லைத் தட்டிடுவேன்?"

"அம்மா வாயமூடு... அப்புறம் நான் மனுஷனா இருக்க மாட்டேன்!" நிஜந்தன் அதட்டினான்.

"பார்த்தீங்கல்ல... உங்க முன்னாடியே அடிக்க வாறாங்க..."

"நான் எப்படி அடிக்க வந்தேன்?"

"மரியாதையா உள்ளேப் போ! என் குடும்பத்தை சீரழிக்கணும்னு கங்கணம் கட்டிக்கிட்டிருக்கியா?" என்று அம்மாவை எரித்து விடுவதைப் போல் பார்த்தவன், அழுதுக் கொண்டே அறைக்குள் சென்ற மனைவியின் பின்னே பரிதவிப்புடன் ஓடினான்.

"பைரவி... பைரவி..."

"வேணாங்க... உங்கம்மாவை பார்த்தாலே பயமா இருக்கு. எனக்கு மட்டுமில்லே... நம்ம குழந்தைக்கும் இவங்களால ஆபத்துதான். நான் அம்மா வீட்டுக்குப் போறேங்க."

"என்ன பைரவி, நீயும் என்னை கஷ்டப்படுத்தறே?"

"புரிஞ்சுக்குங்க... இதுக்கு மேலேயும் என்னால இங்கே இருக்க முடியாது. நமக்கு நம்ம குழந்தை முக்கியம்... என்னைப் பார்க்கணும்னு தோணுச்சுன்னா... அங்கே வந்துப் பாருங்க. எனக்கு உங்க மேலே எந்தக் கோபமும் இல்லே..." பேகில் துணிகளை எடுத்து வைத்துக் கொண்டே கூறினாள்.

"நீயில்லாம நான் இருக்க முடியுமா பைரவி? எல்லாம் சரிப்பண்ணிடலாம் பொறுடா!"

"ஏய்... நீ என்னச் சொல்ல வர்றே? என்னாலதான் உனக்கும், உன் குழந்தைக்கும் ஆபத்தா? இப்படி எல்லாம் பேசுன்னு உன் ஆத்தாக்காரி தூபம் போட்டுட்டுப் போய்ட்டாளா? ஓவரா சீன் போடறே?"

"அம்மா... அப்புறம் மரியாதைக் கெட்டுடும். அம்மாவை கையை நீட்டி அடிச்சிட்டான்னு மத்தவங்க என்னைப் பேசற அளவுக்கு வச்சுக்காதே! போய்டு..." அடித் தொண்டையில் கத்தினான்.

அந்த வார்த்தையில் உடைந்துப் போன இந்திராவுக்கு வாயடைத்துப் போனது.

"இதுக்குப் பிறகுமா நான் இங்கே இருக்க முடியும்? நீங்களே ஆட்டோ கூட்டிட்டு வர்றீங்களா? இல்லே நானேப் போகவா?"

எவ்வளவு கெஞ்சியும் அவள் இறங்கி வர மறுக்க... வேறு வழியின்றி நெஞ்சு கனக்க ஆட்டோவில் ஏற்றி அனுப்பினான்.

* * *

பொன்னீலன்... நிஜந்தன் சொல்வதை பொறுமையாய் கேட்டுக் கொண்டவர்... ஆத்திரத்துடன் மனைவியை பார்த்தார்.

"அவ கன்சீவா இருக்கா. இப்படியெல்லாம் நோகடிச்சிட்டு, அசிங்கப்படுத்தினா... அது என் குழந்தைய பாதிக்காதா?"

"இதோ பாருப்பா... அவ இங்கேர்ந்து போய்டணும்னு ஏற்கனவே முடிவுப் பண்ணிட்டா... அதுக்கு என்னை காரணமாக்கிட்டா..." என்றாள் இந்திரா.

அவள் பேசி முடிக்கவில்லை... கன்னத்தில் 'ரப்'பென்று அறை விழுந்தது.

"அடங்க மாட்டியா? இந்த வாய்தான்டி உனக்கு சகுனி. இந்த வாயால இன்னும் என்னென்ன இம்சையெல்லாம் இழுத்து விடப்போறியோ... தெரியல? வாயும் கையும் இழுத்துக்கிட்டு கிடந்தா தேவலேன்னு தோணுது. உன் நிலைமைக்கு நீ இவ்வளவு பேசலாமா? அதுக்கு தகுதியிருக்கா உனக்கு?" பொன்னீலனுக்கு ஆவேசத்தில் மூச்சிரைத்தது.

கணவரிடம் இதுவரை அடியே வாங்காத இந்திராவுக்கு அடியின் வலியை விட... அடித்து விட்டாரே என்ற உண்மைதான் சுருள வைத்தது.

நிஜந்தன் பார்த்துக் கொண்டு நின்றானே ஒழிய தடுக்கவில்லை.

"நீ வருத்தப்படாதேப்பா. நான் சம்பந்தி வீட்டுக்குப் போறேன். நடந்த சம்பவத்துக்கு மன்னிப்பு கேட்டு, எப்படியாவது பைரவியை அழைச்சிட்டு வந்திடறேன்."

"ம்..." என்றபடி அகன்றான்.

"நீ திருந்தமாட்டே இந்திரா. நீ பேசற பேச்சுக்கு எல்லாத்துக்கும் வாய மூடிக்கிட்டு இருக்க பைரவி ஒண்ணும் வைஷ்ணவி கிடையாது. தவிர, நீ இதை எல்லாம் பேச வேண்டிய அவசியமே இல்லை. ச்சே... உன்னால, என்னையே கைநீட்டி அடிக்க வச்சிட்டியே!" உள்ளுக்குள் கலங்க... சேரில் அமர்ந்து வேதனைப்பட்டார்.

* * *

போனில் நிஜந்தன் எவ்வளவோ கெஞ்சியும் பைரவி வர மறுத்தாள்.

"வேணாங்க. நல்ல மனசில்லாதவங்க மத்தியில நம்ம குழந்தை வளர வேண்டாம். எனக்கும் நிம்மதி தேவை. உங்கம்மா முகத்துல நான் முழிக்கறதாயில்லை."

"இப்படி சொன்னா எப்படி பைரவி?"

"அவ சொல்றதுல என்னப்பா தப்பு! நான் அவங்ககிட்டே பேசினதுக்கூட இல்லே! பிறகெப்படி என்னைப் பத்தி அவ்வளவு மோசமா பேசலாம் மாப்பிள்ளே! பைரவிய பார்க்கணும்னா... இங்கே வந்துப் பாருங்க!" என்று கறாராய் பேசினாள் மாமியார்.

தொய்ந்துப் போனான்.

மறுநாள்... காலையிலேயே பைரவி வீட்டிற்கு கிளம்பி விட்டார் பொன்னீலன்.

அவர் போன அரைமணி நேரத்தில் வந்திறங்கிய பூங்கொடி வந்ததும், வராததுமாய் அம்மாவை காய்ச்சி எடுத்தாள்.

"அறிவில்லே உனக்கு? வயசாக ஆக, புத்தி மழுங்கி போகுதா? என்னதான் உன் பிரச்சினை? வீட்டுக்கு வந்த சம்பந்தியை உபசாரம் பண்ண வேண்டியது உன் கடமைதானே? உன்னால குடும்பமே ரெண்டுபடுதும்மா! போய் சேற காலத்துல உனக்கேன் இப்படியொரு கேவலமான ஆசை?"

"நீயும் என்னை புரிஞ்சுக்க மாட்டியா பூங்கொடி? அந்தப் பொண்ணு என்னை எவ்வளவோ அவமானப்படுத்தறா... தெரியுமா?"

"உன் வாய் சும்மாயிருந்திருக்காது."

"ஏய் என்ன இப்படிப் பேசறே? இவன் என்னடான்னா அடிச்சிடுவேன்ங்கிறான்... எல்லாரும் என்ன நினைச்சிட்டிருக்கீங்க?"

"அவன் பேசினது மட்டும் தப்பா என்ன? இதுவே என் மாமியார் இப்படி நடந்திருந்தா சும்மாயிருந்திருப்பேனா? கன்னத்துல நாலு அப்பு அப்பியிருப்பேன்!"

இந்திராவின் நெஞ்சம் ஒரு கணம் துடிக்க மறந்தது.

* * *

பொன்னீலனை அங்கிருந்த யாரும் 'வாங்க' என்றும் கூறவில்லை. 'உட்காருங்க' என்றும் சொல்லவில்லை.

சங்கடமாய் உணர்ந்தாலும் பைரவியிடம் தணிவாய், கிட்டத்தட்ட கெஞ்சி அழைத்தார்.

ஆனால், அவளோ உறுதியாய் சொன்னாள். 'இனி வந்தால் தனிக்குடித்தனம்தான்' என்று!

## 15

தப்பு செய்தவரும், கடன் வாங்கித் தின்பவரும் தலைகுனிந்துதான் நடக்க வேண்டும். அப்படித்தான் ஆகிப்போனது இந்திராவின் நிலைமையும்.

மனைவியைப் பிரிந்த ஏக்கத்தின் தாக்கம் பெற்றவள் மீது வெறுப்பாய் மாறியது. அவளிடம் பேசுவதையே விட்டான். ஆனால், அவளோ வலிய வந்து பேசுவாள். அவனோ, ம், இல்லை, சரி என்று உதடு நோகாமல் பதில் அளித்து விட்டுப் போவான்.

பொன்னீலனுக்கு கூட மனைவி மேல் கோபம் இருந்தது. வேலைக்குச் சென்று வந்தபின் பெரும்பாலான நேரங்களில் டி.வி.யே கதி என மூழ்கிப் போவார். முன்பு போல மனைவியிடம் மனசு விட்டுப் பேச கோபம் தடுத்தது.

இந்திரா அமைதியாய் இருந்தாள்.

என்னவோ, கொஞ்சநாளாய் அமுதினியின் நினைவு உள்ளுக்குள் ஊறிவிட, பார்க்க வேண்டும்போல இருந்தது. கணவரிடம் சொன்னால், 'அங்கே போய் அசிங்கப்படச் சொல்றியா?' என்று எகிறுவார். நிஜந்தனோ... சொல்லவே வேண்டாம். அவன் சம்பந்தமாய் ஏற்பட்ட பிளவுதானே இந்தக் குடும்பத்தில்? அதற்காக பெற்ற மகளைப் பார்க்காமல் இருந்துவிட முடியுமா? அசிங்கப்பட்டால்தான் என்ன? கல்யாணத்தில்... ஊர்பேர் தெரியாத எவனோ ஒருவன் அடிக்கவில்லையா? மருமகன்தானே? அடிக்கக்கூடச் செய்யட்டும்.

இரண்டு பேரும் வேலைக்குப் புறப்பட்டதும் 'உடைமாற்றி' திருவான்மியூருக்கு கிளம்பி விட்டாள்.

அவள் சென்ற நேரம் ஆதித்யா இல்லை. ஆபீஸ் போய்விட்டிருந்தான்.

ஆதியின் பெற்றோர் இவளைப் பார்த்து சற்றே வியந்து, பின் புன்னகையுடன் வரவேற்றனர். அதுவே கொஞ்சம் நிம்மதியைத் தந்தது இந்திராவுக்கு.

**நகம் வளர்ப்பதில் உலக சாதனை!**

கிறிஸ்டினா, உலகிலேயே அதிக நீளமான நகங்களை வளர்த்ததற்கான இந்த ஆண்டுக்கான உலக சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். லாஸ்வேகாஸ் நகரில் வெளியிடப்பட்ட கின்னஸ் சாதனை புத்தகத்தில் இவரது பெயர் இடம் பிடித்துள்ளது.

இவர் வளர்த்த மொத்த நகங்களின் நீளம் 6.02 மீட்டர் (19 அடி 9 அங்குலம்). வலது கரத்தில் உள்ள விரல்களில் வளர்ந்த நகத்தின் நீளம் 292.1 செ.மீ. (9



அடி 7 அங்குலம்). இடது கையில் உள்ள விரல் நகங்களின் நீளம் 309.8 செ.மீ. (10 அடி 2 அங்குலம்).

கடந்த 18 வருடங்களாக இந்த நகங்களை வளர்த்து உலக சாதனை புத்தகத்தில் இவர் இடம் பிடித்துள்ளார். 2009-ம் ஆண்டு உலக சாதனை படைத்த லீ ரெட்மான்ட், துரதிருஷ்டவசமாக அந்த பட்டத்தை இழந்து விட்டார். கார் விபத்து ஒன்றில் சிக்கிக் கொண்ட இவர் அதிசயமாக உயிர் தப்பினார். ஆனால், உலக சாதனை படைத்த இவரது விரல் நகங்கள் இந்த விபத்தில் துண்டாகி போயின. 30 வருடமாக தொடர்ந்து இவர் வளர்த்த நகங்கள் நசுங்கி போனதால் இவரது சாதனையும் முறிந்து போனது.

அமுதினிக்கோ, அம்மாவைப் பார்த்ததும் முகம் இருண்டுப் போனது.

"வாம்மா!" என்றாள்.

சம்பந்திகள் சற்றுநேரம் பேசியிருந்து விட்டு, "சாப்பிடாம போகக்கூடாது சரிங்களா? அமுது... அம்மாவை உன் ரூமுக்குக் கூட்டிட்டுப் போம்மா!" என்றனர்.

கூவும் இசையால் பறவையை அறியலாம். பேசுகிற பேச்சால் மனுஷனை தெரிஞ்சுக்கலாம்.

இப்படி நல்ல மனிதர்கள் உறவுகளாய் அமைந்தும் வீட்டிற்கு வரப்போக முடியாமல் கடவுள் கொக்கி போட்டு வைத்திருக்கிறானே!

வெகுநாள் கழித்து உபசரணையாய் காதில் விழுந்த வார்த்தைக்கு நன்றியுடன் ஒரு பார்வை பார்த்து தலையசைத்தாள்.

"சரிங்க!"

அறைக்குள் வந்ததும், "என்னம்மா விஷயம்... திடீர்னு வந்திருக்கே?" என்று கேட்டாள் அமுதினி.

"ஏம்மா... அம்மா வந்ததுப் பிடிக்கலையா?" முகம் வாட்டமானது.

"யாராவதுப் பிடிக்கலேன்னுச் சொல்லுவாங்களா? திடீர்னு வந்ததாலக் கேட்டேன். ஒரு போன் பண்ணிட்டு வந்திருக்கலாமேன்னு..."

"போன் பண்ணா வராதேன்னு சொல்லிடுவியோன்னு பயம். உன்னைப் பார்க்கணும் போல இருந்துச்சுடி. உன் புருஷனும் வீட்ல இருக்க மாட்டார்னு..."

"இல்லேம்மா! அவருக்கு இப்பல்லாம் புதன்கிழமைல தான் லீவு! ப்ரண்ட் வீட்ல பங்ஷன்னு போயிருக்கார்!"

"கடவுளே..."

"பயப்படாதே... சாயங்காலம்தான் வருவார்" என்றவளுக்கு அம்மாவைப் பார்க்க மனதிற்கு வேதனையாய் இருந்தது.

"டாக்டரைப் போய் பார்த்தியா? கல்யாணமாகி ஒரு வருஷம் ஓடிப் போச்சே?" என்று வினவினாள்.

என்ன பதில் சொல்வது?

அன்றைய சம்பவத்திற்குப் பின் ஆதித்யா மனைவியுடன் அந்நியோன்யமாக வாழ ஆரம்பித்தான். அவனுடைய ஒரே கண்டிஷன் 'பிறந்த வீட்டோடு தொடர்புக் கூடாது. உன்னைப் பார்க்க யாரும் இங்கே வரக் கூடாது' என்று.

அவள் கர்ப்பமானதை டாக்டர் உறுதி செய்ததும் அவன் அந்த சந்தோஷ தருணத்திலும் சொன்னது... "இந்த விஷயம் உன் வீட்டுக்குத் தெரியக் கூடாது. தெரிஞ்சா இதையே சாக்கா வச்சு உன் அம்மாவும், அப்பாவும் வர ஆரம்பிச்சிடுவாங்க. அவங்களை என்னால எப்பவுமே மன்னிக்க முடியாது" என்றான்



அடித்தான் போனாள் அமுதினி.

"அம்மா... இதைப்பத்தி அப்புறம் பேசலாம். உன் முகம் ரொம்ப டல்லாயிருக்குதே... உடம்பு சரியில்லையா?" சமாளித்தாள்.

இப்படியொரு கேள்வியை மகள் கேட்பதற்காக காத்திருந்த இந்திராவின் உள்ளம் விம்மியது.

குரல் கம்ம... நடந்தவைகளைக் கூறினாள்.

அப்பா வேலைக்குப் போய் சம்பாதிக்க வேண்டிய கட்டாயத்தை நினைத்து மனசு பதறியது.

"எல்லாம் சரியா இருந்திருந்தா... மாசத்துல பத்து நாள் உங்கூட இருந்துடுவேன். காத்துப்போன பந்தை என்னதான் எட்டி உதைச்சாலும் வேகமா ஓடாதில்லையா? அப்படித்தான் எங்க மானம், ரோஷத்துக்கெல்லாம் அணைபோட்டு வச்சிருக்கோம்!"

அம்மா பேசப்பேச... உள்ளே இம்சித்தது.

வயதான காலத்தில் என்னைப் பெற்றவர்களுக்கு இவ்வளவு வேதனை தேவையா? சுசீந்திரனும், நிஜந்தனும் சரியில்லை. வேறு யாரை குறை சொல்லியும் பயன் இல்லை.

அதன்பின் அம்மாவை சாப்பிட வைத்தாள். எந்நேரமும் புருஷன் வந்து விடுவானோ என்ற பயம் வேறு. அம்மாவிடம் சொல்லிவிட வேண்டும். 'இங்கு வந்து இனி அவமானப்பட வேண்டாம்' என்று!

"அப்புறம்... கேட்டேனே... ஆஸ்பிடலுக்குப் போனியா? ஒரு வருஷம் ஆகப் போகுதே!"

"அம்மா..." வெளிப்பட்ட கேவலை அடக்கி அம்மாவின் கையை பற்றிக் கொண்டாள்.

"இப்ப நான் மூணு மாசம்மா..."

"என்னடி சொல்றே?" அதிர்ச்சியுடன் மகளைப் பார்த்தாள்.

"எனக்கு சொல்லவே இல்லையே... எவ்ளோ பெரிய சந்தோஷமான விஷயம் இது? தெரிஞ்சிருந்தா உங்கப்பாவும் வந்திருப்பாரேடி..." கண்களில் கண்ணீர் சந்தோஷத்திலும், ஆதங்கத்திலும் துளிர்த்தது.

"அதுக்குதாம்மா சொல்லலே...!"

"............?!"

"அவருக்கு உங்கமேல இன்னும் கோபம் தீரலேம்மா! இந்த விஷயம் தெரியவேக் கூடாதுன்னு சொல்லிட்டார். என் பிரச்சினையே நானு மாசம் முன்னாடிதாம்மா சோச்சு. இப்படியொரு பொண்ணு இருக்கறதையே மறந்துடும்மா. இனிமேல் இங்கே வராதே!"

"அ...மு...து!" விக்கித்துப் போனாள்.

"என்னை மன்னிச்சிடும்மா. தவறுப் பண்ணி என்னை தப்பா மட்டும் நினைச்சிடாதேம்மா!"

இந்திராவுக்கு பேச வாய் எழவில்லை. அடிமேல் அடிபட்டு மனசு துணியாய் நைந்துப் போய் விட்டது.

மகளை ஆசையுடன் உள்வாங்கிக் கொண்டு, நரம்போடிய கைகளால் அவள் கன்னத்தை தடவி, நீண்ட பெருமூச்சுடன் திரும்பிப் பாராமல் நடந்தாள்.

அமுதினிக்கு ஓவென்று அழவேண்டும் போல் இருந்தது.

'பெற்று வளர்த்து, ஆளாக்கி ஒருவன் கையில் ஒப்படைக்கிற அளவிற்குதான் பெற்றவர்களுக்கு உரிமையா? அதுவும் பெண்ணைப் பெற்றவர்களுக்கு? என்னக் கொடுமையிது?'

* * *

நாட்கள் கரைந்தது.

தெருவாசல் பெருக்கி, சமைத்து, துணி துவைத்து எல்லா வேலையும் செய்ய இந்திராவின் வயதும், நோயும் இடம் தரவில்லை. வீட்டுக்கு வீடு வந்துவிட்ட சுகரும், பிரஷரும் இரண்டுபேருக்குமே இருந்தது. அதுவும் பொன்னிலனுக்கு உடம்பில் உப்பும் சேர்ந்திருந்ததால் அடிக்கடி கால் வீங்கி விடும்.

அன்றும் கால்வலியுடன் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார். இந்திரா ஒரு அகன்ற பாத்திரத்தில் உடல் தாங்கும் அளவு சுடுநீருடன் வந்தாள்.

"இந்தாங்க... இதுக்குள்ளே காலை வச்சுக்குங்க. எப்படி வீங்கியிருக்கு? படுக்கறப்ப மருந்து தேச்சு விடறேன்." அவளே அவரின் கால்களை எடுத்து பாத்திரத்தில் வைத்தாள்.

பொன்னிலனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. அவளாகவே கவனித்து... அக்கறையுடன் செயல்பட்டவளை அப்போதுதான் உற்று கவனித்தார்.

முன்பைவிட நன்றாக இளைத்து, நடக்கும்போது லேசாய் ஒரு பக்கம் சாய்த்து நடந்து வந்தாள்.

அவளிடம் சரிவரப் பேசி நாளானதால்

அவனிடம் தெரிந்த மாற்றங்கள் கண்ணுக்கு புலப்படவில்லை.

கரிசனத்துடன் பார்த்தார்.

"இந்திரா!"

அவர் இப்படி அழைத்து பலமாதமாகி விட்டது.

"என்னங்க!" என்றாள் ஆச்சர்யத்துடன்.

"ஏன்... நொண்டி... நொண்டி நடக்கிறே?"

"தெரியலீங்க... அன்னைக்கு பஸ்லேர்ந்து விழுந்துட்டேன்னு சொன்னேனே... அப்பயிருந்தே இப்படித்தான் ஆயிடுச்சு!"

"ஊம்பு... டாக்டர்கிட்ட போகலாம்!"

சிரித்தாள் இந்திரா.

"வாங்கற சம்பளத்தை எல்லாம் இன்னைக்கு டாக்டருக்குத் தாரை வார்க்கறதுன்னு முடிவுப் பண்ணியாச்சா? முட்டி வலின்னா கம்மா விட்டுவாங்களா! அவருக்கு எதிலேயெல்லாம் கமிஷன் வருதோ, அத்தனை டெஸ்ட்டும் எழுதிக் குடுத்துட மாட்டாரா? இருக்கவே இருக்கு கவர்மெண்ட் ஆஸ்பத்திரி. அங்கே போய்க்கறேன். அதைவிட இப்படி சகஜமா பேசுங்க... வலிப் போயிடும்."

பொன்னிலவனுக்கு சுருக்கென்று தைத்தது.

"ப்ச்... தப்புதான்! நீ தெரிஞ்சு பேசறியோ, தெரியாமப் பேசறியோ புரியல. ஆனா, மனசளவுல நீ குழந்தைதாண்டி!" என்றார்.

## 16

பைரவிக்கு ஆண் குழந்தைப் பிறந்த செய்தியைக் கேட்டதும் எம்பி குதிக்காத குறையாய் குதூகலித்தான் நிஜந்தன்.

"பையனா, சுகப்பிரசவமா? சாயல் யாரை மாதிரி? எவ்வளவு எடை?" தன் மகனின் பின்னே ஆவலுடன் சுற்றி வந்து கேள்வி கேட்ட இந்திராவுக்கு கிடைத்த ஒரே பதில், தெரியாது!

பொன்னிலவன், துவண்டுப் போயிருந்த மனைவியை தட்டிக் கொடுத்தார்.

"அவனுக்கே இப்பத்தானே தகவல் வந்தது? அவனுக்கு மட்டும் எப்படித் தெரியும்? நாம போய் பார்த்துட்டு வரலாம்... ரெடியாயிடு."

"நிஜமாவா? இதோ பத்தே நிமிஷம்... வந்துடறேன்."

சற்றுநேரத்தில் நிஜந்தன் பைக்கில் புறப்பட்டுவிட இவர்களிருவரும் பஸ்சில் சென்றனர்.

அறுத்துப் போட்ட கொடியாய் உறங்கிக் கொண்டிருந்தாள் பைரவி.

குழந்தை சுகப்பிரசவம்தான். நல்ல எடையுடன் நிறமாய் கொழுகொழுவென சாயலில் நிஜந்தனைக் கொண்டு பிறந்திருந்தான்.

நிஜந்தனுக்குப் பெருமை பிடிபடவில்லை. தூக்க பயந்து ஒற்றை விரலால் தொட்டுப் பார்த்து சிலிர்த்தான்.

இந்திரா பேரனைப் பார்த்து பூரித்துப் போனாள். பைரவியின் தலையை கோதி விட்டாள்.

"கண்டதையும் சாப்பிடக் குடுத்துடாதீங்க. பத்தியச் சாப்பாடுதான் குடுக்கணும். எப்படி பலமில்லாமக் கெடக்கிறாப் பாரு. வேளா வேளைக்கு நான் சமைச்சுத் தர்றேன்!"

"அந்த சிரமம் உங்களுக்கு வேண்டாம். என் பொண்ணுக்கு என்னப் பண்ணணும்னு எனக்குத் தெரியாதா? அதெல்லாம் நாங்க பார்த்துக்கறோம்" என்றாள் விஜயா... முகத்தில் அடிப்பதுபோல்.

அவர் பிறகும் பேசிவிடக் கூடாதென மனைவியின் கையைப் பற்றி சமிக்ஞையாய் அழுத்தினார் பொன்னிலவன்.

புரிந்துக் கொண்டவளாய் பேரனைத் தூக்கினாள்.

"அட... என்ன மாப்ளே இவங்க... வரவங்க போறவங்க எல்லாம் குழந்தையத் தூக்கினா இன்பெக்ஷன் ஆகிடாதா?"

இதற்கு நிஜந்தனே பதில் சொல்லட்டும் என்று பொன்னிலவனும் காத்திருக்க...

கண்விழித்த பைரவி அங்கிருந்த மாமியாரை பார்த்து முகம் சுருக்கினாள்.

"இவங்க எதுக்கு வந்தாங்க? என் குழந்தைய தொட வேணாம்னு சொல்லுங்க!"

இப்போது பொன்னிலவனே வாயைத் திறந்தார்.

"ஏம்மா... குழந்தையப் பார்க்க, கொஞ்ச எங்களுக்கு மட்டும் ஆசை இருக்காதா?"

"அதுக்கு மொதல்ல நல்ல எண்ணம் இருக்கணும்"

வார்த்தை முள்ளாய் குத்தியது.

நிஜந்தன் சங்கடத்துடன் அப்பாவை ஏறிட்டான்.

"இங்கே வீண் பிரச்சினை வேண்டாமே!"

'வெளியே போய்விடு' என்பதை சொல்லாமல் சொன்னான்.

மனைவியுடன் வெளியேறினார் பொன்னிலவன்.

* * *

நிஜந்தன் ஆண்பிள்ளை பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாட நண்பர்கள், உறவினர்கள், தெருவாசிகள் என அனைவருக்கும் இனிப்பு வழங்கினான்.

சுசீந்திரன் வீட்டிற்கும் ஸ்வீட் பாக்ஸுடன் போனான்.

சுசீந்திரன் மட்டும் வீட்டில் இருந்தான்.


"வாடா... எல்லாம் கேள்விப்பட்டேன். பைரவியும், குழந்தையும் சுகமாயிருக்காங்களா?"

"நல்லாருக்காங்க. நைட் ஷிப்டா?"

"ம்"

"அண்ணி எங்கே?"

இழுத்துப் போட்ட சேரில் அமர்ந்தவன் சுற்றிலும் பார்வையை ஓட விட்டான்.



அண்ணி தையல் வேலைப் பார்ப்பது புரிந்தது. வீட்டில் சுபிட்சம் இல்லை.

"பக்கத்து தெருவுல வளைகாப்பு. சமையல் பண்ணி முடிச்சிட்டு வந்துடுவா... வாற நேரம்தான்!"

அப்போது மகேஷ் புத்தகப்பையுடன் வந்தான்.

"ஹை... சித்தப்பா... ஸ்வீட்டா... எனக்கா?" ஆவலுடன் கையிலிருப்பதைப் பிடுங்கினான்.

"உனக்கேதான்! என்ன கபி... தனியாவே வந்துடுவானா? எந்த ஸ்கூல்ல படிக்கிறான்?"

"எங்க ஸ்கூல் பக்கத்து தெருவுலதான் இருக்கு சித்தப்பா! சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி" அப்பாவுக்கு முன் அவனே பதில் கூறினான் மழலை மாறாத... தெளிவான வார்த்தையில்.

ஒரு மாதிரி ஆகிவிட்டது நிஜந்தனுக்கு.

புரிந்துக் கொண்டவனாய், "எங்கே படிச்சா என்ன! நல்லா படிச்சாப் போதும். க்ளாஸ்ல தேர்ட் ரேங்க்! சரி... டீ போடவா?" என்றான் சுசிந்திரன்.

"ப்ச... வேண்டாம். திரும்பவும் ஹாஸ்பிடல ஓடணும். அண்ணி வந்தா சொல்லிடு... வர்றேன்!"

"ஒரு நிமிஷம். சில விஷயங்கள் கேள்விப்பட்டேன். அம்மாவோட வாய் சரியில்லே. அது நமக்கு தெரிஞ்ச விஷயம்தான். பைரவியை பிரிஞ்சிருக்காதே. உன் குழந்தை முக்கியம். அவன் தினமும் உன் முகம் பார்த்து வளரணும். அதுக்காக... பைரவி என்ன சொன்னாலும் கேட்டுக்க... வேற வழியே இல்லை."

நிஜந்தன் அதை ஆமோதிப்பது போல் மெல்லத் தலையாட்டினான்.

* * *

மீதி ஸ்வீட்ஸை அப்பாவிடம் நீட்டினான்.

"எப்ப டிஸ்சார்ஜ் பண்றாங்க நிஜந்தன்?"

"நாலஞ்சு நாள் ஆகும்!"

"ஏம்ப்பா... ஹாஸ்பிடல்ல உன் பொண்டாட்டியும், மாமியாரும் பேசுனதை கேட்டுக்கிட்டுதானே இருந்தே? ஒரு வார்த்தை கேட்டியா?" என்றபடி வந்தாள் இந்திரா.

"சரி... இனிமே அங்கே வராதீங்க!"

"எ... என்ன?" இருவருமே திடுக்கிட்டனர்.

"எனக்கு வேற வழித் தெரியலே. என்னை என்னப் பண்ணச் சொல்றீங்க? உங்க புண்ணியத்தால பொண்டாட்டியப் பிரிஞ்சிருந்தேன். இப்ப என் புள்ளையையும் பிரிஞ்சிருக்க என்னால முடியாது. தயவு செய்து என்னைப் புரிஞ்சுக்குங்க!" கைகூப்பி வணங்கினான்.

அவன் செய்கை அவமானமாய் இருந்தது.

நான்கு நாட்களுக்குப் பின் டிஸ்சார்ஜ் ஆகி பிறந்த வீட்டிற்கு சென்றாள் பைரவி.

வேலை முடிந்ததும் தினமும் குழந்தையைப் பார்க்க மாமியார் வீட்டிற்கு ஓடி விடுவான் நிஜந்தன்.

பெரியவர்கள்தான் பேரனைப் பார்க்க முடியாமல் திண்டாடிப் போயினர்.

நிஜந்தனுக்கு அந்த பிஞ்சு முகத்தைப் பார்க்கும் போது... டென்ஷனும், கவலையும் பஞ்சாய் பறந்து விடும்.

"ஆபீஸ்ல இருந்தாலும் இவன் ஞாபகமாகவே இருக்கு பைரவி."

"இருக்காதா பின்னே? லட்டு மாதிரி உங்க சாயல்லேயே பெத்துக் குடுத்திருக்கேனே!"

"இவனைப் பார்க்காம என்னால இருக்க முடியாது."

"உங்களை யார் இவனைப் பிரிஞ்சிருக்கச் சொன்னது?"

"புரியுதில்லே? நம்ம வீட்டுக்கே வந்துடு பைரவி!"

பைரவி கணவனின் கேசத்தினுள் விரல் கோதி, "தயவுப் பண்ணி என்னை கம்ப்பல் பண்ணாதீங்க செல்லம். இனி நான் வர்றதானால் தனிக்குடித்தனம் வச்சாதான் வருவேன்!"

"புரியுதுடா! ஆனா அம்மா அப்பா எங்கேப் போவாங்க? அதையும் யோசிக்கணுமில்லையா?"

"அவங்களுக்கு நீங்க மட்டும்தான் புள்ளையா? அந்தக் கடமை உங்களுக்கு மட்டும்தானா? இதை எல்லாம் யோசிக்க வேண்டியது நீங்கதான்!"

"குழந்தைய வச்சுக்கிட்டு தனிக்குடித்தன மெல்லாம் கஷ்டமடா. பார்த்துக்க, நல்லது கெட்டது சொல்ல பெரியவங்க வேணும் பைரவி!"

"கொஞ்ச நாளைக்கு எங்கம்மாவை கூடவே தங்க வச்சுக்கிட்டாப் போச்சு!"

அழகாய் வாயை அடைத்தாள்.

திணறித்தான் போனான் நிஜந்தன்.

* * *

அந்த மாதம் வாங்கிய சம்பளத்தில் அரிசி, பருப்பு, புளி, மிளகாய் என இரண்டு பெரிய பை நிறைய ஆளுக்கொன்றாய் சுமந்துக் கொண்டு சுசிந்திரன் வீடு நோக்கி வந்துக் கொண்டிருந்தனர் பொன்னிலனும், இந்திராவும்.

வீட்டினுள் நிஜந்தனும் இருந்தான். அவன் பேசுவதை நிதானமாக கேட்டுக் கொண்டிருந்தனர் சுசிந்திரனும், வைஷ்ணவியும்.

"சரி... இதையேன் என்கிட்டச் சொல்றே?" என்றான் சுசிந்திரன்.

"என் வாழ்க்கையைப் பத்தியும் கொஞ்சம் யோசியுங்க. பூங்கொடிகிட்டேயும் பேசினேன். நான் வாழவா, வேணாமான்னு கேக்கறா! அம்மா, அப்பாவை நான் எப்படி வச்சுக்க முடியுமங்கறா!"

"..............?!"

"நீதான் அவங்களை வச்சுக்கணும் சுசிந்திரா. மாசாமாசம் ரெண்டாயிரம் குடுத்துடறேன். அப்பாவும் சம்பாதிக்கிறார். உனக்கும் யூஸ்புல்லா இருக்கும்!"

"இதோ பார் நிஜந்தா... அவங்களை நான் மட்டுமில்லே... ஹவுஸ் ஓனரே இங்கே வச்சுக்க அனுமதிக்க மாட்டார். என்னால முடியாது. ஏற்கனவே என் பொண்டாட்டி அம்மாகிட்ட எவ்வளவோ அனுபவிச்சிட்டா. இப்ப மறுபடி எங்க நிம்மதியக் கெடுக்கணுமா?"

"இப்படி பேசினா எப்படி? நான் மட்டும் சொந்த வீட்லயா இருக்கேன்? எனக்கும் பிரச்சினை இருக்குது. பைரவி தனிக்குடித்தனம்தான்னு அடிச்சிப் பேசறா. என் பொண்டாட்டி புள்ளைய எவ்வளவு காலம்தான் பிரிஞ்சிருக்கறது? சொல்லப் போனா, வீட்டுக்கு மூத்தப்பிள்ளை நீ! உனக்கும் பொறுப்பும், கடமையும் அதிகம்."

"நல்லாருக்கே நீ பேசறது? அப்பா, தான் வாரிசா வேலைக்கு என்னையா வச்சார்? குடிகாரன்னா பாசமிருக்காதா? பொறுப்பிருக்காதா? ஆனா, என்னை அந்தாளு நம்பலையே! உன்னையதானே நம்புனாரு! அந்த வீட்டிலே எவ்வளவு அசிங்கப்பட்டேன், அவமானப்பட்டேன்? மனசுக்குள்ளே புகைஞ்சுக்கிட்டிருக்கு. சாகற வரை மறக்க மாட்டேன்!" என்றான் நாசி விரிய.

வைஷ்ணவியால் அதற்குமேல் பொறுக்க முடியவில்லை.

"என்னப் பேசறீங்க நீங்க? உங்களைப் பெத்தவங்களுக்கு உங்கமேல எவ்வளவு பாசமிருக்குன்னு உங்களுக்கேத் தெரியும். நீங்க பொறுப்பில்லாம நடந்துக்கிட்டதாலதான் அந்த வேலை உங்களுக்கு தரலை. அது நியாயம்தானே? அவங்களை எப்பவுமே நான் மாமனார், மாமியாராப் பார்த்ததில்லே. அத்தைக்கு பேசத் தெரியாது. ஆனா, சரியான விஷயத்தைதான் பேசுவாங்க. அது ஒரு குற்றமா? என் குழந்தைங்களுக்கு அவங்க வேணும். தாத்தா, பாட்டிங்கற உறவு பொக்கிஷம் மாதிரி. பொக்கிஷம் நம்ம வீட்டு பீரோவுல இருந்தாதான் நமக்கும் மரியாதை. ஹவுஸ் ஓனர்கிட்டே நான் பேசறேன். கூட நூறோ, இருநூறோ வாடகை குடுத்துட்டா போதும். நான்தான் சம்பாதிக்கிறேனே. கூட ரெண்டு வீட்டுல சமைச்சுக் குடுத்தா... செலவை சரிக்கட்டிடலாம். அவங்களை நாமே..."

"ஏய்... வாயை மூடறியா இப்ப?"

அவன் கத்திய கத்தலில் அரண்டுப் போனாள் வைஷ்ணவி.

"இதோ பார் நிஜந்தா... என் முடிவு இதுதான். என்னால முடியாது."

"என்னாலயும் வச்சுக்க முடியாது."

"அது உன் பிரச்சினை!"

"வேற வழியில்லே... முதியோர் இல்லத்துலதான் சேர்க்கப் போறேன்."

"அதுவும் உன் பிரச்சினைதான்!" என்றான் சிறிதும் வருத்தமின்றி.

வெளியில் நின்றிருந்த பெரியவர்கள் இருவரும் அதிர்ச்சியில் சிலையாகிப் போயிருந்தனர்.

கையிலிருந்த கனம் மனசுக்குள்ளும் ஏறிக் கொள்ள... திரும்பி நடந்தனர்.

* * *

வீட்டிற்கு வந்தபின்பும் இருவரும் பேசிக் கொள்ளவேயில்லை. பலதையும் யோசித்து களைப்புற்றது உள்ளம்.

வீடு திரும்பிய நிஜந்தன் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டிருந்தான். பீரோவைத் திறந்தவன் அறைந்து சாத்தினான். அவன் கோபத்தை கதவு, பாத்திரம் என்று எல்லாவற்றிலும் வெளிப்படுத்தினான்.

இந்திரா எதையும் காட்டிக் கொள்ளாமல் மகனின் அருகேச் சென்றாள்.

"நைட்டுக்கு என்னப்பா சமைக்கட்டும்?"

"ஒன்னுந் தேவையில்லே. நான் என் மாமியார் வீட்டுக்குப் போறேன். வர ரெண்டு, மூணு நாள் ஆகும்!" என்றான் சிடுசிடுப்பாக.

புரிந்தது. 'தங்களை முதியோர் இல்லத்திற்கு அனுப்புவதற்காக, மனைவியிடம் ஆலோசனை நடத்தச் செல்கிறான்.'

"சரிப்பா" என்றான் ஒற்றை வார்த்தையில்.

இரவு பொன்னீலன் சாப்பிட பிடிக்கவில்லை என்று மறுத்து விட்டார். அவளுக்கும் சாப்பிட தோணவில்லை என்பதால்... அவரை வற்புறுத்தவில்லை. நெஞ்சு முட்ட வேதனையும், ஒருவிதமான திகிலும் வியாபித்திருந்தது.

பொன்னீலன் கடும் யோசனையில் இருந்தார்.

நடந்த விஷயம் பற்றி ஒரு வார்த்தை கூட மனைவியிடம் பரிமாறிக் கொள்ளவில்லை. அவளும் கேட்கவில்லை.

எப்போது உறங்கினாளோ? திடீரென நள்ளிரவில் முழிப்பு வர... புரண்டு படுத்தாள்.

பக்கத்தில் கணவரைக் காணோம்.

திடுக்கிட்டு எழுந்தாள்.

ஜன்னலோரம் நின்றிருந்தப் பொன்னீலன் கம்பியைப் பற்றியபடி சத்தம் வராமல் உடல் குலுங்க அழுதுக் கொண்டிருந்தார்.

"ஐயோ... என்னங்க... ஏன்... ஏன் அழறீங்க?" பதறியடித்து அவரைப் பற்றிக் கொண்டாள்.

"முடியல இந்திரா... நினைச்சாலே நெஞ்சு அடைக்குது. கடைசியில நம்ம வாழ்க்கை முதியோர் இல்லத்துலதான் முடியப் போகுதா?"

இதுவரை... இத்தனை வருட மணவாழ்க்கையில் கணவன் அழுது பார்த்தேயிராத இந்திரா... நெஞ்சு வெடிக்க... கலங்கினாள்.

எந்த ஆறுதலும் சொல்ல வார்த்தைகளின்றி கணவரையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு...

ஒரு யோசனை பளிச்சிட்டது.

* * *

தன்னை இயல்பாய் இருக்க வைத்துக் கொள்ள முயன்றாலும் முடியவில்லை பொன்னீலனால். முகம் வாடிப் போயிருந்தது.

"இந்திரா... நேரமாச்சே... வேலைக்குப் போகணும்... டிபன் வை!"

"இதோ வந்துட்டேங்க!"

இருவருக்கும் தட்டு வைத்து இட்லிகளை வைத்தாள்.

மனைவியை வியப்பாய் பார்த்தார். இதுவரை ஒரு முறைக்கூட அவரோடு சேர்ந்து சாப்பிட்டதே இல்லை. அவர் சாப்பிட்ட பின்தான் சாப்பிடுவாள்.

இதைத்தான் நானும் கல்யாணம் ஆனதிலேர்ந்து சொல்லிக்கிட்டிருக்கேன். இப்பவாவது என்கூட சேர்ந்து சாப்பிடணும்னு தோணுச்சே... சாம்பாரை ஊத்து! எப்பவுமே சட்னிதானே செய்வே? இப்ப என்ன புதுசா சாம்பார்?"

"தோணுச்சு... அவ்வளோதான்! வேலைக்குப் போகப் போறீங்களா?"

"ஆமா... ஏன் கேக்கறே?"

"சும்மாதான்! இன்னைக்கு போகவேண்டாமேன்னுத் தோணுச்சு" என்றவளின் கண்கள் கலங்கியது. இட்லியை சாம்பாரில் அழுந்தத் தொட்டு வாயில் வைக்கப் போனாள்.

அவரும் வாயருகே கொண்டு போனவர் அதில் வித்தியாசமான நெடி தாக்க... அவள் கையிலிருந்ததை தட்டிவிட்டார்.

"போடு... கீழே போடு சொல்றேன்!"

"ஏ... என்னங்க?"

"இதிலே என்ன கலந்திருக்கே?"

"..........?!"

"சொல்லு இந்திரா!"

"மன்னிச்சிடுங்க... பூச்சிக்கொல்லி மருந்தும், தூக்க மாத்திரையும்!" என்றாள் கதறியபடி.

"ஏன் இந்திரா?"

"முடியலிங்க... நீங்க அழறதைப் பார்க்கறப்ப, இதுங்களைப் பெத்த வயித்தை பாளம்பாளமா கிழிச்சிக்கிட்டு சாகணும் போல இருந்துச்சுங்க. டி.வி.யில முதியோர் இல்லத்தைக் காட்டினாலே தாங்கிக்க முடியாது. அங்கேப் போய்... நாம..."

"..........?!"

"தினமும் செத்து வேதனையில் வாடறதை விட ஒரேயடியாப் போய்டலாம்னு தோணுச்சு!"

"அடிப்பாவி! அந்தளவு கையாலாகாதவனாப் போய்ட்டேனா நான்? நம்ம புள்ளைங்களுக்கு பொண்டாட்டி முக்கியம்னா, எனக்கு நீயும் முக்கியம் இல்லையா இந்திரா?"

"............?!"

"என்னை நம்பி கழுத்தை நீட்டினவ நீ! தற்கொலைப் பண்ணிக்கற அளவுக்கு நீ போய்ட்டினா... அது தப்பில்லையா? புள்ளைங்க பேசின விஷயம் உசுர் வரைக்கும் வலிச்சுது. இல்லேங்கலே!

இந்த உலகத்திலே மூணு வகையானவங்க மட்டும்தான் உண்மையப் பேசுவாங்க. முட்டாளுங்க, குழந்தைங்க, குடிகாரங்க. சுசீந்திரன் மூணாவது வகை இல்லையா? அதான் அவன் மனசில இருந்த உண்மை வெளியே வந்துடுச்சு.



...ங்க பார்த்துட்டு இருந்தா வலிதான மிஞ்சும். அவனுக்கு ஏதோ ஒரு வகையிலே வலியக் குடுத்துட்டோம். அவன் சைட்ல அது நியாயமாக் கூட இருக்கலாம். ஆனா, அதுக்காக நம்ம பிள்ளைங்க எடுத்த முடிவு ரொம்ப தப்பு. இனி நாம இங்கே இருக்க வேணாம் இந்திரா!"

"வேற..."

"போய்டலாம்! வேற ஊருக்குப் போய்டலாம்! இந்த வேலை எல்லா ஊர்லயும் கிடைக்கும். அந்த சம்பாத்தியத்தை வச்சு சந்தோஷமா குடும்பம் நடத்தலாம்."

"..........?!"

"கல்யாணமாகி ஒரு வருஷம் மட்டும்தான் உனக்காக நான், எனக்காக நீன்னு வாழ்ந்தோம். அதுக்கப்புறம் குழந்தை குட்டிங்கன்னு பெத்து வளர்த்து ஆளாக்கி அவங்களுக்காகவே வாழ்ந்தோம். இப்ப மறுபடி இந்த அந்திம காலத்தை நமக்காக வாழுவோம். நாம எங்கே போறோம்ங்கறதுக் கூட இவங்க யாருக்கும் தெரிய வேண்டாம். அதுதான் நாம இவங்களுக்கு தர்ற தண்டனை."

அந்த வார்த்தைகள் இந்திராவினுள் புது உத்வேகத்தையும், மகிழ்ச்சியையும் தர... தலையாட்டி ஆமோதித்தாள்.

"நான் இருக்கேன்டி உனக்கு! ஆனா, எமன் யாரை முதல்ல கூப்பிட்டுக்குவானோ, தெரியாது. ஆனா, நீ முதல்ல போய்ட்டா... நானும் கூடவே வந்துடுவேன். நான் போய்ட்டா... நீயும் வந்துடு... சாவுக் கூட நம்மை பிரிக்கக் கூடாது."

"இதுபோதும்ங்க எனக்கு... கிளம்புங்க போகலாம்." கணவரின் கையை இறுக பற்றிக் கொண்டாள்.

"இளமை புண்ணியமுமல்ல... முதுமை பாவமும் அல்ல. பெத்தவங்களை சுமையா நினைக்கிற புள்ளைங்க நமக்கும் தேவையில்லே. துணிமணிகளை எடுத்துக்க...!"

கிளம்பினர்.

* * *

இரண்டு வருடங்கள் ஓடின.

மதுரையில் ஒரு கிரானைட் குவாரியில சூப்பர்வைசராக நல்ல சம்பளத்தில் பணிபுரிந்துக் கொண்டிருந்தார் பொன்னீலன்.

ஒரு அறை கொண்ட சின்ன வீட்டில் குடியிருந்தனர். இந்திரா கணவருடன் நிம்மதியாய் காலத்தை ஓட்டினாள்.

ஆனாலும், அடிக்கடி பேரப்பிள்ளைகளின் நினைவலைகள் தொட்டுச் சென்று... கண்களை சரபபடுத்தவே செய்தது.

இன்னும் நான்கு நாட்களே இருந்தன தீபாவளிக்கு! அதிரசம், முறுக்கு, லட்டு என பலகாரங்கள் செய்வதில் மும்முரமாய் இருந்தாள் இந்திரா.

"பார்த்து... கடையில வாங்கிக்கலாம்னா கேக்கறதில்லே. உடம்பை கெடுத்துக்காதே!"

"கடையில சுத்தமான எண்ணெய்ல சமைக்க மாட்டாங்க. குழந்தைங்க உடம்பு கெட்டுடக் கூடாதில்லையா?"

சிரித்த பொன்னீலன் மனைவியின் நெற்றியில் பூத்திருந்த வியர்வையை டவலால் ஒற்றியெடுத்தார்.

* * *

ஊரெங்கும் டமடமவென பட்டாசு சத்தம்!

தீபாவளி பலகாரங்கள் அடங்கிய தூக்குகளை ஆட்டோவிலிருந்து இறக்கிக் கொண்டு அந்த முதியோர் இல்லத்தினுள் நுழைந்தனர்.

முதியோர்களும், குழந்தைகளும் இவர்களைப் பார்த்து சிநேகமுடன் அருகில் வந்தனர்.

நாள் கிழமை என்றால் அன்றையப் பொழுது இவர்களுடன் கழிப்பது மனதிற்கு பெரிய ஆறுதலை தருவதால்... அடிக்கடி வந்து விடுவார்கள்.

எல்லோருக்கும் பட்சணம் தரப்பட்டது. இந்திரா இரண்டு வயதுக் குழந்தையை தூக்கிக் கொஞ்சினாள்.

'நிஜந்தனின் குழந்தைக்கும் இரண்டு வயசுதான் இல்லையா? இந்த மரம் பாரம்னு பிள்ளைங்க வெட்டித் தள்றாங்க. இந்த இலை பாரம்னு எந்த மரம் நினைச்சது கண்ணே!' இதமாய் முத்தமிட்டாள்.

பிரியா வயதிலிருந்த ஒரு சிறுமியின தலையைத் தடவி இன்னொரு அதிரசம் கொடுத்தார் பொன்னீலன்.

"உன் பேரு பிரியாவாம்மா?"

"இல்லே தாத்தா... செல்வி!"

"பரவாயில்லே... நான் பிரியான்னே கூப்பிடவா?"

"ம்..." தலையாட்டினாள்.

பொன்னீலன் பெருமூச்செறிந்தார். அதில் கனமும் சேர்ந்திருந்தது.

இளமை நம்பிக்கையில் வாழ்கிறது. முதுமை பழைய நினைவில் வாழ்கிறது.

(முற்றும்)